
நெல்லைத் தமிழ்ப் புலவர்கள்



கழக வெளியீடு

கழக வெளியீடு: ௬௱௧

நெல்லைத் தமிழ்ப் புலவர்கள்

(முதற் புத்தகம்)

ஆக்கியோர்:
கணியர், டாக்டர்
இ. மு. சுப்பிரமணிய பிள்ளை,
சென்னை மாகாணத் தமிழ்ச்சங்க அமைச்சர்.

திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை-1.

First Edition : Nov., 1952.

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY :: MADRAS-1.

Head Office :

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.

பதிப்புரை

நம்தம் தமிழ்நாட்டிலே பல பெரிய புலவர்கள் அவ்வப்போது தோன்றிப் பல நூல்களை யாத்து நலம் பெருக்கி மறைந்தார்கள். அவர்களுடைய வரலாற்றைப் பேணி அறிந்து எழுதிப் போற்றவேண்டுவது நம்மவர் முதற்கடமை. இதனை எண்ணி முன்னரே சென்னைத் தமிழ்ப் புலவர்கள் என்ற வரிசையில் இருநூல்கள் கழக வழி வெளியிட்டுள்ளோம்.

இப்போது 'நெல்லைத் தமிழ்ப் புலவர்கள்' என்ற வரிசையில் நெல்லைமா வட்டத்திலே புகழ்சிறந்து விளங்கிய புலவர்களின் வரலாறுகளைச் சுருக்கமாக எழுதி வெளியிட முடிவுசெய்துள்ளோம். அவைகளை எழுதித் தருவதற்குச் சென்னை மாகாணத் தமிழ்ச்சங்க அமைச்சர் பெரும் புலவர், கணியர், டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் அன்புடன் இசைந்திருக்கின்றார்கள். அவைகளில் **திரு. பூரணலிங்கம் பிள்ளை, வீரர் சிதம்பரம் பிள்ளை** ஆகிய இரு பெரியார்களின் வரலாறுகளைக் கொண்டதாக இம் முதற்புத்தகம் வெளிவருகின்றது.

தமிழகம் இந்நூல் வரிசையினை விரும்பி வரவேற்றுப் பயன்பெறும் என நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை



பேராசிரியர்

திரு. மு. சி. பூரணலிங்கம் பிள்ளை அவர்கள், பி.ஏ., எல்.டி.,

தோற்றம் 24-5-1866. — மறைவு 16-6-1947.

நெல்லைத் தமிழ்ப்புலவர்கள்

மு. சு. பூரணலிங்கம் பிள்ளை

க. பிறப்பு

தண்பொருநைப் பேராறு கண்ணுதற் பெருங்கடவுளருடைய தண்ணருளேபோல நெல்லைமா நகரினை நோக்கி ஓடிவருகின்றது. நெல்லை என்பது நெல்வேலி; அதாவது நெல்லை வேலியாக உடையது என்றோ, அல்லது நெல்லுக்கு வேலி என்றோ விரிந்து இது பொருள்படும். நெல்லைமா நகரைச் சுற்றிலும் நெல்வயல்கள் வேலிபோல இன்றும் அமைந்து திகழும் இயல்பினாலே இந்நகருக்கு இப்பெயர் அமைந்ததுபோலும் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவ்வூர்ப் புராணத்திலே இப்பெயருக்கு வேறு காரணம் கூறப்பெறுகின்றது. "இந்த ஊரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்குப் பூசை செய்துவந்த பெரியார் ஒருவர் ஒரு நாள் பூசனைக்கு அமுதாக்கும்பொருட்டுக் கொஞ்சம் நெல்லை வெயிலிற் காயவைத்துத் தாம் முழுகிவரப் பேராற்றுக்குச் சென்றார்; அப்போது திடீரென்று பெருமழை பெய்யத் தொடங்கியது; அதுகண்டு பெரியார் நெஞ்சு துணுக்குற்று, "ஆண்டவனே! அடியேன் யாது செய்வேன்? நெல்லைப் பாதுகாத்தருளும்" என்று ஓல

மிட்டு வீட்டுக்கு ஓடோடியும் வந்தார்; வந்தவர் தலை வாயிலிலே நெல் நன்றாகக் காய்ந்து யாதொரு ஊறும் அடையாமல் இருப்பதைக் கண்டார்; நெல்லைச்சூழ மழைநீர் ஓடியிருக்கிறது; நெல்மேல் ஒருதுளி நீர்கூட விழாதபடி ஆண்டவனே வேலியாக நின்று காத்தது போல இருந்ததுகண்டு மகிழ்ந்த அப்பெரியார் "நெல் வேலி அப்பனே! உனது தண்ணருளை என்னென்று புகழ்வேன்!" என்று கொண்டாடினார். அதுமுதல் அப் பெருமான் நெல்வேலியப்பன், நெல்லையப்பன் என்று பெயர்பெற்றான்; அவ்வூரும் நெல்வேலி, திருநெல்வேலி, நெல்லை என்று பெயர்பெற்றது. இதுவே அவ்வர லாறு. நெல்லுக்கு வேலியிட்ட இத்திருவிளையாடல் இத்திருநகரிலே இன்றும் ஒரு திருவிழாவாக ஆண்டு தோறும் கொண்டாடப்பெறுகின்றது.

தண்பொருநைப் பேராறு நெல்லை நகரின் தென் கோடி எல்லையை அடைந்தவுடன் நேரே வடக்குநோக் கித் திரும்புகின்றது; அவ்விடத்தில் அதன் கிழக்குக் கரையிலே "முந்நீர்ப்பள்ளம்" என்ற சிற்றூர் வளம் பலவும்பெற்று விளங்குகின்றது. அது பாளையங்கோட் டைக்குத் தென்மேற்கே சேரன்மாதேவி வழியாக அம்பா சமுத்திரம் தென்காசி செல்லும் பெருவழியிலே நான்கா வது கல்லில் இருக்கிறது. அவ்வூரில் முதன்முதலாகக் குடியேறியவர் மல்லப்பன் செட்டியார் என்பவர். அவர் கோழைபடாத மேழிச்செல்வத்தின் ஓங்கி அதனைப் பெற்றதனாலாகிய பயனைத் துய்ப்பாராயினார். அவ் வூரிலே அவர் ஆதிபகவனாகிய சிவபெருமானுக்கு ஒரு கோவிலும், திருமாலுக்கு ஒரு கோவிலும் கட்டி அவை களிலே பூசனை முட்டில்லாமல் நடைபெற்று நின்று நிலவும்படி வேண்டும் நிலங்களும் கொடுத்து வழிபட்

டார்; ஆதி சைவர்கள் என்னப்படும் பட்டன்மார்களிற் பலரை அவ்விடத்திற் குடியேற்றினர். இங்ஙனமாய பல பேரறங்களை அங்கே அவர் செய்தமைத்த காரணத்தினலே அவ்வூர் அப்பெரியாரது பெயரால் “மல்லபுரம்” என்று வழங்கப்பெறுவதாயிற்று.

திருநெல்வேலிக்கு மேற்கேயுள்ள பழவூரின் அருகே தண்பொருநைப் பேராற்றின் குறுக்கே ஒரு பெரிய அணை கட்டப்பட்டிருக்கிறது; அதனல் அது பழவூர் அணை என்று பெயர்பெற்றது. தெற்கே அவ்வணையிலிருந்து ஒரு கால்வாய் புறப்படுகிறது. அது பாளையங்கோட்டைக்கு வருதலினலே “பாளையங்கால்” என்ற பெயரினை அடைந்தது. அது மல்லபுரத்திற்குச் சிறிது மேற்கேயுள்ள தருவை என்ற ஊரினைத் தாண்டியவுடன் ஒரு பெரிய மேட்டினைச் சேர்கிறது; அம்மேட்டில் மிக ஆழமாகத் தோண்டியே கால்வாய்க்கு வழி அமைக்கப்பெற்றது. அங்ஙனம் தோண்டிய பள்ளத்தினை ஒட்டி மல்லபுரம் இருத்தலினலே “முந்நீர்ப்பள்ளம்” என்ற பட்டப்பெயரைப் பெற்றது என்று அறிஞர் கூறுகின்றனர். முந்நீர் என்பது கடல்; கடலைப்போன்ற பெரும் பள்ளம் என்பது அதன் பொருள். நாளடைவில் மல்லபுரம் என்ற பெயர் வழங்குவது மாறி முந்நீர்ப்பள்ளம் என்ற பெயரே இன்று பெருவழக்காகிவிட்டது.

அவ்வூர்ச் சிவலிங்கப்பெருமானின் பெயர் பூரணலிங்கம் என்பது. இப்பெயர் பரிபூரணகிருபேசர் அதாவது நிரம்பிய அருளுடைய ஆண்டவன் என்றும் அழைக்கப்பெறுகிறது. அவ்வூரில் வாழும் மக்கள் தம் குழந்தைகளுக்குப் பூரணலிங்கம் என்ற பெயரை இடுவது இன்றும் வழக்கமாக இருந்துவருகிறது.

சென்ற பத்தொன்பதாவது நூற்றாண்டிலே பூரணலிங்கம் பிள்ளை என்ற சைவ வேளாளப் பெரியார் ஒருவர் அவ்வூரில் மிகவும் சிறப்பாக வாழ்ந்துவந்தார். அவருக்கு எல்லாச் செல்வங்களும் நிரம்பியிருந்தும் மக்கட்செல்வம் இல்லாதாயிற்று. அதனால் அவர் தமக்கு ஒன்றுவிட்ட தம்பியாகிய சிவசுப்பிரமணிய பிள்ளையைத் தமக்குத் தத்து மகனாக எடுத்து வளர்த்துவந்தார். சீவைகுண்டத்திற்குச் சிறிது மேற்கே "கால்வாய்" என்ற சிற்றூர் உள்ளது; அதிலே புகழ்பல படைத்த பொன்னப்பபிள்ளையின் அருமைத் திருமகளாகிய வள்ளியம்மையார் சிவசுப்பிரமணிய பிள்ளைக்கு வாழ்க்கைத் துணைவியாக வாய்த்தார். அத்தெய்வக்கற்பினர் திருமணி வயிற்றிலே, கால்வாய்நகரின்கண் கொல்லம் 1041-ம் ஆண்டு வைகாசித் திங்கள் பன்னிரண்டாம் நாள் (24-5-1866) மாலை ஏழரை மணிக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அது பூரணலிங்கம் என்று பெயரிடப்பெற்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்வதாயிற்று.

உ. படிப்பு

குழந்தை பூரணலிங்கத்துக்கு வயது ஐந்து வந்தது. பெற்றோர் களிபேருவகை எய்தியவராகித் தமது அருமைக் குழந்தையைப் பள்ளிக்கு வைத்துப் பார்த்தார்கள். பூரணலிங்கர் கண்ணுங் கருத்துமாகப் படிக்கத்தொடங்கினார். முந்நீர்ப்பள்ளத்தில் அப்போது செல்வப்பெருமாள் வாத்தியார் என்ற ஆசிரியர் திண்ணைப்பள்ளி ஒன்று வைத்து நடத்திவந்தார்; அவருக்கு வயது அறுபது; அவரே பூரணலிங்கருடைய தந்தைக்கும் ஆசிரியராக இருந்து படிக்கவைத்தவர். அவர் தமிழ்ப்பெரும் புலமையும் சிறந்த ஒழுக்கமும் படைத்தவர்; அன்பும்

அச்சமும் மாணவர் உள்ளத்தே ஒருங்கே தோன்றச் செய்யும் மேலான தோற்றம் பெற்றவர். அவரிடத்தே குடிகொண்டிருந்த ஒளிநூற் புலமையும் வைத்தியத் திறமையும் அவ்வூரிலும் சூழ இருக்கும் சிற்றூர்களிலும் அவருக்கு மிக்குயர்ந்த மதிப்பை விளைவித்தன. அவர் ஓலை ஏடுகளில் எழுத்தாணிகொண்டு மிக விரைவாக எழுதும் எழுத்துக்கள் அச்சுப்போலக் கண்ணைக்கவரும் தன்மையனவாக இருந்தன. அவரிடத்திலே மாணவ ராகிக் கல்வி பயின்றோர் பலரும் நல்ல ஒழுக்கமும் தக்க புலமையும் பெற்று முன்னுக்கு வந்தார்கள். நம் பூரண லிங்கனார் அவரிடம் 'வீடணன் பத்தி' முதலிய நூல் களைப் படித்து முன்னேறினார்.

இவருக்குப் பத்து வயது ஆயிற்று; அப்பொழுது இவரின் பெற்றோர் இவரை மேலைப்பாளையம் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பினார்கள். அங்கே ஆசிரியர் சுந்தரம் பிள்ளை என்பவர் இலக்கணம் கற்பித்தார்; அவருடைய மைத்துனர் முத்துசாமிப்பிள்ளை என்பார் திருக்குறளை மாணவர் மனத்தில் நன்றாகப் பதியும்படி சொல்லிவைத் தார். ஓராண்டு அந்த ஆசிரியர்களிடம் பாடங்கேட்டுத் தேர்ந்த பூரணலிங்கர் அடுத்த ஆண்டில் தருவைக்குச் சென்று அங்கிருந்த பள்ளிக்கூடத்திலே சேர்ந்து ஆங் கிலம் பயிலத் தொடங்கினார். அங்கே இவருக்கு ஆசிரி யராக இருந்தவர் செல்லப்பிள்ளை என்ற குற்றாலம் பிள்ளையாவர்.

தம் அருமை மகனை மேற்படிப்புப் படிக்கவைக்க வேண்டும் என்று அவா மிகக்கொண்ட இவரின் பெற் றோர் இவரைத் திருநெல்வேலியின் ஒரு பகுதியாகிய சிந்துபூந் துறைக்கு அனுப்பினார்கள். இன்று இந்துக்

கல்லூரி எனப் பேரும் புகழும்பெற்று விளங்கும் ஆங்கிலத் தமிழ்ப்பள்ளியிலே இரண்டாவது வகுப்பிற் சேர்ந்து இவர் படிக்கத் தொடங்கினர். அப்போது இவருக்கு வயது பன்னிரண்டு. அக்காலம் கிருஷ்ணப் பிள்ளை பி. ஏ., நவநீத கிருஷ்ணப் பிள்ளை பி. ஏ., முதலிய புகழ்மிக்க பெரியார் அப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக இருந்தார்கள். அவர்களைத் துணையாகக் கொண்டு சாமி ஐயர் பி. ஏ., என்பவர் தலைமையாசிரியராகி அப் பள்ளிக்கூடத்தைச் சிறப்பாக நடத்திவந்தார்.

இரண்டாவது வகுப்பில் இவரே சட்டம்பிள்ளையாக இருந்தார். பிற்காலத்தில் பெரும்புலவராகி இந்துக் கல்லூரியின் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்தி ஒப்பற்றவர் என்று எல்லாராலும் பாராட்டப்பெற்ற சிவராம பிள்ளை என்பார் அவ் வகுப்பில் இவரோடுகூடப் படித்து வந்தார். பூரணலிங்கர் மிகவும் விரைவாகவும் அழகாகவும் எழுதுவதில் முதன்மை பெற்றவர். அதனால் இவர் மூன்றாவது வகுப்புப் படித்துக்கொண்டிருந்தபோது இவருக்குக் கையெழுத்துப் போட்டியில் முதற்பரிசு கிடைத்தது. அன்று மாவட்டக் கலெக்டராக இருந்த பென்னிங்டன் என்பவரே பரிசளிப்பு விழாவிற்குத் தலைமை தாங்கிப் பரிசுகளை வழங்கினர். பின்னர் பூரணலிங்கனர் கீழ்நான்காவது வகுப்பிலும் மேல் நான்காவது வகுப்பிலும் படித்துத் தமது பதினைந்தாவது வயதில் நடுப்பள்ளித் தேர்வில் வெற்றிபெற்றார். அடுத்த ஆண்டில் ஐந்தாவது வகுப்புப் படித்து, அவ்வாண்டிலேயே இரட்டைத் தேர்வு பெற்று அடுத்ததாகிய மெட்ரிகுலேசன் தேர்விலும் வெற்றி பெற்றார். அக்காலத்தில் அந்த உயர்பள்ளியில் தமிழாசிரியராக இருந்தவர் சொக்கலிங்கம் பிள்ளை என்ற பெரியார். அவரிடத்திலே இவர் நல்

வழி, நன்னெறி முதலிய நூல்களைப் பயின்று தமிழ்ப் பற்று நன்கு பதியப்பெற்றார்.

சாமி ஐயருக்குப்பின் உயர்பள்ளித் தலைமையாசிரிய ராகப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை இருந்தார் ; 'மனோன் மணீயம்' என்ற ஒப்புயர்வற்ற நாடக நூலுக்கு ஆசிரியர் அவரே. அவருடைய முயற்சியினாலேதான் அந்த உயர் பள்ளி கல்லூரியாக உயர்ந்தது ; ஆனால் அவர் திருவனந் தைக் கல்லூரிக்குப் பேராசிரியராகச் சென்றுவிட்டார் ; அதனால் இக் கல்லூரியின் முதல் தலைவராகச் செப்பர்டு என்பவர் வந்துசேர்ந்தார். மெட்ரிகுலேசன், நடுப்பள்ளி வகுப்புக்களுக்கு ஆங்கிலப் பாடப் புத்தகங்கள் அவர் எழுதினார். அவருக்கு நம் பூரணலிங்கர் உடனிருந்து படியெழுதித் தந்து உதவிவந்தார். இவருடைய கை யெழுத்து அப் பேராசிரியர் செப்பர்டின் கையெழுத் தினைப் போன்று அழகாக விளங்கியது. அதுகண்ட செப்பர்டு பிற்காலத்தில் இவர் சிறந்த ஆசிரியராகவும் நூலாசிரியராகவும் ஆகிப் பெரும்புகழ் பெறுமாறு இவரை மனமார வாழ்த்தினார்.

எதிர்பாராத சில வழக்குகளினாலே பூரணலிங்க ரது குடும்பத்தின் செல்வநிலை குறைந்தது. அதனாலே மேலே தொடர்ந்து படிக்க முடியாமல் இவர் பரமக் குடிக்குப் போய்ப் பொருள் நீதிமன்றத் (Munsif's Court) தில் எழுத்தாளராகப் பணியாற்றத் தொடங்கினார். அப்போது இவருக்கு வயது பதினாறுதான். இவர் அவ்வேலையில் மூன்று மாதங்களே இருந்தார். அக் காலத்தில் திருநெல்வேலியில் இந்துக் கல்லூரியின் தலைவராக இருந்த 'விங்கிளேர்' என்ற பேராசிரியர் இவ ரிடம் கொண்டிருந்த பேரன்பு காரணமாக இவரைக்

கல்லூரியிற் சேர்ந்து படிக்கும்படி வற்புறுத்தி அழைத்தார். பி. ஏ. முடிய இவரைக் கட்டாயம் படிக்கவைத்தல் வேண்டுமென்று இவருடைய தாய்மாமனார் திட்டமாகக் கூறியபடியால் இவரின் தாயார் இவரை மேற்படிப்புப் படிக்க வைக்கவேண்டும் என்று இவருக்குப் பெருந் துணையாக இருந்தார். ஆதலினாலே பூரணலிங்கனார் பரமக்குடியைவிட்டு நெல்லை வந்து இந்துக் கல்லூரியிலே சேர்ந்தார்.

கல்லூரி நூல் நிலையத்திலிருந்து பல அரிய சுவடிகளை விங்கிளேர் இவருக்கு எடுத்துத்தந்து படிக்கச் செய்து பேருதவி புரிந்தார். அப்போது கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர் பெரும்புலவர் சபாபதிப் பிள்ளை என்பார்; அவர் சில நாட்களில் வகுப்பிற்குரிய பாடங்களைக் கற்பித்து முடித்துவிட்டு, எஞ்சிய காலத்திலே பெருங் கவிகள் வரலாறுகளையும் பொது அறிவுப் பொருள்களையும் எடுத்தியம்பி மாணவர்களை மகிழ்வித்து அவர்களுடைய அறிவினை வளர்த்துவந்தார்.

ஆசிரியரனைவரும் பாராட்டுமாறு இவர் தமது பாடங்களை நன்றாகப் படித்துவந்தார். தேர்வுக்குச் சில நாட்களின்முன் இவருக்கு வயிற்றுப்போக்கு வந்து மிகவும் தொல்லை தந்தது; அதில் இவர் பிழைத்தது மறுபிழைப்பே. அதனால் இவர் தமது உடம்பைத் தேற்றுவதற்காகச் சிலகாலம் தென்காசியிலும் குற்றாலத்திலும் சென்று தங்கியிருந்தார்; அக்காலம் இவருக்கு இவருடைய நண்பர் சண்முகநயினார் பிள்ளை உதவி செய்தார். தேர்வுநாளும் வந்தது; இவர் எல்லா வினாத்தாள்களுக்கும் தக்கபடி விடை யெழுதினார். ஆனால் யாரோ ஒருவர் செய்த சூழ்ச்சியினாலே இவருடைய கணக்கு

விடைத்தாள் தேர்வாளருக்கு அனுப்பப் பெருமல் மறைத்து அழிக்கப்பட்டது; அதனுல் இவர் அவ்வாண்டில் தேர்ச்சியுருது தவறினுர்; அடுத்த ஆண்டில் இவர் எப். ஏ. தேர்வில் வெற்றிபெற்ருர்.

இவருக்கு வயது இருபது நடந்துகொண்டிருந்தது. அப்போது பிப்ரவரிமாதம் வழக்கம்போல, 'மில்லர் ஆங்கிலப் பரிசுத்தேர்வு' நடைபெற்றது. இந்துக் கல்லூரித் தலைவர் விங்கிளேர் இவரை அழைத்து அத்தேர்வுப் போட்டியிற் கலந்துகொள்ளச் செய்தார்; அதில் இவர் முதல்வராகத் தேறியமையினுலே அப்பரிசு இவருக்குக் கிடைத்தது. அதனுல் இவர் சென்னை சென்று பி. ஏ. படிப்பது எளிதாயிற்று. இதற்கிடையில் இவர் களாக்காட்டில் அஞ்சலாளராக இருபது நாட்கள் வேலை பார்த்தார். மார்ச்சு மாதத்திலே நல்ல நாளொன்று பார்த்து மேற்படிப்புக்காக இவர் சென்னைக்குப் பயணமானுர்; மறுநாட் காலை ஏழரை மணிக்கு இவர் சென்னையினைச் சென்றடைந்தார்.

சென்னைக் கிருத்தவக் கல்லூரித் தலைவராக இருந்த பெரியார் டாக்டர் மில்லர் என்பவர்; ஒப்பற்ற புலமையும் பெருங் குணமும் பேரன்பும் உடையவர். விங்கிளேர் தந்த நற்சான்றுகளுடன் பூரணலிங்கனுர் கல்லூரிக்குச் சென்று டாக்டர் மில்லர்முன் பணிந்து நின்ருர். இவரை எதிர்பார்த்துக்கொண்டிருந்த அப் பெருந்தகையாளர் அகமும் முகமும் மலர்ந்து இவரைத் தாமே நேரில் அழைத்துச் சென்று பி. ஏ. முதல்வகுப்பிற் சேர்த்துதவினுர். அவரே இவர் வகுப்பிற்குச் சேக்சுபியர் நாடகங்களைக் கற்பித்து வந்தார். பாடத்தைப்பற்றிய முதன்மையான குறிப்புக்களைக் கொடுத்தலும் அவை

களை மாணவர் கவனத்துடன் பிழையில்லாமல் எழுதும்படி செய்தலுமே அவர் தமது முதன்மையான கடமையாகக் கொண்டிருந்தார். அவர் தமது மாணவரைத் தமது மக்களைப்போல அன்பு பாராட்டி அவர்களுடன் அளவளாவி வந்தபடியால் அவர்கள் அனைவரும் அவரைத் தமது தந்தையைப்போலவே பாவித்து மரியாதையுடன் நடந்துவந்தார்கள்.

தமிழ்ப் பேராசிரியர் சின்னச்சாமிப் பிள்ளை என்ற பெரும்புலவர்; மாணவருக்கு அவருடைய வகுப்பு அளவிலாப் பற்றினை அளித்தது. பொருள் பொதிந்த சிறந்த கருத்துக்களை அவர் அடிக்கடி வேடிக்கையாக மொழிந்து மாணவர் நெஞ்சினை அள்ளினார். அவரிடத்திலே நமது பூரணலிங்கனார் இராமாயணத்தின் கிட்கிந்தா காண்டத்தைக் கற்று வல்லவரானார். ஒருநாள் இவர் தம் நண்பர்கள் சிலருடன் கடற்கரையிலே இருந்து பேசிக்கொண்டிருந்தார். அப்போது அண்மையில் நடைபெறவிருந்த கிருத்தவ வேதநூல் தேர்வினைப்பற்றி அவர்கள் ஆராய்ந்தனர்; மாணவர் ஒருவர் "அத்தேர்வில் வெற்றிபெறுதல் கிருத்தவ மாணவருக்கே அரிது" என்று கூறினார். அதனைக்கேட்ட பூரணலிங்கனார் கிளர்ந்தெழுந்து பந்தயம் பேசி அத்தேர்விற் கலந்து முதல்வராகத் தேறி வெற்றிபெற்றார்.

சென்னையில் இவருடன் ஒருசாலை மாணவராக இருந்தவர்கள் திருநெல்வேலிக் காந்திமதிநாத பிள்ளை, இராசவல்லிபுரம் சுப்பிரமணியபிள்ளை, பெருங்குளம் உத்தண்டராமபிள்ளை முதலியவராவர். இவருள் எம். எல். பிள்ளை என்று தமிழ்நாடெங்கும் பெரும்புகழ் பெற்ற கா. சுப்பிரமணிய பிள்ளையின் தந்தையாரே காந்திமதிநாதபிள்ளை. அவர் சிறந்த படிப்பாளி; உண்மையான

கடவுட்பற்றும் உடையவர்; திருநெல்வேலியில் முதன் முதலாகப் பி. ஏ. தேறிய வேளாளர் ஆனதால் அவர் பி. ஏ. காந்திமதிநாத பிள்ளை என்று அழைக்கப் பெற்றார். இராசவல்லிபுரம் சுப்பிரமணிய பிள்ளையோ பத்திரப் பதிவாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றி விடுதிபெற்ற பெரியார்; அவர் சைவசமய நூலாராய்ச்சி யும் சிவபூசனையும் கொண்ட சைவசித்தாந்தி.

பி. ஏ.-த் தேர்வினில் இரண்டாம் வகுப்பில் தேர்ந்து பூரணலிங்கனார் வெற்றிபெற்றார். பின் இவர் ஓர் உயர்நிலைப் பள்ளியில் நாளொன்றுக்கு ஒரு மணி நேரம் ஆங்கிலம் கற்பித்து அதனின்றும் கிடைத்த ஊதியத்தினைக்கொண்டு எம்.ஏ.-த் தேர்விற்குப் படிக்கத் தொடங்கினார். ஆனால் 1888 சூன் மாதம் தமது தங்கை யின் திருமணச் செய்தியைத் தந்தி வாயிலாக அறிந்து உடனே புறப்பட்டு இவர் திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்தார். கொக்குறைகுளத்தில் தமிழாசிரியர் சபாபதிப் பிள்ளை வீட்டினில் வைத்து இவரின் தங்கை திருமணம் நடைபெற்றது; திருவனந்தபுரம் சுப்பிரமணிய பிள்ளை என்பவரே மணமகன்.

ந. உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்

நெல்லை மாவட்டக் கலெக்டராகத் தாம்சன் என்ற ஆங்கிலேயர் ஆட்சி செய்துவந்தார். அவரைப் பூரண லிங்கம்பிள்ளை சென்று கண்டு தமக்கு ஏதாவது ஒரு வேலை தந்துதவும்படி வேண்டிக்கொண்டார். தாம்சன் இவரிடத்தில் மிகவும் அன்புபாராட்டி இவருக்கு உதவிக் கலெக்டரின் வேலை நிலையத்தில் எழுத்தாளராகப் பணி புரியும்படி ஆணை தந்தார். இவர் நன்றிகூறி அவ்வலு வலில் அமர்ந்து சில திங்கள் வேலை பார்த்தார்.

பாளையங் கோட்டையில் ஓர் இந்து உயர்நிலைப் பள்ளி இருந்தது. அதற்குத் தகுந்த தலைமையாசிரியர் இல்லாமையினாலே அது நிலைகலங்கி நின்றது. அப் பள்ளிக்கூட ஆட்சியாளர் இவரை அணுகி அதன் தலைமையை ஏற்று நடத்தும்படி வேண்டிக்கொண்டார். இவரும் அவர்களுடைய வேண்டுதலுக்கு இசைந்து அப்பள்ளியின் தலைமையாசிரியராக அமர்ந்தார். அப்போது அப் பள்ளிக்கூடம் பலவிதமான இடையூறுகளுக்கு இடையே தத்தளித்துக் கொண்டிருந்தது. சேவியர் உயர்நிலைப் பள்ளியின் போட்டி ஒருபுறம், இப் பள்ளியின் பொருள்நிலைக் குறைவு ஒருபுறம், பள்ளியில் ஒழுங்கு நிலைபெருமை மற்றொரு புறமாக இவருக்குத் தொல்லைகள் கொடுத்தன. எத்தனை எத்தனை துன்பங்கள் சூழ்ந்து வாட்டினாலும் சிறிதும் தளராத உறுதி உடையவராகிய இவர் மிக்க ஊக்கத்துடன் அரும்பாடு பட்டுத் தமது பள்ளிக்கூடத்தை ஓராண்டுக்குள் நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டார்.

பிக்கிள் என்பவர் சென்னை மாகாணத்தின் தென் பகுதிக் கல்வி மேற்பார்வைத் தலைவராக இருந்தார். அவர் ஒருநாள் திடீரென்று யாரும் எதிர்பாரா நிலையில் அப் பள்ளிக்கூடத்திற்கு வந்து பார்வையிட்டார். எல்லா விதமான ஒழுங்கும் அமைந்து அக்கல்வி நிலையம் திகழ்வதை அவர் நேரிற்கண்டு மகிழ்ந்து தலைமையாசிரியராகிய இவரைப் பாராட்டிப் புகழ்ந்தார்; ஆசிரியப்பயிற்சி நற்சான்று பெற்றோரே அப்பணியில் நிலைத்து நிற்க முடியும்; ஆதலின் ஆசிரியப் பயிற்சித் தேர்விலே வெற்றி பெறும்படி அவர் இவரைத் தூண்டினார்; இவர் அடுத்து வந்த தேர்விற் கலந்து வினாக்களுக்கெல்லாம் ஏற்ற விடைதந்து முதல்வராகத் தேறினார்.

அந்தப் பள்ளிக்கூடத்தின் தலைவராக இவர் இரண்டாண்டுகள் ஆட்சி நடத்தினர். ஆனால் ஆட்சிக் கழகத்தினருடைய ஊக்கக் குறைவினால் பள்ளியின் பொருள் நிலை நாளுக்கு நாள் தளர்ந்தே வந்தது; இவர் எவ்வளவு தூரம் முயன்றும் அதனைச் சரிப்படுத்த முடியவில்லை; ஆதலின் இவர் தமது தலைமைப் பதவியைவிட்டு விட்டு அப் பள்ளிக்கூடத்திலிருந்து விலகினர்.

இவருடைய பெற்றோர்கள் இவருக்குத் திருமணம் செய்துவைக்க எண்ணிப் பெண் பேசலாயினர். படிப்பில்லாத காரணத்தால் சில பெண்களும், அழகில்லாமையினாலே சில பெண்களும், நல்ல சிவப்பு நிறமில்லாததனாலே வேறுசில பெண்களும், போதிய நகையின்மையினாலே மற்றும் சில பெண்களும் தவிர்க்கப்பட்டார்கள். கடைசியாகத் தாயம்மாள் என்ற பெண்ணைப் பேசி உறுதிசெய்து அவர்கள் இவருக்குத் திருமணம் செய்துவைத்தார்கள். இவர் மகிழ்வுடன் இல்லற வாழ்க்கையை மேற்கொண்டார்.

பாளையங்கோட்டையில் இவர் இருந்தபோது திருமலைக்கொழுந்துப் பிள்ளை என்ற ஆசிரியர் இவருக்கு உற்ற நண்பராக இருந்தார். அவர் ஈரோட்டுக்குச் சென்று அவ்வூர் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக அமர்ந்தார். மேலும் அவர் அப்பள்ளிக்கூடத்தின் தலைமையாசிரியராகப் பூரணலிங்கம் பிள்ளையை அமர்த்தும்படி அப் பள்ளி ஆட்சிக் குழுவினரிடம் தெரிவித்தார். அவர்களும் உடனே இவருக்கு அமர்த்தாணை அனுப்பினர்கள். உடனே இவர் ஈரோட்டுக்கு விரைந்துசென்று அத் தலைமைப்பதவியை ஏற்றுக்கொண்டார்; இரவும் பகலும் இடைவிடாது உழைத்துப் பலவகைகளிலும் அப் பள்ளியை முன்னேறச் செய்தார். இப்போது அப்பள்ளி

"மகாசன உயர்நிலைப்பள்ளி" என்ற பெயரோடு விளங்குகின்றது. அப்பள்ளியில் இவர் தலைமை நடத்தியது மூன்று திங்களே. அவ்வேளை திருநெல்வேலி மாவட்டக் கலெக்டராக இருந்த நிக்கல்சன் என்பவர் இவரை எட்டையபுரம் அரண்மனை ஆசிரியராகப் பணிபுரியுமாறு தக்க சம்பளத்துடன் இவருக்கு ஆணை அனுப்பினார்.

௪. எட்டையபுரத்தில்

எட்டையபுரம் என்பது ஒரு பெரிய குறுநில மன்னருடைய அரசிருக்கை. பண்டைக்காலத்தில் புகழ் பெற்ற ஒரு வீரனோடு எதிர்த்துச் சண்டை செய்து அவனைக் கீழே சாய்த்துவிட்டார் ஒரு வீரர். தோற்ற வீரன் தனது எட்டு மக்களையும் இவரது காலடியில் அடைக்கலமாகத் தந்து பாதுகாத்துதவ வேண்டினனாக, அவர் அந்த எண்மரையும் தமது மக்கள் போல ஏற்றுக் கொண்டு ஆதரித்து வருவாராயினர். அக்காரணத்தால் அவர் எட்டையன் அதாவது எட்டுப் பேருக்குத் தந்தை (ஐயன்) என்ற சிறப்புப் பெயரினைப் பெற்றார். கம்பளத்து நாயக்கர் வகுப்பினைச்சேர்ந்தவர் அவர். சோழ நாட்டிலிருந்து பாண்டி நாட்டிற்கு வந்து, திருச்சிராப்பள்ளி நாயக்க மன்னரது காவலராகி அவர் எட்டையபுரத்தின் மேற்கே இரண்டு மைல் தூரத்திலுள்ள இளம்பூவனம் என்ற சிற்றூரில் தங்குவாராயினர். சில காலத்தின் பின்னர் எட்டையன் இளம்பூவனத்தின் கிழக்கே தமக்கென ஒரு கோட்டையை அமைத்துக் கொண்டார். அது நாளடைவில் வளர்ந்து ஒரு பேரூராயிற்று. எட்டையன் அமைத்த புரம் ஆதலால் அது எட்டையபுரம் என்ற பெயரினைப் பெற்றது. அதற்கும் இளம்பூவனத்திற்கும் நடுவே ஒரு பட்டி தோன்றி

வணிக நகராகி நடுவிற் பட்டி என்ற பெயருடன் விளங்குவதாயிற்று.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் இருந்த மன்னர் இறந்தனராக அவருடைய ஒரு மகன் இளைஞராக இருந்ததனாலே, அக்குறுநில ஆட்சியினை ஆங்கில அரசினர் தமது பாதுகாவலில் மேற்கொண்டனர். ஆதலால் அப்பொழுது நெல்லைமாவட்டக் கலெக்டர் நமது பூரணலிங்கனாரை அவ்விளவரசருக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியராக அமைக்கும் கடமையுடையராயினர்.

பூரணலிங்கனார் எட்டையபுரம் சென்றபோது அவருடைய நெருங்கிய உறவினர் அனவரதம் பிள்ளை அங்கே தாசில்தாராக இருப்பதனைக் கண்டு மகிழ்ச்சி மிக்கனர். அரண்மனையில் இளவரசரும், அவருடைய சிறிய தந்தையாரும் இவரை மிக்க அன்புடனும் மரியாதையுடனும் வரவேற்றனர்.

பெரிய பணக்காரர் வீட்டிலே அதிலும் ஒரு குறுநில மன்னரின் அரண்மனையினிற் சென்று குழந்தைகளுக்குப் பாடம் கற்பிப்பது மிகுந்த தொல்லை விளைவிக்கும் செயலாகும். ஏனெனில் அங்குள்ள குழந்தைகள் பெரும்பாலும் செல்லப்பிள்ளைகளாக வளர்ந்து ஒழுங்கிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அடங்காதவர்களாக இருப்பார்கள். ஆசிரியர் பூரணலிங்கனாரோ கட்டுப்பாட்டினையும், தன்மானத்தினையும் உயிரினும் பெரிதாக எண்ணும் கருத்துடையவர். ஒருநாள் தாம் பார்த்து எழுதும்படி ஆணையிட்டவாறு இளவரசர் செய்யத் தவறியதினால், இவர் அவரைப் பிரம்பினால் அடித்துக் கண்டித்து விட்டார். அரண்மனையிலேயுள்ள வேலைக்காரர்கள்

இதனைப் பெரிய பிழையாக அரசியாரிடத்திலே தெரிவித்தார்கள். சிறந்த தமிழ்ப்புலமை பெற்றிருந்த அவ் வம்மையார் அவர்களைக் கண்டித்து ஒதுக்கி ஆசிரியர் செய்த கடமையினைப் பாராட்டிப் புகழ்ந்தார். அதன்பின் இளவரசர் எதிலும் தவறியதே இல்லை; படிக்க வேண்டிய காலத்தில் ஒரு நொடியும் தாழாது வருவதும், திருந்திய ஒப்பற்ற ஒழுக்கத்துடன் நடப்பது மான நாகரிகத்தில் தலைமை சான்றவராகி ஆசிரியரைத் தெய்வமே என மதித்து ஒழுகுவாராயினர்.

சென்னையில் குறுநில மன்னர்களின் மக்களுடைய பயிற்சிக்காக அரசினரால் ஒரு கல்லூரி தொடங்கப் பெற்றது. ஆதலால் இவர் அரண்மனையில் ஆசிரியப் பணியினை விட்டு விலக நேர்ந்தது. ஆனால் இளவரச ருடைய தாயாருக்குத் தம்முடைய ஒரு மகனை மிக்க தொலைவில் உள்ள சென்னைக்கு அனுப்ப மனமில்லை. அதற்காக இளவரசர் மிக்க மெலிவுடன் இருத்தலினாலே அப்போது சென்னைக்கு அனுப்புவது இயலாதென்று அரசியார் சென்னை அரசாங்கத்தினருக்கு விண்ணப்பித் துக் கொண்டார். அரசினர் ஆணையினாலே நெல்லை மாவட்ட மருத்துவத் தலைவர் எட்டையபுரத்திற்கு இளவரசரைச் சோதிக்க வந்தார். அவர் வருகையினை முன்னரே அறிந்து அதற்கு முதல்நாளே இளவரசர் பேதி மருந்து அருந்தியிருந்தார்; அதனால் தளர்வுற் றிருந்த அவர் உடல்நிலையினை மருத்துவர் கண்டு இயற்கையாகவே தளர்வுற்றிருப்பதாக நம்பி அரசின ருக்குத் தெரிவித்தார். அதனால் இளவரசர் சென்னைக் குச் செல்வது ஆறுமாதங்களுக்கு ஒத்திவைக்கப் பட்டது. அதனால் நம் ஆசிரியரது வேலைக்காலமும் சிலமாதங்கள் வளர்வதாயிற்று.

எட்டையபுரம் பணி நிறைவுபெற்றதும் இவர் தம் தங்கை சிறப்புடனிருந்த திருவனந்தைக்குச் சென்று சிலகாலம் தங்கினார். அங்கே பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, வலியமேலெழுத்து திரவியம் பிள்ளை, அவருடைய மக்கள் இருவர், சூரன்குடியிலிருந்து வந்து உண்டியற்கடை நடாத்திய கணபதியப்ப பிள்ளை முதலிய பெரியார்களுடன் இவர் நெருங்கிப் பழகிப் பெருமையுடன் வாழ்ந்து வந்தார். திரவியம் பிள்ளையின் மூத்த மகனார் மாவட்ட நீதிபதி முத்துக்குமாரசாமிப் பிள்ளை என்பவர்; இளைய மகனார் இசைத்தமிழ் வேந்தர் இலக்குமணப் பிள்ளை என்பார்.

ரு. சென்னையில்

(1894—1899)

இவர் பிழைப்பின்பொருட்டுச் சென்னைக்குச் சென்று வீரப்பபிள்ளை தெருவில் குடியேறினார். அப்போது சென்னையில் நெல்லை ஈசுவரமூர்த்திப் பிள்ளை, புளியங்குடி ஆண்டியப்ப பிள்ளை, கடையம் கற்பகவிநாயகம் பிள்ளை ஆகிய இவர்கள் பி. ஏ. வகுப்பிற் கற்று வந்தனர். இவர் சென்னை வந்தமை அறிந்த டாக்டர் மில்லர் இவருக்குத் தமது கல்லூரியிலும் உயர்பள்ளியிலும் ஆசிரியப்பணி தந்து ஆதரித்தார். அப்போது அங்கிருந்த நெல்லை மாணவர்கள் இவரையும், கூப்பர் என்ற பேராசிரியரையும், டாக்டர் மில்லரையும் தம்முடன் வைத்து ஒரு புகைப்படம் பிடித்துப் பாராட்டினார்கள்.

தாம்சன் கம்பெனிக்கு உரிமையாளராக இருந்த கந்தசாமி முதலியார் இவருக்கு நெருங்கிய நண்பராகிப்

பலவகையானும் பொருளுதவிப் போற்றினர். ஒருநாள் திடீரென்று கம்பெனிக் கட்டிடம் தீக்கிரையாயிற்று; அதனால் இருபதாயிரம் ரூபாய் வரை சேதமேற்பட்டது. வானமே தலைமீது இடிந்து விழுந்தாலும் சலிக்காத உள்ளமுடையவராகிய நம் பூரணலிங்கனார் முதலியாரைத் தளர்ந்துவிடாதபடி தேற்றி, ஒருநாளைப் போதிலேயே வேண்டிய அச்சுக்களை வாங்கி, சென்னை நகர ஆட்சிக் கழகத்தினர் கொடுத்திருந்த தொண்ணூறு பக்கங்கள்கொண்ட அறிக்கையினை அன்றே அச்சுக் கோத்துப் பார்வைப் படியினை ஆட்சித் தலைவரிடம் தரும்படி செய்தனர். அதுகண்டு வியப்புற்ற கர்னல் மூர் என்ற அத்தலைவர் முதலியாருக்கு மிக்க ஆதரவளித்தார். அதனால் மாகாண நாட்டாண்மை, நகரஆட்சிக் கழகங்களின் அச்சுப் பணிகளெல்லாம் முதலியாரிடமே வந்து குவிந்தன; மிக்க செல்வம் பெற்றார் முதலியார். பெரிய கட்டிடங்களையும் நிலச் சொத்துக்களையும் அடைந்து பெருஞ் செல்வராகக் கந்தசாமி முதலியார் ஆயினர்.

நம் பூரணலிங்கனார் நான்கு ஆண்டுகள் டாக்டர் மில்லருடைய கல்லூரியிலே பணியாற்றினர். அதற்குள் பி. எல். சட்ட வகுப்பிற்குரிய பாடங்களை நன்கு கற்றுச் சட்டக் கலையிலே தெளிந்த புலமை பெற்றார். ஆனால் இவர் தேர்வு மட்டும் எழுதவில்லை. இவரது சட்ட நூற் புலமையின் பயனாகப் பல அரிய நூல்கள் இவரால் எழுதி வெளியிடப்பெற்றன.

இவர் கிருத்தவ உயர்பள்ளியில் ஆசிரியராக இருந்த காலை ஒரு மாசி மாதத்தில் மாமக விழா வந்தது. இவ் விழா கும்பகோணத்திலே மிகச் சிறப்பாக நடைபெறும்.

பல்லாயிரக் கணக்கில் பற்பல இடங்களிலிருந்து மக்கள் வந்து அவ்வூரிலே குழுமுவர். இயல்பாக உள்ள சனி ஞாயிற்றுக்கிழமை விடுமுறையும் வாய்த்தது. அதனுல் நம் பூரணலிங்கனுர் கும்பகோணம் சென்று, அவ்வூரில் சிறப்பு உதவிக் கலெக்டராக இருந்த தி. நெ. சிவஞானம் பிள்ளையின் வீட்டிலே தங்கி, மாமகக் குளத்திலும் காவிரியாற்றிலும் முழுகி இன்புற்றிருந்தார். திங்கட்கிழமை காலையில் இவர் பணியாற்றுதற்குச் சென்னையில் இருந்தாகவேண்டும். எவ்வளவோ முயன்றும் ஞாயிற்றுக்கிழமை இரவு இரயிலில் இவருக்கு இடம் கிடைக்கவில்லை. அதனுல் திங்கட்கிழமைக்கு விடுமுறை கேட்டு உயர்பள்ளித் தலைவருக்கு இவர் தந்தியனுப்பினுர். மறுநாள் இவர் சென்னை வந்து சேர்ந்தார். பள்ளித் தலைவர் இவரை நோக்கித் "தாங்கள் பள்ளிக்கூடத்திற்குச் செய்யவேண்டிய கடமை முதன்மையானதல்லவா?" என்று வினவினுர். அதற்கு ஆசிரியர் "உண்மைதான்; உடற்பாதுகாப்பிற்குரிய பள்ளிக் கடமையினும் உயிர்ப் பாதுகாப்பிற்குரிய சமயக்கடமை பெரிதன்றோ?" என மறுமொழி பகர்ந்தார். அதனைக்கேட்ட பள்ளித் தலைவர் இரசல் என்பவர் மகிழ்ந்து அன்றுமுதல் இவருக்கு மிக நெருங்கிய நண்பராயினுர்.

ஒரு சமயம் இவர் விடாத காய்ச்சலால் மிகவும் துன்புற்றிருந்தார். அவ் வேளை இவருடைய நண்பர் சாமிநாத ஐயர் என்பவர் இவரைக் காண வந்தார்; அவர் ஓர் ஆங்கிலத் தமிழகராதிக்கு ஆசிரியர். அவருடன் அவருடைய தந்தையாராகிய அனந்தராம ஐயரும் இவரைப் பார்க்க வந்தார். இவரின் துன்பநிலை கண்டு தம்மிட மிருந்த சித்த மருந்தொன்றை அனந்தராமையர்

இவருக்குக் கொடுத்தனராகக் காய்ச்சல் இரண்டு நாட்களில் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிற்று. நன்றி மறவாத நம் ஆசிரியர் ஒருசமயம் திருவையாற்றுக்குச் சென்று அங்கு வாழ்ந்திருந்த அனந்த ராமையரைக் காண விரும்பி அவரது வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல, ஆற்றில் முழுகி வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்த ஐயரை இவர் வழிநடுவிற் கண்டார். கண்டமாத்திரத்தில் உள்ளம் பூரித்த அனந்தராமையர் இவரை மார்புறத் தழுவி மகிழ்ந்தார். அப்பெருங்குணத்தில் ஈடுபட்ட இவர் தஞ்சை உதவிக் கலெக்டராக இருந்த தம் நண்பர் முருகேச பிள்ளைக்கு அனந்தராம ஐயரை அறிமுகம் செய்து வைத்தார்; அதனால் ஐயர் பின்னால் பல நன்மைகள் பெற்றார்.

கிருத்தவக்கல்லூரியில் இவர் வேலை பார்க்கும்போது தலைமைத் தமிழ்ப் பேராசிரியராக இருந்த சூரியநாராயண சாத்திரியார் இவருக்கு ஒப்புயர்வற்ற நண்பராயினர். அக்காலத்திலேதான் நம் பூரணலிங்கனார் "ஞானபோதினி" என்ற மாதத்தாளை நடாத்தி வந்தார். அது எட்டாண்டுகள்வரை செம்மையாக நடைபெற்றது. சூரிய நாராயண சாத்திரியார் பிறமொழிக் கலப்பில்லாது தமிழ் வழங்கப்பெறுதல் வேண்டுமென்று பேரவா உடையவர். அதனாலே தமது வடமொழிப் பெயராகிய 'சூரியநாராயண சாத்திரி' என்பதனைத் தனித் தமிழில் 'பரிதிமாற் கலைஞன்' என்று மாற்றியமைத்து மகிழ்ந்தார். தனித்தமிழ் வளர்த்த முதற் பெரும் புலவராகிய சாமி வேதாசலனார் தமது பெயரை 'மறைமலையடிகள்' என்று மாற்றியது இதற்குச் சிறிது பின்னரே

யாம். பூரணலிங்கனார் பரிதிமாற் கலைஞருடன் நாடோறும் கடற்கரைக்குச் சென்று உலாவி அறிவுரை பேசி இறும்பூது எய்திவந்தார். நீதிபதி சுப்பிரமணிய ஐயருடனும், மாகாணக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் புலவர் சாமிநாத ஐயருடனும் இக்கலைஞரே இவரை அறிமுகம் செய்துவைத்து நெருங்கிய நண்பருமாக்கினார். ஒருநாள் இவ்விருவரும் சேர்ந்து கடற்கரையினிற் செய்துகொண்ட முடிவின் பயனாக எழுந்தனவே 'தமிழ் மொழி வரலாறு'ம், 'தமிழிலக்கிய வரலாறு'ம். தமிழிலே கலைஞரால் எழுதப்பெற்றது தமிழ்மொழி வரலாறு; தமிழிலக்கிய வரலாறோவெனின் பூரணலிங்கனாரால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்றது.

பூரணலிங்கனார் பல ஆங்கில நூல்களுக்கு உரை யெழுதியும், பல பாட நூல்கள் அமைத்தும், பணம் பெற்று வாழ்ந்து வருவாராயினர். இவர் ஆங்கிலப் புலமையில் தம்மை ஒப்பாரும் மிக்காரும் இன்றித் திகழ்ந்தார். ஆங்கிலப் பேராசிரியர் பலரும் இவரது புலமையினைப் பாராட்டினார்கள். இவர் எப். ஏ. வகுப்பிற் படித்துக்கொண்டிருந்த காலத்திலேயே தமக்குப் பாடமாக இருந்த சேக்சுபியர் எழுதிய நாடகத்துக்கு உரையெழுதி, அதில் தமது பெயர் வெளிப்படையாகத் தோற்றுவண்ணம் 'பூரணலிங்கம்' என்பதைத் தலை மாற்றி 'மாக்னில் ஆன்ரப்' (Magnil Anrup) என்பவர் எழுதிய உரையென்று குறித்து அச்சிட்டு வெளியிட்டார். இவருடைய ஆசிரியரும் அவ்வுரை நூலினை யாரோ ஒரு பெரிய ஆங்கிலப் புலவர் எழுதியதாக மதித்துப் பெரிதும் பாராட்டிப் பாடங் கற்பித்தார். அப்புனை பெயரினைக் கொண்டு அப்பொழுது இவர் எப். ஏ., பி. ஏ. வகுப்புக்களுக்கு உரை நூல்கள் எழுதி வெளியிட்டு நல்ல

ஊதியமும் அடைந்தார். இவருக்கு முப்பத்துமூன்று வயதானபோது இவருடைய தந்தையாருக்கு அறுபதாவது ஆண்டு நிறைவு விழா வந்தது; அதனை இவர் மிகவும் சிறப்பாக நடத்தி மகிழ்ந்தார்.

முன் இவரோடு கூட்டாளியாகப் பேராசிரியர் செப்பர்டு இருந்தவர். அவர் டாக்டர் மில்லர், விங்கிளேர் ஆகிய பேராசிரியர்களைக் கண்டித்துக் குறைபேசத் தொடங்கினர். அதனால் இவர் செப்பர்டுக்கு நல்லறிவு புகட்டுவதற்காக, அவருடைய குறைபாடுகளை எழுதி ஒரு நூலாக்கி, உண்மையில் ஆறுபடிகள் மட்டும் அச்சிட்டு, அதில் இரண்டினைச் செப்பர்டுக்கு அனுப்பினர். அந்நூலுக்கு ஆசிரியர் விங்கிளேருடைய மாணவர் சங்கர நாராயணன் என்பதும், ஆறாயிரம் படிகள் அச்சிடப் பெற்றுள்ளன என்பதும் அப்புத்தகத்தின் அட்டையிற் குறிக்கப்பட்டிருந்தன.

அப்பொழுது செப்பர்டு பங்களூர் நாராயணசாமி முதலியார் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராக இருந்தார். அவர் இந்நூலினைக் கண்டவுடன் நடு நடுங்கி ஓடோடியும் சென்னைக்கு வந்தார்; இவரைக் கண்டு இனித் தாம் தவறு செய்வதில்லை என்று வாக்குறுதி செய்து தம்மை மன்னிக்குமாறு வேண்டினர். இவரும் அவர் திருந்தியமை கண்டு அவரை மன்னித்து நல்ல அறிவுரை வழங்கினர்.

செப்பர்டு ஆங்கிலமொழிக்கு ஓர் இலக்கணம் எழுதியிருந்தார். அதனை இவர் திருந்திய பதிப்பாக வெளியிட்டார். அதில், "திலகர் அநீதியாகக் கண்டிக்கப்பட்டார்" என்ற சொற்றொடர் ஓர் உதாரணமாகக் காட்டப்பட்டிருந்தது. அதனால் ஆங்கிலர் பலரும் அஞ்சி,

அப்புத்தகத்தை ஏற்றுக்கொள்ளாது விலக்கவேண்டு மெனத் தம்முள் தீர்மானித்தார்கள். அதனையறிந்த இவர் "திலகர்" என்ற சொல்லை எடுத்துவிட்டு "என்றி" என்ற சொல்லைப்போட்டு அச்சிட்டு வெளியிட்டார். அதனால் அவர்களுடைய எதிர்ப்பு வலுவற்று ஒழிந்தது.

௬. கோயம்புத்தூர் வாழ்க்கை

(1900 மார்ச்சு முதல் 1904 மே வரை)

1900-ம் ஆண்டு மார்ச்சு மாதம் இவர் கோயம்புத்தூருக்குச் சென்று செயின்டு மைக்கேல் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக அமர்த்தப்பட்டு, அக்கல்லூரியினை வளர்க்கத் தொடங்கினார். அந்நகரத்தில் நாட்டுக் கல்லூரி என ஒன்று இருந்ததனாலே இக்கல்லூரி வளர்ச்சி குறைந்திருந்தது; எனினும் இவரது விடா முயற்சியால் மைக்கேல் கல்லூரி மாண்புமிகப் பெற்று ஓங்கியது.

ஆசிரியப் பயிற்சிப்பள்ளித் தலைமையாசிரியர் இலட்சுமண ஐயர் என்பாரும், தாசில்தார் பெருமாள் பிள்ளையென்பாரும், தமிழாசிரியர் திருச்சிற்றம்பலம் பிள்ளையென்பாரும், சிவக்கவிமணி கோ. க. சுப்பிரமணிய முதலியாரும் இவருக்கு உற்ற நண்பர்களாயினர். அவர்களில் இலட்சுமண ஐயரும், பெருமாள் பிள்ளையும் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இவருக்கு அடிக்கடி பேருதவி புரிந்துவந்தார்கள்.

அக்காலத்திலே சில புலவர்கள் வடமொழியைத் தமக்குத் தாய்மொழியென மயங்கி, அம்மொழியில் இருந்து தமிழ் பிறந்தது எனவும் வாய்கூசாது எழுதி

யும் பேசியும் வந்தார்கள். இவர் அவர்களை எதிர்த்துத் "தமிழ் ஒரு தனிமொழி, உலகத் தாய்மொழி" என்று எடுத்துக்காட்டிப் பல கட்டுரைகள் எழுதிச் செய்தித் தாள்களில் வெளியிட்டார். நீதிபதி கிருட்ணசாமி ஐயர் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற் பேசியபோது வடமொழியிலிருந்து தமிழ் வந்தது என்று பேசினரேனும், பூரணலிங்கனரது நல்லறிவுக் கட்டுரைகளினாலே திருந்தி, பின் சென்னையிற் பேசியபோது தனிமொழியாம் தமிழ் ஒப்பற்றது என்ற உண்மையினை உலகறியச் செய்தார்.

இவருடைய தம்பி சங்கரநாராயணபிள்ளை பத்திரப் பதிவு நிலையத்தில் எழுத்தாளராக இருந்த சமயம் இவரின் பெரிய தந்தை குற்றாலலிங்கம் பிள்ளை இறந்து போனார்; அதனால் அவரிடமிருந்த ஊர்த்தலைமைப்பணி (கி. மு. வேலை) இவரின் குடும்பத்தினரைச் சேர்ந்தது. இவருடைய தம்பியார் அப்பணியை ஏற்றார். இவர் முயற்சியால் கிளை அஞ்சல் நிலையத் தலைமையும் அவருக்கு ஆயிற்று.

இவருடைய முதல் மனைவியாருக்குப் பலவித நோய்கள் வந்து துன்புறுத்தின. அவ்வம்மையார் இறக்க இருந்தார். அதனால் இவர் சங்கரன்கோவிலில் அரசியற் பணியிலிருந்து விலகி ஓய்வுபெற்றிருந்த சிவசுப்பிரமணிய பிள்ளையின் மகளை இரண்டாம் தாரமாக மணம் செய்துகொண்டார். சில நாட்களில் முதல் மனைவியார் நோய் நீங்கி முழுநலம் பெற்றார்.

1903 திசம்பரில் பிளேக் நோயின் கொடுமையினால் இவரது கல்லூரி மூன்று மாதங்கள் அடைக்கப்பெற்

றது. அந்த விடுமுறைக்காலத்திலேதான் இவர் "தமிழிலக்கிய வரலாறு" என்ற நூலினை ஆங்கிலத்தில் எழுதிமுடித்தார். பின்வந்த கோடை விடுமுறையில் இவர் கோவையை விட்டு விலகி முந்நீர்ப்பள்ளம் வந்து சேர்ந்தார்.

எ. நெல்லையில்

(1904 முதல் 1911 வரை)

கோடை விடுமுறையின்பின் வேறு வேலை ஒன்றுமில்லாது இவர் தம் ஊரிலே தங்கியிருந்தார். அப்போது இவர் தமக்கு நல்ல வீடொன்று கட்டத் தொடங்கினர்; விரைவில் வீடு கட்டிமுடிந்து புகுதல் விழாவும் நடந்தேறியது. அக்காலம் இந்துக் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் பணி இவருக்குக் கிடைத்தது. அவ்வாண்டில் கல்வியதிகாரி வில்லியம்சுப் பிள்ளை என்பார் இவரது பள்ளியினை வந்து பார்வையிட்டார். அவரது தூண்டுதலினாலே இவர் சென்னை சென்று எல். டி. தேர்வில் முதல்தரமாக வெற்றிபெற்றார். 1906 ஏப்ரல் மாதம் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவிலே இவர் எல். டி. பட்டம் பெற்றார். அவ்வாண்டு திசம்பர் மாதம் இவர் இந்துக் கல்லூரியை விட்டு விலகினர். அதிலிருந்து ஒன்பது மாதங்கள் மயிலாப்பூரிலும் சைதாப்பேட்டையிலும் இவர் தங்கியிருந்தார். அப்போது இவருக்குக் கிண்டியிலிருந்த மொழிநூலாசிரியர் பெரும்புலவர் கார்த்திகேய முதலியாருடைய நட்புப்பேறு கிடைத்தது.

நெல்லையில் இவர் ஒரு கல்லூரியைத் தொடங்கினர். அதற்குத் தமிழ்ப் பேராசிரியர் சிவராம பிள்ளை இவருக்குத் துணையாக இருந்தார். தொடக்கத்தில் அப்பள்ளியில் மூன்று பிள்ளைகள் இருந்தனர்; மூன்று வாரங்

களுக்குப் பின்னர் பிள்ளைகள் எண்ணிக்கை நூறுகிப் பின் முந்நூருக வளர்வதாயிற்று. ஐந்து ஆசிரியர்களைத் துணைக்கொண்ட இவரது தலைமையில் அக்கல்லூரி நான்கு ஆண்டுகள் சிறப்பாக நடைபெற்றது. அதில் ஆங்கிலமும், உடல்நூலும் நலவழியும், வேளாண்மையும், வரலாறும் பூகோளமும், கணக்குப்பதிவும், சுருக்கெழுத்தும் கற்பிக்கப்பட்டுவந்தன. இத்திட்டம் கேம்பிரிட்சு ஆக்சுபோர்டுப் பல்கலைக் கழகத் தேர்வுகளுக்காகக் கற்பிக்கப்பட்டது. கேம்பிரிட்சு, ஆக்சுபோர்டுப் பல்கலைக் கழகங்களின் தேர்வுகளுக்குப் பாடங்கள் கற்பிக்கப்பட்ட காரணத்தால் இக்கல்லூரி "கெமிசிசுக் கல்லூரி" என்று பெயரிடப்பெற்றது. ஓர் ஆண்டு விழாவில் நெல்லை மாவட்டத் தலைமை நீதிபதி ஸ்பென்சர் (Spencer) தலைமை தாங்கிப் பூரணலிங்கனாரை மிகமிகப் பாராட்டினர்.

அ. உயர்நீதி மன்றம்
(1909—1910)

நெல்லை மாவட்டக் கலெக்டர் ஆசு (Ash) என்பவர் ஒருநாள் இரயிலிலே சென்றுகொண்டிருந்தபோது மணியாச்சிச் சந்திப்பில் செங்கோட்டை ஊரினரான ஓர் இளைஞராற் சுட்டுக் கொல்லப்பட்டார். அதனுல் எழுந்த வழக்கில் பலருக்குப் பலவிதமான கொடுந் தண்டனைகள் கிடைத்தன. இந்துக் கல்லூரியில் தமிழ்ப் புலமை நடாத்திய மேலகரம் சுப்பிரமணியக் கவிராயருக்குச் செங்கோட்டைக் குற்ருலலிங்கம் பிள்ளை மருமகனுவார். குற்ருலலிங்கம் பிள்ளையின் மகள் கணவர் அருணுசலம் பிள்ளை யென்பவர்; அவர் கல்கத்தாவில் மருத்துவக்

கல்லூரியிற் படித்துக்கொண் டிருந்தார். செங்கோட்டைச் சுதேசிச் சங்கத்தில் அவர் ஓர் உறுப்பினர். அதனால் அவரும் இக்கொலை வழக்கிற் சேர்க்கப்பெற்றுச் சென்னைக்குக் கொண்டு செல்லப்பெற்றார். அவரது செங்கோட்டை வீட்டில் இருந்த அவரது பெட்டியில் அவருக்கு இவர் தந்த நற்சான்றுத் தாளொன்று அகப்பட்டது. அதனால் இவரும் ஒருசான்றாக ஆராயப்பட்டார். சென்னை அரசினரது வழக்கறிஞர் நூசெண்டு கிராண்டு என்பவர் இவரைப் பலவாறு வினவினார். சுதேசியத்தை விளக்கும் நூல்கள் சில அருணாசலம் பிள்ளையின் பெட்டியில் அகப்பட்டன. அவைகள் அரசினரால் தடை செய்யப்பட்டவை யல்ல. அருணாசலனாரால் படிக்கப்பட்டுப் பழகிய அறிகுறிகள் ஒன்றும் அச் சுவடிகளிற் காணப்பெறவில்லை. இங்ஙனமாகக் கல்கத்தாவிற் படித்துக் கொண்டிருந்த அவரை இக்கொலை வழக்கிற் சேர்த்தது முற்றிலும் பொருந்தாது என்று இவர் வாதாடினார்; அதனால் அருணாசலம் பிள்ளை விடுதலை பெற்றார்.

இவருடைய இளைய மைத்துனர் இராமலிங்கம் அப்போது பதினெட்டு வயது நிரம்பாத சிறுவர். அவர் திருநெல்வேலிச் சுதேசி வழக்கிற் சேர்க்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், ஐந்நூறு ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டார். அவர் நகர ஆட்சிமன்றப் பதிவுகளைக் கொளுத்தியதாக அவர்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. பெரிய கலெக்டர் அவரை நேரிற் சிறைப்படுத்தி யிருந்தார். சிறை செய்யப்படும்போது அவர் ஒரு திரணையில் நின்று வந்தேமாதரம் பாடி, சுதேசியம்பற்றிப் பேசிக்கொண்டிருந்ததாக அவ் வழக்குக் குற்றம் சாற்றியது. உதவிக் கலெக்டர் தருமரங்க

ராசு என்பவர் அவர் திரணையிலிருந்து தான் பேசிக் கொண்டிருந்தாரென்று வாக்குமூலம் தந்திருந்தார். அதனைக்கொண்டு இவர் சென்னை சென்று வழக்கறிஞர் வழியாக வாதாடச் செய்தார்; அதன் பயனாக, வழக்கினை ஆராய்ந்த தலைமை நீதிபதி ஆர்னால்டு ஒயிட்டும், நீதிபதிகள் சங்கரன் நாயரும் ஐலிங்கும் இராமலிங்கத்தை விடுதலை செய்தார்கள்.

அ. மறுபடி சென்னையில்

(1912 முதல் 1919 வரை)

நெல்லைப் பால்வண்ண முதலியாரென்ற புலவர் இவருக்கு நண்பர்; அவர் வழியாக மதுரையிலிருந்த உத்தமபாளையம் குறுநில மன்னர் சுப்பிரமணிய முதலியாருடைய நட்பை இவர் பெற்றார்; பெற்று அவரது வேண்டுதலுக்காக அவருடைய குழந்தைகளுக்கு ஆசிரியராகி, இவர் சென்னைக்குச் சென்று புரசவாக்கம் சுப்பிரமணிய முதலியார் தெருவில் ஓராண்டு தங்கியிருந்தார். அப்போது இவர் தமது கெமிசிசுக் கல்லூரியினைச் சென்னையில் நிலைநிறுத்தினார்.

அக்காலம் பெரியார் கேசவப் பிள்ளையின் தலைமையில் "குறுநிலக் (செமீன்) குடிகள் சங்கம்" தோன்றியது. அதில் இவர் துணை அமைச்சராகிக் குறுநிலக் குடிகளின் நலத்திற்காக விடாது உழைத்தார். உலக முதற் பெரும் போர் தொடங்கவும் அச்சங்கம் நின்றது.

இவர் தமது கெமிசிசுக் கல்லூரியைக் குழந்தையென்பாரிடம் ஒப்புவித்து 'நீதி' (Justice) என்ற ஆங்கிலத் தாளுக்குத் துணையாசிரியராக ஆனார். 'நீதி'யென்ற

தாளுடன், 'திராவிட'னென்ற தமிழ்த்தாளும், 'ஆந்திரப் பிரகாசிகா' என்ற தெலுங்குத்தாளும் தென்னிந்தியர் நலவுரிமைச் சங்கத்தினரால் நடத்தப்பெற்றன. அந்தச் சங்கத்தின் தலைவராக இருந்தவர் உலகப் பெரியார்களுள் ஒருவராகிய தியாகராயச் செட்டியார். பேரறிவாளராகிய அத்தலைவர்தான், இவரை 'நீதி'த்தாளுக்குத் துணையாசிரிய ராக்கினார். இவர் சென்னையிலிருந்த இக்காலத்திலே தமிழிலும், ஆங்கிலத்திலும் பலப்பல நூல்கள் எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தினார்.

௧௦. ஆங்கிலப் பேராசிரியர்
(1920—1926)

மதுரை அமெரிக்கன் கல்லூரித் தலைவர் சம்ரோ மூன்று மாதங்கள் விடுமுறையிற் சென்றபோது இவர் அவருடைய ஆசிரியப் பணியை மேற்கொண்டு திறம்படப் புரிந்தார். பின் தாம் முன்பு பேராசிரியராக இருந்து விலகிச்சென்ற திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலே இவர் மறுபடி ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். ஓராண்டு முடிந்ததும் இவர் அக் கல்லூரியினை விட்டு விலகிக்கொண்டார்.

திருச்சி எஸ். பி. ஜி (S. P. G.) கல்லூரித் தலைவர் கார்டினர் இவரைத் தமது கல்லூரியிலே பேராசிரியராக வருமாறு பலமுறை வேண்டிக்கொண்டார். அதற்கு இணங்கி, இவர் திருச்சிராப்பள்ளிக்குச் சென்று, ஆங்கிலத் தலைமைப்புலமையினை நான்காண்டுகள் நன்கு நடாத்தினார். பின் வயது நிரம்பிய இவர் 1926 ஏப்ரல் மாதம் தமது ஆசிரியப் பணியினின்றும் விடுதிபெற்று, முந்நீர்ப் பள்ளம் வந்து சேர்ந்தார்; இவர் காலத்தில் அக் கல்

லூரி "பிசப்பு ஈபெர் கல்லூரி" யென்ற பெயரை அடைந்தது. அக் கல்லூரியில் இவர் இருந்தபோது நாவலர் வேங்கடசாமி நாட்டாரும், கவி சுந்தரநாதப் பிள்ளையும், நடேச முதலியாரும் அதன் தமிழாசிரியராக விளங்கினார்கள்.

கக. தமிழ்த் தொண்டு

இவர் தமிழிற் சிறந்த புலவராக இருந்ததோடு, தமிழர் சமயமாகிய சைவசித்தாந்தத்திலும் பழுத்த பற்றுடையவராக இருந்தார். பாளையங்கோட்டைச் சைவ சபையின் இரண்டாவது மாநாடு 1911 மே மாதம் பாலவநத்தம் குறுநில மன்னரும் மதுரைத் தமிழ்ச்சங்கம் தோற்றுவித்த பெரியாரும் முதலாவது மாநாட்டுக்குத் தலைவருமாகிய பாண்டித்துரைத் தேவருடைய தலைமையில் நடைபெற்றது. அம் மாநாட்டில் முதல் நாள் "பவணந்தி முனிவர்" என்பதுபற்றி ஆங்கிலத்திலும், மறுநாள் "தெரிந்து செயல்வகை" என்பதுபற்றித் தமிழிலும் பூரணலிங்கனார் பேருரை நிகழ்த்தினார். மேலும் அடுத்த ஆண்டு நடந்த மூன்றாவது சைவ மாநாட்டில் இவர் "எழுமையும் ஏமாப்புடைத்து" என்பதுபற்றித் தமிழிலும், "திருவள்ளுவர் கொள்கை" என்பதுபற்றி ஆங்கிலத்திலும் பேருரை வழங்கி மகிழ்வித்தார். அவ்வுரைகள் சைவ சபையினரால் அச்சிடப் பெற்றுள்ளன. இங்ஙனமாக இவர் விரித்துரைத்த பேருரைகளும் தலைமை தாங்கிப் பேசிய தலைமையுரைகளும் எண்ணிறந்தன.

இவரின் சிறந்த நண்பர்களுள் ஆயுள்வேத பாற்கரர் மறைத்திருவன் சாமி விருதை சிவஞானயோகி

களும் ஒருவர். அவர் கோவிற்பட்டியில் பத்திவிளை கழகம், திருவிடர் கழகம் என்ற சங்கங்களை நடத்தி வந்தார். பத்திவிளை கழகத்தின் பதின்மூன்றுவது ஆண்டு விழாத் தலைமை நம் பூரணலிங்கனுருக்கு அமைந்தது.

இவர் திருச்சியில் இருந்தசமயம் அவ்வூர்ச் சைவ சித்தாந்த சபையின் துணைத்தலைவராகி அடிக்கடி பல சமய விரிவுரைகள் நிகழ்த்தினர். தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றித் தஞ்சையில் ஒரு மாநாடு நடைபெற்றது; பின்னர், வளர்நெறி மந்திரி தி. நெ. சிவஞானம் பிள்ளை தலைமையில் திருச்சியிலும் ஒரு மாநாடு நடைபெற்றது. அவைகளிலெல்லாம் முதன்மைப் பங்கு கொண்டார் நம் பூரணலிங்கனுர். இவர் இதுபற்றி நாள்தாள்களிற் பல கட்டுரைகள் எழுதினர். அவைகளின் பயனுகச் சென்னை அரசாங்கம், இராமநாதபுரம் மன்னர் தலைமையில் ஓர் ஆய்வுக் குழுவினை அமைத்தது. அதிலும் இவர் சென்று வேறு எம்மொழிக்கும் இல்லாத தமிழ்மொழியின் தனிச்சிறப்புக்களை எடுத்து மொழிந்து நிலைநாட்டினர். இம் முயற்சிகளின் விளைவாகச் சிதம்பரத்தின் அண்மையிலுள்ள திருவேட்களத்தில் தோன்றியதே அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

மேலும் இவர் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடத்திய கலைச் சொல்லாக்க மாநாட்டிற் கலந்துகொண்டு பெருந்துணை புரிந்தார்; அச்சங்கத்தின் பன்னிரண்டாவது மாகாணத் தமிழர் மாநாடு 1940 மே மாதம் 18, 19-ம் நாட்களில் திருநெல்வேலியில் நடைபெற்றது. மேடை தளவாய் குமாரசாமி முதலியார் அம்மாநாட்டு வரவேற்புத் தலைவர்; இசைக் கவியரசு தி. இலக்குமணப் பிள்ளை

தமிழ்க் கொடியேற்றினர். நம் பூரணலிங்கனர் அம் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிச் சிறப்புற நடத்தித் தந்தார். இங்ஙனமாகத் தமிழ்த் தொண்டுகளை இடை விடாது நடத்திவந்த இப்பெரியார் 1947-ம் ஆண்டு ஜூன்மாதம் 16-ம் நாள் மண்ணுலகைவிட்டு மறைந்து ஆண்டவன் திருவடி நீழலை எய்தி இன்புற்ருர்.

கஉ. இவர் நூல்களும் குணநலனும்

பூரணலிங்கனர் ஆங்கிலத்தில் முப்பத்திரண்டு நூல் களும், தமிழில் பதினெட்டு நூல்களும் எழுதி வெளி யிட்டிருக்கிருர். ஆங்கில நூல்களில் 1. சேக்சுபியர் நாடகங்களைப் பற்றிய பல்கலைக் கழக விைக்கள், 2. சேக்சுபியர் பாடல்கள், 3. கோல்டுசிமித்துவின் கதைகள், 4. கார்லைல் எழுதிய அபட்டு சாம்சன், 5. ஆங்கில இலக்கிய விளக்கத் தொகுப்பு, 6. ஆங்கி லத்திற் பயிற்சிகள், 7. ஆங்கிலத்திற் பேச்சு முறை, 8. மெட்ரிகுலேசன் வாசகம், 9. மெட்ரிகுலேசனுக்கு முன்வகுப்பு வாசகம், 10. இரிப்பன் ஆரம்பம், இளை ஞர், முதியவர் வாசகங்கள், 11. நடுத்தர வகுப்புக்களுக்கு ஆங்கிலப் பாடற்றிரட்டு, 12. இந்திய வரலாறு (இளை ஞருக்கு), 13. இங்கிலாந்து வரலாறு (முதியவருக்கு), 14. பி. ஏ. வகுப்புக்குச் சாக்கிரட்டிசு பிளேட்டோ வர லாறுகள், 15. சூலியசுசீசர் உரை, 16. ஒதெல்லோ உரை, 17. கட்டுரைத் தொகுதி என்பனவும், எப். ஏ., பி. ஏ., ஆங்கிலப் பாடப்புத்தகங்களுக்கு விரிவான விளக்க உரைகளும் மாணவர் உலகத்துக்கு மாண்பு தருவன. 1. உரோமன் சட்டத் தொகுப்பு, 2. மேயி னுடைய பழங்காலச் சட்டம்—சட்ட முறைமைகளின் சுருக்கம், 3. மேயினுடைய பழங்காலச் சட்டச் சுருக்

கம், 4. ஒப்பந்தச் சட்டம், 5. இன உதவிச் சட்டம் என்பன சட்ட மாணவருக்குப் பேருதவியாவன.

ஆயிரத்துமுந்நூற்றுமுப்பது அருங்குறளையும் இவர் ஆங்கிலத்தில் மிக அருமையாக மொழிபெயர்த்திருக்கிறார். இந்நூலின் பன்னிரு பக்கங்கள் கொண்ட முன்னுரை பல ஆராய்ச்சியுரைகள் பொதிந்தது. திருக்குறள் ஆராய்ச்சி என்ற ஆங்கில நூல் கடவுள், முனிவர், காதலும் மணமும், கணவனும் மனைவியும், குணங்களும் குற்றங்களும், ஒழுக்கம், அறிவும் பெருமையும், உடல் நலமும் செல்வமும், அரசும் நாடும் எனப் பல ஆராய்ச் சிக் கட்டுரைகளை உடையது. மாணிக்கவாசகர், அப்பர், நம்மாழ்வார், பத்துத் தமிழ் முனிவர் என்பன அப்பெரியாரது காலத்துடன் வரலாறுகளையும் அறிவுரைகளையும் விளங்க உரைப்பன.

"இலங்கை மன்னர் இராவணப் பெரியார்" என்ற ஆங்கில நூலில் இராவணேச்சுவரனுடைய பெருமைகள் தக்க ஆதாரங்களுடன் எடுத்தியம்பப் பெற்றுள்ளன. அதில் இலங்கை முதலிய ஆராய்ச்சியுரைகள் அறிவுக்கு ஏற்ற விருந்தாக அமைந்துள்ளன. "இக்கால ஆங்கில இலக்கிய ஆராய்ச்சி" என்ற நூல் மார்லே பிரபு, பிரடரிக்கு ஆரிசன், பெய்லி, பேராசிரியர் இராம்கார்சன் போன்ற ஆங்கில மேதாவிகளின் பாராட்டுதலைப் பெற்றது.

இந்து, மெயில், இந்தியன் மெயில், மைசூர்ப் பொருளாதாரம் முதலிய பல தாள்களின் போற்றுதலைப் பெற்ற "தமிழ் இந்தியா" என்ற நூலில் "தமிழகம், தமிழர் தொன்மை, தமிழ் மொழியும் இலக்கியமும், தமிழர் சமயம், தமிழர் வாணிகம், போர்முறை, அரசு,

கலைகள், மருந்து, கல்வி முதலிய பலதுறைகளில் அறிவு சான்ற ஆராய்ச்சிக் கட்டுரைகள் மிளிர்கின்றன. "தமிழ் இலக்கியம்" என்ற நூல் இத்துறையில் முதன்மை யானது. சங்க கால இலக்கியம், புத்தர் சமணர் கால இலக்கியம், சமய இலக்கியம், திருமடங்கள், இக்கால இலக்கியம் எனப் பல பகுதிகளாக இந்நூல் பிரிந்து தெளிவான முறையில் திகழ்கின்றது. இனி இவருடைய தமிழ் நூல்களைப்பற்றி ஆராய்வோம்.

1. ஔவை குறள், 2. ஆயிரத்து ஐம்பத்தைந்து செய்யுட்களையுடைய செய்யுட்கோவை, 3. நானூறு பாக் களைக்கொண்ட விவேக விளக்கம், 4. இராயர் அப்பாசி கதைகள், 5. வாசகத் திரட்டு, 6. இரு சிறுகதைகள், 7. முப்பது நீதிக் கதைகளையுடைய கதையும் கற்பனை யும், 8. வீரமணி மாலை, 9. தமிழ்க் கட்டுரைகள், 10. பன்னிரு பெண்மணிகள் என்பன மாணவர்களுக்கு ஆக்கப்பெற்றன. 1. நபிநாயகமும் கவிவாணர்களும், 2. மருத்துவன் மகள், 3. தமிழரும் தமிழ்ப்புலவர்களும், 4. தப்பிலி, 5. காமாட்சி என்ற நவநகை நாடகம், 6. ஐரோப்பியப் போர், 7. நவராத்திரி விரிவுரைகள் என்பன அறிஞருக்கு ஏற்ற நூல்கள். சூரபதுமன் வரலாறு மிகவும் போற்றத்தக்க புகழ்நூல்; சூரபதும னுடைய உண்மைப் பெருமைகள் இந்நூலில் எடுத்து விளக்கப்பெற்றுள்ளன.

பிற்குறிப்பும் குணநலனும்

இவர் தம் கைப்பட எழுதிய இவரது வரலாறு எம்மிடம் இருக்கிறது. அதில் இவர் தம் பிற்குறிப் பாகத் தம் வாழ்நாள் நிகழ்ச்சிகளைச் சுருக்கி எழுதியிருக் கின்றார். 1866-ல் ஒரு செல்வக் குடும்பத்திற் பிறந்த

இவர் 1888-ல் பி. ஏ. பட்டம் பெற்றார். அப்போது இவர் குடும்பம் கடனோடிருந்தது. 1900-ல் கடனெல்லாம் தீர்ந்தது. கோயம்புத்தூர் வாழ்வும் இந்துக் கல்லூரி வாழ்வும் இவருக்கு நல்ல வருவாய் தந்தன; சம்பள வருவாயைவிட இவர் நூல்கள் இவருக்குப் பெரும் பொருள் தந்துதவின. 1907—1911 வரை நெல்லையில் இவர் நடத்திய கெமிசிசுக் கல்லூரி இவருக்கு ஆங்கிலப் பெரியார் பலர் நட்புத் தொடர்பையும் புகழையும் தந்தது. இவருடைய தாயார் 1911-ல் இறந்தனர். இவரின் முதல் மனைவி இறந்து இரண்டாண்டு கழிந்தபின் 1919-ல் இவர் தங்கையும் தம்பி மனைவியும் மறைந்தனர். 1920-ல் இரண்டாம்முறை மணந்த இவர் தம்பி 1931-ல் இறந்தார். இனி, இவரது குணநலனைக் காணுவாம்.

இவர் எப்போதும் இடைவிடாது படித்துக் கொண்டே யிருப்பார்; படிக்காத நாளைப் பிறவாத நாளாகக் கருதும் மனப்பான்மையுடையவர். இவர் யாரையும் எளிதில் நம்பும் தன்மையுடையவர்.

இவர் மூன்றாண்டுகள் சட்டம் பயின்றும் வழக்குரைஞர் வாழ்க்கையிற் பற்றில்லாமையால் பி. எல். தேர்வினை எழுதாது விட்டு விட்டார். "ஆண்டவன் நம்மைக் கைவிடமாட்டான்" என்னும் முழு நம்பிக்கையுடையவர் இவர்; அதனால் எவரும் வியக்கும் வண்ணம் பல வகைத் துன்பங்களையும் புறங்கண்டு மனிதர் எவர் துணையினையும் எதிர்பாராமல் இவர் தமது கிழவயதில் இன்புடன் முந்நீர்ப் பள்ளத்தில் வாழ்ந்து வந்தார்.

இவர் மிக எளியவாழ்க்கையை மேற்கொண்டு அதனால் நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்

தைப் பெற்றிருந்தார்; வைகறையில் துயிலுணர்ந்து முழுகிப் பழைய சோற்றுநீரைப் பருகி வேளை தவறாமல் உணவருந்துவார். இரவில் இவர் படிப்பதில்லை; விரைவில் தூங்கச் செல்வார். பெண் கல்வியில் இவர் மிகப் பற்றுடையவர்; ஆனால் தாம் பெற்ற மக்களை வளர்க்க வழியில்லாமல் கூலிக்காரிகளிடம் விட்டுவிட்டுப் பெண்கள் வேலைக்குப் போவதை இவர் முற்றிலும் வெறுத்தார். பெண்கள் வாழ்வரசிகளாகத் தம் கணவரைப் பேணி மக்களை நல்ல வழியில் வளர்ப்பதற்கு அவர்கள் இல்லிலேயே வாழ்வதுதான் மிகச் சிறந்த வாழ்க்கை என்பது அறிஞர் முடிவு; இல்லாள் என்ற பெயர் இதனாலே பெண்களுக்கு அமைந்தது.

"எண்பதாவது வயதில் ஒரு பெரிய தத்து வரும்; ஆனால் எண்பத்துநான்காவது வயதில் முடிவது தவறாது என்று ஒளிநூற்புலவர் கூறுகிறார்; ஆனால் ஆண்டவன் என்ன எண்ணியிருக்கிறானோ? அதுவன்றோ முடியும்!" என்று இவர் அடிக்கடி கூறி வந்தார். இவரது எண்பத்தோராவது வயது நிறைந்தவுடன் இவரை ஆண்டவன் தம் திருவடி நீழலிற் சேர்த்துக்கொண்டான். உலையா முயற்சியே களைகணாவுடைய இவருடைய உயிர் இன்புற்றிருப்பதாக.



வீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளை

(1872 — 1936)

வீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளை

க. இளமைப் பருவம்

பிறப்பு

பூமாதேவிக்கு இட்ட பொட்டு எனத் திகழ்வது பாண்டி நாடு. இது வட இந்தியாவை நோக்குமிடத்து மிகப் பண்டைக்காலத்திலேயே தோன்றியது; ஆதலின் இது பண்டைநாடு, பாண்டிநாடு எனப் பெயர் பெற்றது. உலகப் பெரிய மலையாகிய நமது இமைய மலையைக் காட்டிலும் எத்தனையோ பல நூற்றாண்டு களுக்கு முற்பட்டது பொதிகை மலை. அகத்திய முனிவர் எழுந்தருளியிருக்கும் சந்தனப் பொதிகையி லிருந்து கோடையின் கொடுமையைத் தணிக்க மெல்ல ஊர்ந்து வரும் தென்றல் வீசும் வாய்ப்புப் பெற்றது நெல்லைமாவட்டம். இந்தியத் தாயின் தென்கோடியி லுள்ள சென்னை மாகாணத்திலே தெற்குக் கடைசியாக இருப்பது திருநெல்வேலி மாவட்டமே. என்றும் நீர்ப் பெருக்கு அறாத பொருநைப் பேராற்றினுல் இது வளம் பெறும் காரணத்தினுல் பொருநை நாடு என்றும் பெயர் பெறும்.

திருநெல்வேலி மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது ஓட்டப்பிடார வட்டம். அக்காலத்தில் இராமநாதபுரம் மாவட்டம் என்பது இல்லை. இன்று இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சீவில்லிபுத்தூர், சாத்தூர் என்ற வட்டங்களும் திருநெல்வேலியைச்

சேர்ந்திருந்தன. கி. பி. 1911-ல்தான் இவை புதிதாக ஏற்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தன. ஓட்டப்பிடாரம் என்ற வட்டம் எடுபட்டுக் கோவிற்பட்டி வட்டமாயிற்று. ஓட்டப்பிடாரம் முதன்மையிழந்தது; கோவிற்பட்டி புதுவாழ்வுபெற்றுக் கோவில்நகராயிற்று.

ஓட்டப்பிடாரத்தில் ஒரு பிடாரி கோவில் ஊருக்கு வடக்கே இருக்கிறது; பிடாரி என்பது காளி; அந்தப் பிடாரி பெயர் உலகம்மை. பிடாரி எழுந்தருளியிருக்கும் ஊர் பிடாரம். வாந்திபேதி முதலிய தொற்று நோய்களை ஓட்டும் பிடாரி என்று உலகம்மையை அப்பக்கத்தார் கூறுகின்றார்கள். அதனால் அவ்வூர் ஓட்டும்பிடாரம் என்று அழைக்கப்பட்டு நாளடைவில் ஓட்டப்பிடாரம் ஆயிற்று என்பது அவ்வூர் அறிஞர் கூற்று.

ஓட்டப்பிடாரம் பழைய காலத்தில் வீரபாண்டிய புரம் என்று அழைக்கப்பட்டு வந்தது. அதற்குக் காரணம் வீரபாண்டியன் அவ்விடத்திற் கோட்டை கட்டி வாழ்ந்திருந்ததே. அவ்வூர் தென்அளகை என்றும் பெயர் பெற்றிருந்தது. வீரபாண்டியன் ஒருநாள் வேட்டைக்குப் போயிருந்தபோது அவனுடைய உயர்ந்த வேட்டை நாய் அஞ்சி நடுங்கி ஓடி வருவதைக் கண்டான்; ஒரு முயல் அதனைத் துரத்திக்கொண்டு வந்தது; பார்த்தான் பாண்டியன். "இந்த இடத்திற் பிறந்த முயலுக்கே இவ்வளவு துணிவும் ஆற்றலும் இருக்குமானால் பிறக்கும் மக்களுக்கு எவ்வளவு வீரம் உண்டாகும். ஆதலின் இவ்விடத்தில் ஓர் ஊரை உண்டாக்குவேன்," என்று துணிந்து, ஒரு கோட்டையை அமைத்தான். பாஞ்சாலன் என்பது பாண்டியனுக்கு ஒரு பெயர்; அதனால் அக் கோட்டைக்குப் பாஞ்சாலன்குறிச்சிக் கோட்டை என்று

பெயர் வைத்து அதில் தன் மெய்காவலன் வீரக் கட்ட பொம்முவைக் குடியிருத்தினன்.

வீரபாண்டியன் வாழ்ந்திருந்த ஓட்டப்பிடாரத்திலே திருவள்ளுவர் யாண்டு 1903, கொல்லம் 1048, ஆவணித் திங்கள் 22-ம் நாள் (1872 செப்டம்பர் 52) வியாழக் கிழமை 45¾ நாழிகைக்கு ஒரு வீரக் குழந்தை பிறந்தது. அக்குழவியே நமது வீரர் வ. உ. சிதம்பரம்பிள்ளை.

கல்வி பயிலுதல்

ஓட்டப்பிடாரத்திற் கவிராய சிதம்பரம்பிள்ளை என்பவர் ஒருவர் இருந்தார்; இவர் பரம்பரைக் கவிராயர் குடும்பத்தைச் சேர்ந்தவர்; சைவ வேளாளர். இவருக்குச் சிதம்பரம், உலகநாதன், குமாரசாமி என்ற மூன்று ஆண்மக்கள் பிறந்தனர். குமாரசாமி சிறு பிள்ளையாகவே இறந்தார்; சிதம்பரம் புகழ்பெற்ற வழக்கறிஞராகச் சிறக்க இருந்து இருபத்தெட்டாவது வயதில் மடிந்து போனர். உலகநாத பிள்ளை தம் தமையனைப் போலவே மேலான வழக்கறிஞராக விளங்கினர். அவரது பேசும் திறமையையும் வழக்கினை நடத்தும் ஒழுங்கினையும் கண்டு நீதிபதிகளெல்லாரும் அவரைப் பாராட்டினர்கள். அவரது வல்லமையை அறிந்த எட்டையபுரம் அரசர் அவரைத் தமது அரண்மனை வழக்கறிஞராக ஆக்கினர்.

"வேளாளர் என்பவர் விருந்திருக்க உண்ணுதவர்; விருந்துபுறத்தாகத் தான் உண்ணுதல் சாவா மருந்தாக இருந்தாலும் வேண்டத்தக்கதன்று" என்பது தமிழருடைய பண்பாடு, இவ்வரிய குணம் உலகநாதபிள்ளையிடம் இயல்பாகவே அமைந்திருந்தது. ஏழைகள் முகம்

பார்த்துத் தம்மால் இயன்ற உதவிகளை யெல்லாம் செய்வதில் ஒருநாளும் அவர் பின் வாங்கார். அவருடைய திருமனைவியார் பரமாயி அம்மை; தம் கணவர் குறிப்பறிந்து நடக்கும் ஒப்பற்ற குணம் உடையவர்; விருந்தோம்புதலில் இணையில்லாதவர். இவ்வம்மையார் திருமணி வயிற்றிலே தோன்றும் பேறு பெற்றார் நமது வீரர் சிதம்பரம்பிள்ளை. இவர் பிறந்தது கவிராயர் குடும்பம்; இவருடைய தந்தையும் பெரிய தந்தையும் வழக்கறிஞர்; ஆதலின் இவர் பிற்காலத்தில் உலகம் புகழும் கவியாகவும் வழக்குரைஞராகவும் விளங்குவார் என்பதில் என்னே தடையுளது?

சிதம்பரம் பிள்ளைக்கு ஐந்து வயதானவுடனே இவருடைய பெற்றோர் இவரைப் பள்ளிக்கு வைத்தார்கள். ஆத்திசூடி, உலகநீதி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, நீதிவெண்பா, மூதுரை முதலிய நீதிநூல்களையெல்லாம் இவர் அண்ணாவிப் பள்ளிக்கூடத்திலே நன்றாக ஊன்றிக் கற்றார். தட்டைப்பாறை வீரப்பெருமாள் பிள்ளை என்பவர் இவருக்கு ஆசிரியராக வாய்த்த பெரியார்; நல்ல படிப்பும், ஒழுக்கமும் வாய்ந்தவர். இப்போது தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபையிலே சமயப் பேராசிரியராக விளங்குகின்ற சித்தாந்தப் பேராசிரியர் ந. சிவகுருநாத பிள்ளை இவருக்கு ஒருசாலை மாணாக்கர். இவர்கள் இருவரும் இணைபிரியாத நண்பராக இருந்துவந்தனர். நண்பர் இருவரும் காலை ஐந்து மணிக்கே எழுந்து பாடங்களைப் படித்துவந்தார்கள்; பள்ளிக்கூடத்துக்குச் சரியான நேரத்திலே போய் ஆசிரியர் இரு என இருந்து சொல் எனப் பழைய பாடங்களை ஒப்புவித்துப் பின் புதுப்பாடங்களைக் கற்றுத் தேர்ந்தனர்.

உலகநாத பிள்ளை தம்முடைய மகனை நன்ருகப் படிக்க வைக்கவேண்டும் என்ற பேராவல் உடையவர்; அதனுல் தமது காலி மனையிலே பள்ளிக்கூடம் ஒன்று கட்டி எட்டையபுரம் சென்று அங்கே ஆசிரியராக இருந்த அறம்வளர்த்தநாதபிள்ளை என்பவரை அழைத்து வந்து தம் மகனுக்கு ஆசிரியராக்கிக் கல்வி கற்பித்தார். அவரிடம் சிதம்பரம் பிள்ளை இரண்டாண்டுகள் ஆங்கிலமும் தமிழும் படித்தபின்பு வேறு ஆசிரியருடைய துணை வேண்டுவதாயிற்று. புதியம்புத்தூர்ச் சாமிநாத பிள்ளையும் சண்முகம் பிள்ளையும் இவருக்கு ஆசிரியராக வாய்த்தனர்; அவர்களிடம் இவர் கல்வி பயின்று தேர்வில் வெற்றிபெற்ருர்.

பின் திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும், தூத்துக்குடிச் சேவியர் உயர்பள்ளியிலும் படித்து இவர் மெட்றிக்குலேசன் தேர்வில் தேறினர். கல்லூரிப் படிப்புக்கு ஏற்பாடு செய்யப்பெற்றும் அது நடைபெறவில்லை. இவரின் தந்தையின் கட்டளைக்கிணங்கி இவர் சிலகாலம் ஓட்டப்பிடார வட்ட ஆட்சி நிலையத்தில் எழுத்தாளராக வேலை பார்த்துவந்தார். சில மாதங்களில் இவர் தம் தந்தையிடம் விடைபெற்றுச் திருச்சிராப்பள்ளிக்குச் சென்று சட்டம் படித்தார்; அதில் தேர்வுபெற்று இவர் இருபத்து மூன்ருவது வயதில் வழக்கறிஞர் ஆனர்.

நெஞ்சக்கனிவு

சிதம்பரனர் இயல்பாகவே கனிந்த உள்ளம் உடையவர். இவர் தம் பாட்டனருடன் நாடோறும் கோவிலுக்குச்சென்று கடவுள் வழிபாடு செய்துவந்தார். சிவபெருமானுடைய திருவிளையாடல்களை இவர் தம்

பாட்டனார் சொல்லக்கேட்டுக் கேட்டுக் கடவுள் அன்பில் பதிந்த உள்ளம் உடையவரானார்.

ஏழை மக்கள் படும் துயரங்களைக்கண்டு இவரது நெஞ்சம் கனிந்து உருகும். பணக்காரர்கள் அவர்களைப் படுத்தும் கொடுமைகளைக் காணக்காண அவர்களிடத்து இரக்கமும் அத்தகைய பணக்காரரிடத்து வெறுப்பும் இவர் கொண்டார். வறுமையையும் கொடுமையையும் தாங்கமாட்டாமல் ஏழை மக்களிற் பலர் "கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில் வாழ்வதைவிடக் கடும்புலி வாழும் காட்டில் அலைந்து அப்புலிக்கு இரையாவது மிக மேல்" என்று கருதித் தாம் பிறந்த ஊர் உற்றார் முதலிய வரைத் துறந்து பிற இடங்களில் திரிந்து பிச்சையெடுத் துப் புலம்பித் தவிப்பதைக் கண்டு இவர் கண்ணீர் வடிப்பார்.

பிச்சைக்காரர் வீடுதோறும் சென்று பாட்டுப்பாடிச் சோறுபெற்று உண்டு மகிழ்வர்; ஊரெல்லாம் சமைத்த சோறு அவர்களுடையதே. பசிப்பிணியாலும் நோய் நொம்பலத்தாலும் பீடிக்கப்பட்ட அவர்கள் தேவாரம் திருவாசகம் முதலிய அருட் பாடல்களைப் பாடிப் பிச்சை கேட்பார்கள். சும்மா கதறினாலுமே அவர்களுடைய நிலை கல் நெஞ்சையும் கரைத்துவிடும்; அவர்கள் பாடும் பாடல்களோ தெய்வத்தன்மை பெற்ற முனிவர்கள் நெஞ்சுருகிக் கண்ணீர் வார நின்று பாடப்பெற்றவை. அதனால் அவை பிழையுடன் பாடப்பெற்றாலும் கேட் பவர் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்து கலக்கிவிடும். சிதம்பரனார் அத்தகைய பாடல்களைச் சற்று நின்று கேட்பார்; நெஞ்சம் உருகுவார்; தம்மால் இயன்ற உதவியை உடனே செய்வார். படிப்பில்லாமல், நல்ல

ஒழுக்கமும் இல்லாமல் நிற்கும் அவர்களுடைய போலித் துறவு வேடமே பலருடைய உள்ளத்தில் இரக்கத்தையும் மதிப்பையும் உண்டுபண்ணுமாயின், நல்ல படிப்பும் ஒழுக்கமும் கூடிய துறவுவேடம் எத்துணை நன்மதிப்பை நல்கும் என்பது சொல்லாமலே விளங்கும். அதனால் இவர் துறவிகளை மிக மதித்துப் பேருதவி செய்து வந்தார். இரண்டொரு வேளைகளில் தம் தலையை மொட்டையடித்துக்கொண்டு காவிக் கோவணத்துடன் இவர் வேற்றூர் சென்றார் என்பது வியப்பல்ல. அத்தகைய வேளைகளில் இவருடைய தந்தையார் உள்ளம் சோர்ந்து ஓடித்தேடிக் கண்டுபிடித்து மார்போடணைத்து நற்புத்தி கூறி இவரைத் திருப்பி அழைத்துச்செல்வார். இவருக்குப் பிற்காலத்தில் துறவியரோடு பழக்கம் தந்தது இப்பழக்கமும் மனப்பான்மையுமே.

வீர உள்ளம்

வீரபாண்டியர் அரசாண்டிருந்தது இவர் நகரம்; பாண்டியர் அமைத்த பாஞ்சாலங்குறிஞ்சிக்கோட்டை பக்கத்தில் இருக்கிறது. வீரகட்டபொம்மு நாயக்கர் சூரியன் மறையாத ஆங்கில அரசை எதிர்த்துக் கதி கலங்க அடித்த வரலாறுகள் அடிக்கடி வில்லுப்பாட்டுக்களிற் பாடப்பெற்று வந்தன. இச்சூழ்நிலையில் வளர்ந்த சிதம்பரனாருடைய உள்ளத்திலே இயல்பாகவே வீரம் முளைத்துக் குடியிருக்கத் தொடங்கிற்று.

பாஞ்சாலங்குறிச்சிப் போரிலே மடிந்த ஆங்கில வீரர் சமாதிகள் சில ஊரடியில் உள்ளன. அவைகளை இவர் காணும்போதெல்லாம் ஆங்கிலேயர் இந்த நாட்டுக்கு வணிகராக வந்ததும் பின் நாளடைவில் இங்கிருந்த மன்னர்களின் ஒற்றுமையின்மையைக் கண்டு அவர்களை

ஒருவர்மேல் ஒருவரை ஏவி அழித்து அவர் தம் தளர்ச்சி கண்டு நாட்டைக் கைப்பற்றித் தாமே அரசராகிக் கொடுமைகள் செய்வதும் இவருடைய நினைவில் தோன்றும்; அப்போது இவருடைய கண்கள் சிவக்கும். "ஆங்கிலர் ஆட்சிக்குச் சமாதி காணுநாள் என்று வருமோ?" என இவர் ஏங்குவார். வீரபாண்டியர் அமைத்த கோட்டை இன்று பாழாக்கப்பட்டு இருந்த இடம் கூடத் தெரியாமல் ஆங்கிலேயரால் அழிக்கப் பட்டதை இவர் அடிக்கடி எண்ணி நெஞ்சு குமுறுவார். அப்போதெல்லாம் இவரது உள்ளத்திலே வீரம் விஞ்சி எழும்.

சுவரை வைத்தே சித்திரம் எழுதுதல் முடியும்; சுவர் இல்லாமல் எதன்மேலே சித்திரம் எழுதுவது? நம் உடம்பு செம்மையானதாக இருந்தால்மட்டுமே வீரச்செயல்கள் செய்தல்கூடும். அதனால் இவர் தமது உடலை உறுதியுடையதாக ஆக்கும் பொருட்டுப் பல வகைப்பட்ட விளையாட்டுக்களைத் தவறாது ஆடிவந்தார். பெரியபெரிய மரங்களில் ஏறுவார்; ஒன்றைவிட்டு மற்றொரு மரத்தில் தாவுவார்; மிகு தொலைவிலிருக்கும் பொருள்கள்மேல் கையாலும் கவணாலும் கல்லைக் குறி வைத்துத் தவறாமல் எறிந்து பழகுவார்; சிலம்பம் ஆடுவார்; ஒருவரை ஒருவர் குத்தி விளையாடும் குத்தி பழகுவார்; கனத்த கட்டைகளைத் தூக்கிச் சுற்றுவார். இங்ஙனமெல்லாம் இவர் பழகியமையினாலே இவர் உடல் உரம்பெற்று விளங்கியது; அதனால் இவர் உள்ளத்திலும் வீரம் நிலைபெறுவதாயிற்று.

உ. வழக்கறிஞர்

தூத்துக்குடியில்

முதன்முதலாக இவர் தூத்துக்குடியில் வழக்கறிஞர் தொழிலை நடத்தத் தொடங்கினார். பொருள் (Civil) நீதிமன்றம், குற்ற ஆய்வு (Criminal) நீதிமன்றம் ஆகிய இரண்டு வகைப்பட்ட நீதிமன்றங்களிலும் சென்று இவர் வழக்குரைத்தார். புகழ்பெற்ற வழக்கறிஞராகிய இவர் தந்தை உலகநாத பிள்ளை இவரைத் தம் கைக் கீழ்ச் சிலகாலமாவது வைத்துப் பழக்கவேண்டுமென்று கருதினார்; அதனால் அவர் இவரை ஓட்டப்பிடாரத் திற்கு அழைத்துச் சென்றார். அங்கே குற்ற ஆய்வு மன்றம் மட்டுமே இருந்தது.

ஓட்டப்பிடாரத்தில்

வழக்கறிஞர் தெய்வம் போன்றவராக இருத்தல் வேண்டும். தம்மிடம் வழக்குக் கொண்டுவருபவர்களை இனிய முகம் காட்டி வரவேற்று இனியனபேசி அவர் களுடைய வழக்கினைப் பலமுறை கேட்டு உண்மையைத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். தம்மிடம் வருபவர் முறையற்ற வழக்குக் கொண்டுவந்தால் அவர்களுக்கு உண்மையின் பெருமையை எடுத்துச்சொல்லி எதிரி யுடன் சமாதானமாகும்படி செய்தல்வேண்டும். எதிரி கள் உள்ளத்திலும் தாம் நீதிநெறி தவறாதவர் என்னும் உண்மை தோன்றும்படி நடத்தல் இன்றியமையாதது. எதிரிகளிடம் கைக்கூலி பெற்றுத் தம் கட்சியினரைக் காட்டிக்கொடுக்கும் வழக்கறிஞர் அழிந்தொழிந்து சிதைந்துபோவார்கள். கட்சிக்காரரின் தகுதிக்கேற்ற படி கைம்மாறு பெறுதல் இன்றியமையாதது. ஆதர வற்றோருக்குக் கைம்மாறு பெறாமலே வலியச்சென்று

வழக்குரைத்துப் பாதுகாத்தல் வேண்டும். இங்ஙனமாகிய உண்மைகளையெல்லாம் நன்றாக உணர்ந்து தவறாது நடந்து வழக்குரைத்துவந்தார் நம் சிதம்பரனார். அதனால் கைக்கூலி பெற்றுக் கள்ள வழக்குக் கொண்டு வரும் காவலரும், அவர்கள் பக்கமாகவே சார்ந்து அவர்கள் கொண்டுவருவது பொய்வழக்காக இருந்தாலும் தண்டிக்கும் வழக்கமுடைய நீதிபதிகளும் இவருடைய பெயரைச் சொன்னாலுமே நடுங்குவாராயினர்.

ஓட்டப்பிடாரத்தில் காவலர் தலைவர் (ஏட்டு) ஒருவர் மிகவும் துடுக்கானவராக இருந்தார். அவரைக் கண்டாலே பலர் நெஞ்சு கலங்குவர்; அவ்வளவு பொல்லாதவர் அவர். அதனால் சிலர் அவரை அடித்துச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். காவலர் எவ்வளவு முயன்றும் சுட்டவரைக் கண்டுபிடிப்பது அரிதாயிற்று. அதனால் காவலர் பலரும் ஒன்றுசேர்ந்து குற்றமற்ற ஒருவரைப் பிடித்து அவரே கொலை செய்ததாகப் பொய் வழக்குக் கட்டத்தொடங்கினர்; நம் சிதம்பரனார் தூண்டுதலாலேயே அக்கொலை நடந்ததெனவும் கூறத்தொடங்கினர். ஆனால், சில பெரியார் தலையிட்டதனாலும் இவரைச் சேர்த்தால் தமது வழக்குத் தோற்றுப்போகும் என்ற அச்சத்தினாலும் இவரிடம் இவ்வழக்கில் தலையிடுவதில்லை என்று வாக்குப் பெற்றுக்கொண்டு இவருடைய பெயரைக் காவலர் அவ்வழக்கிற் பிணைக்காமல் நீக்கிவிட்டனர்.

குற்ற ஆய்வு மன்றத் தலைவர் அவ்வழக்கினை ஆராயத் தொடங்கினார். பொய்யாகக் குற்றம் சாற்றப்பட்டவர் ஆதரிப்பார் இல்லாமல் கண்கலங்கி நின்றார். காவலருக்கு அஞ்சி வழக்கறிஞர் யாரும் அவருடைய

வழக்கினை உரைக்க முன்வந்தாரல்லர். சிந்தித்தார் சிதம்பரனார்: "என்னே கொடுமை இது? ஒழுங்கான வழியில் எதிரிகள் நடந்தால் நாம் வாக்கைக் காப்பாற்ற வேண்டும்; குற்றமில்லாத நன்மை தருமானால் பொய்ம் மையும் வாய்மையாம் என்பதுதான் உலகமறை கூறும் நீதி. நான் தலையிட எண்ணுவதோ உண்மையினும் உண்மைக்கே. ஆதலின் இவ்வழக்கை நானே சென்று நடத்துவேன்." இதுவே இவர் செய்த முடிவு.

யாரும் எதிர்பாரா நிலையில் இவர் நீதிபதி முன் தோன்றினார்; பொய்ச்சான்று புகன்றோர் நெஞ்சு கலங் கிடக் குறுக்கு வினாக்களைக் கிளப்பி உண்மை வெளிப் படும்படி செய்தார். நுண்ணறிவின் விளைவாக இவர் வினவும் கேள்விகளுக்கு முன்னால் எத்தகைய பொய்ம் மையும் நில்லாது அழிவது திண்ணம், காவலர் நெஞ்சு உடைந்து வாய்குளறி ஒன்றுக்கொன்றை உளறி உடல் நடுங்கி நின்றனர். இருந்தாலும், உண்மை இதுதான் என நன்றாக முன்னரே அறிந்திருந்த மாவட்ட நீதிபதி ஒரு குற்றமும் செய்தறியாதவரைத் தமது மனச்சான்று சுட்டும் தண்டித்துவிட்டார்; ஆனால் வழக்கு உயர்நீதி மன்றம் சென்றபோது சிதம்பரனார் வினாக்களால் வெட்டவெளிச்சமான உண்மைகளை உணர்ந்து நீதிபதி அப்பொய் வழக்கைக் கண்டித்துத்தள்ளி விடுதலை செய்தார். பொய்ம்மையால் தூக்குமேடை ஏறஇருந்த ஓர் உயிர் தப்பிப்பிழைத்தது.

காவலர் இதனால் மிகவும் ஆத்திரம் அடைந்தனர். அதனால் அவர்கள் தாம் கொண்டுவந்த சாட்சிகளை இவர் உலைத்தார் என்று ஒரு பொய்வழக்குத் தொடர்ந்தார்கள். இதனை ஆராய்ந்த நீதிபதி இலயோனல் வைபர்ட்டு

என்ற ஆங்கிலர் உண்மையைத் தெரிந்து அப்பொய் வழக்கைத் தள்ளியதோடு இவருக்குக் காவலர் நட்டஈடு கொடுக்கவேண்டும் என்றும் தீர்ப்பளித்தார். இதனால் வாய்த்த்விடும்போய் அடுப்பு நெருப்பும் அவிந்தவர் போலக் காவலர் அடங்கி ஒடுங்கினர்.

குற்ற ஆய்வு நீதிபதி ஒருவர் எவரையும் மதியாது வாயில்வந்தபடி இகழ்ந்துவந்தார். அவர் வேலை நிலைய எழுத்தாளர் இருவர் அவர் பெயரைச் சொல்லிக் கைக்கூலி வாங்கிவந்தார்கள். ஊராரிற் சிலர், 'நீதிபதியே கைக்கூலி வாங்கினர்' என வழக்குத் தொடர்ந்தார்கள். அவ்வழக்கை நடத்தினர் வீரர் சிதம்பரனர். "எனக்கு என்ன வருமோ, ஏது விளையுமோ? ஒருவேளை வேலையே தொலைந்துபோகுமோ?" என இடியேறுண்ட நாகம் போல அஞ்சி நடுங்கிய நீதிபதி இவரைத் தஞ்சம் அடைந்து தம்மைப் பாதுகாக்கவேண்டுமெனப் பணிந்தார். "எனக்கு நல்ல மதி வந்துவிட்டது. இனி யாரையும் இகழேன்; கைக்கூலி வாங்கிய எழுத்தாளரையும் தண்டிப்பேன்," என அவர் வேண்டிக்கொள்ள இளகிய உள்ளமுடைய இவர் வழக்கைப் பின்வாங்கினர். நீதிபதி நன்றியுடையவராகித் திருந்தியதோடு கைக்கூலி பெற்றுரில் ஒருவரை வேலையைவிட்டு நீக்கி, மற்றவரைத் தாழ்த்தினர். உண்மைக் குழைத்த நம் வீரர் புகழ் எங்கும் பரந்து ஓங்குவதாயிற்று.

தூத்துக்குடியில்

1895-ல் இவர் சட்டம் படித்துத் தேர்ந்து வழக்குரைஞராக வந்தவுடனேயே இவருக்குத் திருமணம் நடைபெற்றது. திருச்செந்தூர்ச் செல்வர் சுப்பிரமணிய பிள்ளையினுடைய திருமகள் மகராசி என்ற வள்ளியம்

மையை இவர் திருமணம் செய்துகொண்டார். பத்தாவுக்கேற்ற பதிவிரதையாகி அவ்வம்மை விளங்கினுர்.

பல நண்பருடைய வற்புறுத்தலினுலே இவர் 1900 ஆண்டில் தூத்துக்குடிக்கு வந்து நிலையாகத் தங்கி வழக்குரைப்பா ராயினுர். வேதநாயகன் என்பவன் ஓர் ஆதித் தமிழன்; அவனைக் காவலர் ஒரு வழக்கிற் பொய்ச்சான்று புகல வற்புறுத்தினர்; ஆனுல் அவன் பொய் சொல்ல மறுத்துவிட்டான்; அதனுல் அவர்கள் அவன்மேல் பற்பல பொய் வழக்குகள் தொடர்ந்து துன் புறுத்தத் தொடங்கினர். அதனை அறிந்த நம் வீரர் அவனுக்காக வழக்குரைத்து அவனைப் பாதுகாத்து உதவினுர்.

ஆறுமுகம் பிள்ளை என்பவர் ஒரு கொலை வழக்கிலே அகப்பட்டுத் தவித்தார்; இவர் அவருக்காக வாதாடி வெற்றிபெற்று அவரை விடுவித்தார். அவர் பின் திருவாவடுதுறை மடத்திற் சேர்ந்து தம்பிரானுகிச் சிதம்பரத்திலும் மதுரையிலும் இவர் செய்த நன்றியை மறவாது நெடுங்காலம் வாழ்ந்திருந்தார். காவலராலோ செல்வராலோ துன்புறுத்தப்படும் ஏழைமக்களை அழைத்துத் தம்வீட்டில் வைத்து உணவூட்டி வழக்காடி அவர்கள் நலம் பெறும்படி செய்து காப்பதையே இவர் தமது முதற் கடமையாகக் கொண்டிருந்தார்.

ந. பொதுநலச் சேவை

வள்ளியம்மையார்

குடும்ப வாழ்க்கை இனிது நடைபெற வேண்டுவதற்கு இன்றியமையாதது கணவனும் மனைவியும் ஒற்றுமையோடு வாழ்தலே. உலகப் பொது மறையாகிய

திருக்குறளை நன்கு அறிந்திருந்த வள்ளியம்மையார் தம் கணவர் குறிப்பறிந்து நடப்பதில் மிக வல்லவர்.

"எண்ணிலா நண்பரை இழுத்துக் கொண்டுயான்
உண்ணச் செல்லுவேன் உரையாது முன்னர் ;
அறுசுவை அடிசில் அன்பொடு படைப்பாள் ;
சிறிதும் தாமதம் தெரிந்திலேன் ஒன்றும்.
பாடுவள் இன்புறப் பாதம் வருடுவள்,
உடையோ நகையோ ஒன்றும் என்றும்
படை எனக் கேட்டிலள் ; பண்பெலாம் செய்தனள்."

இங்ஙனம் சிதம்பரனார் "என் கதை" என்ற நூலிற் பாடியிருக்கிறார். இவ் வம்மையின் குணநலங்கள் இக்கால மகளிர்க்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகின்றன.

உலகில் வாழும் மக்கள் அனைவரும் ஒரே குலம்; இவ் வுண்மையைப் பல புலவர்கள் மேடைமீதேறிப் பலபடப் பேசுவர் ; ஆனால் செயல்முறையில் இதனை மேற்கொண்டோர் ஒரு சிலரே. அவ் ஒரு சிலரில் தலை சிறந்தவர் நம் சிதம்பரனார். விருதுபட்டியைச் சேர்ந்த ஒரு துறவி ஆதித்தமிழர் ; அவரை இவர் தமது வீட்டிற்கு அழைத்து வந்து உணவருந்தினர். அத் துறவி இரண்டு கண்ணும் தெரியாதவர் ; ஆதலின் வள்ளியம்மையார் அருகிலேயே இருந்து உணவைப் பிசைந்து பெற்ற தாயாரைப்போல அவருக்கு ஊட்டினார் என்றால் இவ் வம்மையாரின் பெருங்குண நலத்தை எங்ஙனம் புகழ்வது ?

சாதிக் கோட்டையே சச்சரவுகளுக்கெல்லாம் விளை நிலம். அதனைத் தகர்த்தெறிந்தால்தான் உண்மையான நன்மை உலகில் ஓங்கும். இதனை நன்றாக அறிந்த பேரறிஞராகிய சிதம்பரனார் அக்கோட்டையைத் தகர்த்தெறிய அரும்பாடு பட்டார்.

1900-ல் வள்ளியம்மையாரைக் காலன் கவர்ந்து சென்றான். அதனால் நெஞ்சு கலங்கிப் புலம்பினார் சிதம்பரனார். அப் புலம்பலில் தளிர்த்த அரிய பாடல்களுள் பின் வருவது ஒன்று :

> "இல்லமதில் ஒன்றுமே இல்லை என்னாள் ; எக்காலும்
> நல்லுணவு தான்சமைத்து நல்குவாள்—அல்லல்ஒழித்து
> இன்புறவே செய்திடுவாள் எப்பணியும் உள்ளமுடன்
> அன்புமிக நல்லாள் அமைந்து."

இவருடைய மைத்துனர் முடிமன் புலவர் முத்துசாமிப் பிள்ளை இவ் வம்மையின் வரலாற்றை "வள்ளியம்மையார் வரலாறு" என்ற பாடல் நூலாகப் பாடியிருக்கிறார். அதில் இருநூற்றுப் பதினாறு நேரிசை வெண்பாக்கள் உள்ளன. இந்நூல் சிதம்பரம் பிள்ளை எழுதிய குறிப்புரையுடனும் பல அகவற்பாவுடனும் பல கடிதங்களுடனும் அச்சிடப்பெற்றது. இந்நூலைப் படிக்கும் பெண்கள் தம் கணவரிடத்தில் நடந்துகொள்ளும் வழிகளை நன்கறிந்து நலம் பெறுவர் என்பது திண்ணம்.

தமது மனக்கவலை தீர இவர் வள்ளியம்மையாருடைய நெருங்கிய உறவினரான ஆழ்வார் திருநகரி மீனாட்சி யம்மையாரை மணம்புரிந்து கொண்டார். இவ் வம்மையாரும் தமது சிறந்த ஒழுக்க மேம்பாட்டினால் சிதம்பரனாருக்கு உறுதுணையாகி விளங்கினார்.

கப்பல் ஓட்டிய தலைவர்

இவர் ஒரு சமயம் சென்னைக்குச் சென்றிருந்தார். அங்கே ஒரு பெரிய முனிவர், "நம்நாடு அடிமை வாழ்வு நீங்கி விடுதலை பெறவேண்டுமானால் நம் நாட்டில் எல்லாக் கைத்தொழில்களும் வளரவேண்டும்; எவ்வளவு இன்றியமையாத பொருள்களாக இருந்தாலும் அயல்

நாட்டுப் பொருள்களை வாங்குதல் கூடாது ; விலை மிகுதி யாக இருந்தாலும் நம் நாட்டுப் பொருள்களையே வாங்கு தல்வேண்டும்'' என்று பச்சைப்பாலர் மனத்திலும் படும் படி பேசுவதை இவர் முன்நின்று கேட்டார். அவர் பேசிய நல்லுரை இவர் நெஞ்சில் வேர் ஊன்றிற்று. வங்காளத்தில் இவ் வுணர்ச்சி அப்போது வளர்வதை அறிந்த சிதம்பரனார் மேலும் ஊக்கம் பெற்றார். அத னால் தூத்துக்குடிக்குத் திரும்பி வந்தவுடனே "தொழில் வளர் சங்கம், தருமச் சங்கம்'' என்ற சங்கங்களை இவர் நிறுவினார். அவைகளின் விளைவாகத் தருமச் சங்க நெச வுச் சாலையும் சுதேசிப் பண்டச்சாலையும் தோன்றின.

ஆங்கிலேயர் கப்பலில் வாணிகம் செய்யவே இந்தியா வுக்கு வந்தார்கள். அவர்களுக்குமுன் இந்தியாவுக்கு வந்த ஐரோப்பியர் போர்ச்சுக்கீசியரும் தச்சுக்காரரும் பிரெஞ்சுக்காரரும் ஆவர். அவர்கள் நாளடைவில் நாடு பிடிக்கவும் துணிந்து இந்திய மன்னர்களின் ஒற்றுமை யின்மையையும் தளர்வையும் துணையாகக் கொண்டு இந்தியா முழுமையையும் கைப்பற்றினர். அவர்களில் பெருஞ் சூழ்ச்சிக்காரராகிய ஆங்கிலேயரே இந்தியாவிற் பெரும் பகுதிக்கு மன்னவராயினர்.

"ஆங்கிலேயர் இங்கே கிடைக்கும் பருத்தி முதலிய பொருள்களையெல்லாம் தம் நாட்டுக்குக் கொண்டுபோய் அருமையான ஆடைகள் முதலிய பல பொருள்களை இயந்திரங்களின் உதவியால் எளிதில் ஆக்கி இந்தியா வுக்குக் கொண்டுவந்து விற்று ஒன்றுக்குப் பத்தாக ஊதியம் பெற்றுச் செல்வத்தில் ஓங்கினர்; இந்தியரோ தாமே சுருங்கிய விலைக்கு விற்ற பொருள்களை வேற்றுரு வில் பெருகிய விலைகொடுத்து வாங்கி ஏழைகளாகிக்

கலங்கினர். இங்ஙனமான ஆங்கிலர் நிலைமைக்கு அடிப் படை உதவியாக இருப்பது கப்பலே. ஆதலின் இந்தி யரும் கப்பல் ஓட்டி வாணிகம் செய்தால் மேல்நிலை அடைதல் எளிது,'' என எண்ணிய சிதம்பரனுர் கப்பல் ஓட்ட முடிவு செய்தார். அதற்காக இவர் "நாவாய்ச் சங்கம்" என ஒரு சங்கத்தைத் தொடங்கினுர்.

நாவாய்ச்சங்கம் பதிவு செய்யப்பெற்றது. அதற்கு வேண்டிய மூலப்பொருள் பல இலக்க ரூபாய்கள். அத் தொகை பல பங்குகளாகப் பிரிக்கப்பெற்றுச் சேர்க்கப் பெற்றது. சிதம்பரனுர் பல செல்வர்களைச் சென்று கண்டு பணம் திரட்டினுர். இவர் பாலவனத்தம் குறுநில மன்னராக விளங்கிய பாண்டித்துரைத் தேவரைக்கண்டு தமது கருத்தைத் தெரிவித்தார். இவரைப்போலவே அளவில்லாத நாட்டுப் பற்றுடைய அத் தமிழ் மன்னர் உடனே ஓரிலக்கம் ரூபாய்களுக்குமேல் பங்குத்தொகை தந்து அச்சங்கத்தின் தலைவராக இருக்கவும் இசைந்துத விஞர்.

நாவாய்ச்சங்கம் நன்முக நடைபெறுதபடி பல உடன் நாடு சத்துருக்கள் கேடுசூழ்ந்தனர். இருந்தாலும் இவர் தமது குன்ருு ஊக்கத்திஞலே முதன் முதலாகச் "சூசான்" என்ற ஒரு கப்பலை வாடகைக்கு வாங்கிஞர். இதனைக் கண்ட வெள்ளையர் கப்பற்சங்கம் விழித் தெழுந்தது; அதன் கப்பற்றலைவன் இலெப்பர்டு என்ற சட்டைக்காரன் கலங்கிஞன்; கூலியை மிகமிகக் குறைத் தான்; கெஞ்சிஞன்; கதறிஞன். என்ருலும் வியாபாரி கள் அனைவரும் சூசான் கப்பலிலேயே தம் தம் பொருள் களை ஏற்றி அனுப்புவாராயினர். சட்டைக்காரன் முயன்று சூசான் கப்பற்றலைவனை எப்படியோ தன்

கைக்குட் போட்டுவிட்டான்; அதனால் அப் பாதகன் செய்த தவறுகளைக் கண்டறிந்த சிதம்பரனார் தமது சங்கத்துக்குச் சொந்தமாகக் கப்பல்கள் வாங்கவேண்டு மென்று தீர்மானித்தார்.

குறைந்தது இரண்டு கப்பல்களாவது வேண்டும்; வாங்குவதற்குப் போதுமான பணமோ இல்லை; "என்ன செய்வீர்கள்?" என்று கேட்ட நண்பருக்கு, "திரும்பினால் கப்பலோடு திரும்புவேன்; இல்லையானால் கடலில் விழுந்து மடிவேன்," என்று மறுமொழிகூறி இவர் புறப்பட்டுப் பம்பாய் சென்றடைந்தார். கடவுளை நம்பி னோர் கைவிடப்படார் என்பதும் தளரா ஊக்கமுடையவ னிடத்து ஆக்கம் வழிகேட்டு வலியத்தேடி வந்தடையும் என்பதும் முதியோர் வாக்கல்லவா? சிதம்பரனார் "காலியா", "இலாவோ" என்ற இரண்டு கப்பல்களை வாங்கிக்கொண்டு தூத்துக்குடிக்கு வந்துசேர்ந்தார். இவர் பம்பாயிலிருந்தபோது இவருடைய தலைமகன் மகராசன் என்ற உலகநாதன் நோய்வாய்ப்பட்டுத் துன் புற்றான்; இவருடைய மனைவியார் பேறுகால வேளையில் இருந்தார். இவைகளையெல்லாம் அறிந்தும் திரும்பும் படி நண்பரால் தூண்டப்பட்டும் இவர் கப்பல் வாங்கும் வரை பம்பாயிலேயே தங்கினார். அண்டம் இடிந்து விழுந் தாலும் நெஞ்சங் கலங்காத வீரரே ஆண்டவனருளால் எண்ணியவற்றை எண்ணியபடியே அடைவார்கள்.

நாவாய்ச்சங்கத்திலே செல்வாக்குடைய சில பொறாமைப் பேயர் இருந்தனர்; அவர்கள் இவருக்குப் பலவாறு தொல்லைகள் தந்தனர். ஒருசமயம் அவர்கள் இவரைச் சங்கத்திலிருந்தே விலகும்படி வற்புறுத்தி னார்கள். அப்போது அச்சங்கத்தைச் சேர்ந்த சி. த. ஆறு

முகம் பிள்ளை என்ற பெரியார் தம் நண்பராகிய வணிகர் அருணாசலம் பிள்ளையைத் துணையாகக்கொண்டு அப் பேயர்களைக் கடுமையாகக் கண்டித்துப்பேசினார். அதனால் அவர்கள் அஞ்சி இவருக்குத் துன்பம் தராது அடங்கினர். இங்ஙனமாக அப்பெரியார் செய்த நன்றியை மறவாமல் இவர் தம் இரண்டாவது மகனுக்கு ஆறுமுகம் என்று அவர் பெயரைவைத்துப் போற்றினார். நன்றி மறவாதவரே உலகம் உள்ளளவும் அழியாத புகழைப்பெற்றுச் சிறந்து வாழ்வார்கள். இங்ஙனமாக ஓராண்டு கழிந்தது. ஆங்கிலக்கப்பற் சங்கத்தார் நாவாய்ச் சங்கத்தை அழித்து ஒழிப்பதற்கு அரசாங்கத்தின் துணையை நாடியிருந்தனர்.

காங்கிரசுத் தொண்டு

1906-ல் இவர் ஒருசமயம் சென்னைக்குச் சென்றிருந்தார். அங்கே "இந்தியா" என்ற தாளின் தலைவர் திருமலாச்சாரியார், சுப்பிரமணிய பாரதியார் ஆகிய இவர்களுடைய நட்பு இவருக்குக் கிடைத்தது. அடிக்கடி திருவல்லிக்கேணிக் கடற்கரையில் இவர்கள் மூவரும் கலந்து பேசியதின் பயனாகச் சென்னையில் "மக்கள் சங்கம்" என்பது தோன்றிற்று. அவ்வாண்டிலேதான் உலகப் புகழ்பெற்ற இந்தியப் பெரியார் இலாலா லசபதி ராய் மாண்டலேக்கு நாடுகடத்தப்பட்டார். அப்போது இருபத்திரண்டாவது மாகாண அரசியல் மாநாடு திருநெல்வேலியில் நடைபெற்றது. அதிலே அரசாங்கத்தின் இந்த இழிந்த செயலைக் கண்டித்துச் சிதம்பரனாரும் சங்கரன் நாயரும் சுதேசமித்திரன் ஆசிரியர் சுப்பிரமணிய ஐயரும் சுப்பிரமணிய சிவாவும் மிகவும் வீரமாகப் பேசினார்கள். தொண்டர்கள் ஒருவரை

ஒருவர் காணும்போது "வந்தேமாதரம்" என்று கூறி வணங்கும் முறைமை இந்த மாநாட்டிலேதான் உருவாயிற்று. இந்தச் சமயத்திலேதான் நாவாய்ச்சங்கமும் தோற்றுவிக்கப்பெற்றது.

காங்கிரசில் மிதவாதிகளென்றும் தீவிரவாதிகளென்றும் இரண்டு பிரிவினர் இருந்தார்கள். ஆங்கில அரசாங்கத்தை எதிர்ப்பது போலப் பேசி அது தரும் உயர்ந்த பதவிகளை ஏற்றுக்கொண்டு காங்கிரசை விட்டு விலகும் தம்நல வாதிகளே மிதவாதிகள். ஆங்கிலேயரை உடனே நாட்டைவிட்டு ஓட்டவேண்டும், இந்தியத்தாய் முழுவிடுதலை பெறவேண்டும் என்று எதிர்த்து அதனால் அரசாங்கம் செய்யும் எத்துன்பத்தையும் பொறுமையுடன் ஏற்று விளங்கினவரே தீவிரவாதிகள். அதனால் தீவிரவாதிகள் சிலராகவும் மிதவாதிகள் பலராகவும் காங்கிரசில் இருந்தார்கள்.

1907-ல் சூரத்துமா நகரில் காங்கிரசு மாநாடு நடைபெற்றது. அதற்குச் சிதம்பரனாரும் சென்றிருந்தார். இவர் தீவிரவாதி; பம்பாயின் முடிசூடா மன்னராகிய பாலகங்காதர திலகர்தான் தீவிரவாதிகளின் தலைவர். மிதவாதிகளோ அம்மாநாட்டுக்கு இராசுபிகாரிகோசு என்ற பெரியாரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருந்தார்கள். அவர் தமது அச்சிட்ட தலைமையுரையில் தீவிரவாதிகளைப் பற்றிக் குறைவாக எழுதியிருந்தார். தலைவரைத் தலைமை பூணும்படி வேண்டிக் கொள்ளும் வேளையிலே திலகர் பெருமான் மேடைமீது தோன்றி "இத்தலைவர் பொருத்தமற்றவர்; ஆதலின் நாங்கள் இவர் தலைமையை எதிர்க்கிறோம்" என்று முழங்கி நின்றார், உடனே பெரிய கலகம் நடந்தது;

அதில் நாற்காலிகளை ஒருவர்மீது ஒருவர் எறிந்து போராடினர்; அதனால் மாநாடு குழப்பத்தில் முடிந்தது. அப்போது திலகருக்கு இரண்டு கைகள்போல இருந்து உதவி செய்த பெரியார் சிதம்பரம்பிள்ளையே. இவரது வீரத்தையும் உண்மைக்காக எதையும் பொருட்படுத்தாமல் எதிர்த்துப் போராடும் உண்மை உணர்ச்சியினையும் திலகர் தெரிந்து மகிழ்ந்தார்.

மறுநாள் நடைபெற்ற தீவிரவாதிகள் கூட்டத்திலே மிதவாதிகளோடு சேராமல் தாம் தனித்துத் தொண்டாற்றுவதே சிறந்த பணி என்பது முடிவு செய்யப்பெற்றது. பம்பாய் மாகாணத்தின் செயலாளராகத் திலகர் தேர்ந்தெடுக்கப்பெற்றார். அங்ஙனமே அரவிந்தர் வங்காளத்துக்கும், சிதம்பரனார் சென்னைக்கும் செயலாளர் ஆயினர். அன்று தொடங்கி இவர் தென்னாட்டுத் திலகர் என எல்லாராலும் புகழ்ந்து போற்றப்பெற்றார். நாட்டுத் தொண்டில் இவரை ஒப்பாரும் மிக்காரும் அன்றும் இன்றும் என்றும் இருந்ததில்லை என்பதே உண்மை. சூரத்திலிருந்து திரும்பிவரும் வழியில் இவர் சுப்பிரமணியபாரதியாரோடு சென்னைக்கு வந்து அங்கே பல இடங்களில் பேசினார். 1908 சனவரி மாதம் தூத்துக்குடியில் சென்னை மக்கள் சங்கத்தின் கிளை நிலையமாக ஒரு சங்கம் இவரால் தோற்றுவிக்கப்பட்டது. இவர் திருநெல்வேலிக்குச் சென்று அங்கே "தேசாபிமானச் சங்கம்" என்பதை அமைத்தார்.

போர் தொடங்கியது

தூத்துக்குடிக் கோரல் மில் முதலாளிகள் தொழிலாளருடைய நலத்தை ஒரு சிறிதும் பேணாதவராகிக்

கடுமையாகவே வேலை வாங்கிக்கொண்டு மிகச் சிறுகிய கூலியே கொடுத்துவந்தார்கள் ; தொழிலாளருக்கு இவ் வுண்மை புலனாயிற்று. உடனே அவர்கள் தமக்குத் தக்க கூலி தருதல் வேண்டும் எனக் கிளர்ச்சி செய்தார் கள். வெறும் பேச்சினால் பயன் விளையாமை கண்டு அவர்கள் அனைவரும் வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர்களை ஆதரித்துப் பேருதவி செய்து பாதுகாத்தார் சிதம்பரனார்.

நாடோறும் கடற்கரையிலே கூட்டம் போட்டு முதலாளிகளுடைய கொடுமைகளைக் கண்டித்துத் தொழிலாளருடைய உரிமைகளை இவர் எடுத்து விளக்கி னார் ; முதலாளிகளையும் அணுகி நீதி வழங்கும்படி வேண்டிக்கொண்டார். திருநெல்வேலியில் அரசியற் கூட்டங்களை ஒவ்வொரு நாளும் கூட்டி வெள்ளையர் செய்த கொடுமைகளையும் மக்கள் படும் துன்பங்களை யும் எடுத்துப் பேசிக் கிளர்ச்சி செய்துவந்த மெய்த் துறவி சுப்பிரமணிய சிவாவை இவர் தூத்துக்குடிக்கு வரவழைத்தார். இவர்கள் செய்த பேருரைகளின் விளை வாக எங்கே பார்த்தாலும் " வந்தேமாதரம், இந்தியர் வாழ்க, ஆங்கிலர் அழிக " என்ற பேரொலி கிளம்பிற்று.

தூத்துக்குடியில் இருந்த வெள்ளையர் யாவரும் அஞ்சி நடுநடுங்கி ஏழுமைலுக்கு அப்பால் கடலிலே நின்று கொண்டிருக்கும் கப்பலிலே சென்று இரவுப் பொழுதினைக் கழிப்பாராயினர். பொதுவிடங்களில் இவரும் சிவாவும் பேசுதல் கூடாது என்று அரசினர் ஆணையிட்டனர் ; அதனால் இவர் பதுமநாப ஐயங்கார் என்ற நண்பரைக் கடற்கரையிலே பேசும்படி செய்து, தாம் சிவாவுடன் நாடோறும் தருமச் சங்க நெசவுச்

சாலையிலும் பள்ளிவாசற்பேட்டையிலும் பேசி வந்தார். மேலும் இவர் தமிழ் நாட்டிலுள்ள பற்பல நகரங்களுக்கும் சென்று உணர்ச்சி ததும்ப வீர முழக்கம் செய்தார். அதன் பயனாக வெள்ளையரைத் துரத்தி, விடுதலை பெற வேண்டும் என்ற உணர்ச்சி எங்கும் கொழுந்துவிட்டெரிவதாயிற்று. அரசினர் செய்வதின்னதென அறியாது தவித்தனர்.

ஆங்கிலக் கப்பற் சங்கத்தார் இவரை அணுகி, "ஓரிலக்கம் ரூபாய் தருகிறோம்; நாவாய்ச் சங்கத்தை விட்டு விலகிவிடுங்கள்" என்று வேண்டிக்கொண்டார்கள். ஒருநாள் கலெக்டர் விஞ்சு வழக்கறிஞர் குருசாமி ஐயருடன் தூத்துக்குடிக்கு வந்து, "தாங்கள் பம்பாய் சென்றுவிடுங்கள்; தங்களுக்கு வேண்டும் துணைகளும் பரிசுகளும் வழங்கப்பெறும்" என்று இவரிடம் வேண்டிக்கொண்டார். நாவாய்ச்சங்க ஆட்சியாளர் ஒன்று கூடி "இவருடைய அரசியற் கிளர்ச்சியினாலே நாவாய்ச் சங்கம் அழிந்துவிடும், அதனால் இவர் அரசியலைக் கைவிடுதல் வேண்டும்" என்று தீர்மானித்தார்கள். இவர் எதற்கும் இணங்காமல் தமது மனச்சான்று கூறியபடி நாட்டுக்குச் செய்யவேண்டும் கடமையாகிய தொண்டிலே ஊன்றி நிற்பாராயினர்.

9-3-1908-ல் தம்மை வந்து காணும்படி கலெக்டர் இவருக்கு ஆணையனுப்பினார். அதன்படி இவர் அன்று திருநெல்வேலிக்குச் சென்று அவரைக் கண்டார்; மறுநாள் வரும்படி கலெக்டர் கூறினார். அன்று விபினசந்திர பாலரின் விடுதலை நாள். தண்பொருநை ஆற்றங்கரையில் ஒரு மாபெருங் கூட்டம் கூடியிருந்தது. தைப்பூச மண்டபத்தின் முன் அரசினர் ஆணையை மீறி இவர்

பேசினார். நாட்டுப் பற்றும், அடிமையிலிருந்து மீள வேண்டுமென்ற உணர்ச்சியும், அடிமைப்படுத்தி நாட்டு வளத்தைக் கொள்ளை கொண்டுபோகும் வெள்ளையர் மீது அடங்காத சினமும் மூளும்படி உணர்ச்சி வேகத்திலே சென்றது இவரது பேச்சு; அதனைக் கேட்டவரனைவரும் அவ் உணர்ச்சி வெள்ளத்திலே மெய்ம்மறந்து மிதப்பாராயினர்.

௪. சிறை வாழ்க்கை

சுதேசிக் கலகம்

13-3-1908-ல் கலெக்டர் விஞ்சின் முன்சென்று நின்றார் சிதம்பரனார். அவரோடு சுப்பிரமணிய சிவாவும் பதுமநாப ஐயங்காரும் இருந்தார்கள். விஞ்சுக்கு அவர்கள்மேல் கடுங்கோபம் இருந்தது. அதனால் அவர், "உங்கள்மேல் நன்னடத்தைப்பிணை வழக்குத் தொடர்ந்திருக்கிறோம். அது முடியும்வரை சிறையில் இருங்கள்" என்று மூவரையும் குலமாணிக்கபுரம் சிறைச்சாலைக்கு அனுப்பினார். அப்போது சிதம்பரனார், "இந்நாளே நன்னாள். எங்கள் இந்தியத்தாய் விடுதலைப்போரின் கொடியேறிவிட்டது. இனி விடாது இப்போரை நடத்தி வெற்றிபெறுவோம்" என்று கூறி முகமலர்ச்சியுடனே சிறைக்குச்சென்றார்.

இச்செய்தி காட்டுத் தீயைப்போல ஒரு நொடிப் போதில் ஊரெங்கும் பரவிற்று. அதன் விளைவாகத் திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் மக்கள் கிளம்பிக் கலகஞ்செய்தார்கள். திருநெல்வேலிப் பாலத்திலிருந்து பள்ளிப்பிள்ளைகளும் வாலிபர்களும் ஆக ஒரு பெருங் கூட்டம் புறப்பட்டுத் திருநெல்வேலி நகரைநோக்கிச்

சென்றது; எதிரே வந்த இரண்டு வெள்ளையர்களை அடித்துத் துரத்தியது; சர்ச்சு மிசன் கல்லூரியில் நுழைந்து கல்லூரித் தலைவர் சாப்டரை "வந்தே மாதரம்" என்று சொல்லும்படி வற்புறுத்தியது; அவர் ஒரு முறைக்கு ஒன்பது முறை வந்தே மாதரம் என முழங்கித் தப்பினார். கடைகளெல்லாம் சாத்தப்பட்டன; தெரு விளக்குகளெல்லாம் உடைக்கப்பட்டன; காவலர் நிலையம் தீக்கிரையாயிற்று; பொருள் நீதிபதி (District Munsif) நீதிமன்றத்தை அடைத்துவிட்டு ஓடிவிட்டார்; அஞ்சல் நிலையத்தின் ஒரு பகுதி தீக்கிரையாயிற்று; நகராட்சி நிலையமும் அதன் பொருட்சேமிப்பு அறையும் கொளுத்தப்பட்டன: வைத்தியச்சாலையில் தட்டுமுட்டுச் சாமான்கள் பொடியாயின. இங்ஙனமாக நெல்லைமா நகரம் அல்லோலகல்லோலப் பட்டுப்போயிற்று.

செய்தியறிந்த கலெக்டர் விஞ்சு காவலர் தலைவரை அழைத்துக்கொண்டு ஒரு காவற்படையுடன் பறந்து வந்தார்; அக்கூட்டம் நகரினுள் நுழையாதபடி அவரைத் தாக்கிற்று. அதனால் அவர் துப்பாக்கியினாலே சிலரைச் சுட்டுக் கூட்டத்தைக் கலைக்கவேண்டிய நெருக்கடி ஏற்பட்டது; அதனால் நால்வர் மடிந்தார்கள்.

அதேசமயத்தில் தூத்துக்குடியிலும் பெருங் கலகம் நடந்தது. உதவிக் கலெக்டர் ஆசும் காவலரும் தாக்கப்பட்டார்கள். அதனால் சிலர் சுடப்பட்டார்கள். மறுநாள் தச்சநல்லூரிலும் ஒரு சிறுகலகம் நடைபெற்றது; பல ஊர்ப்பொதுப்பொருள்கள் சிதைந்தன.

கலகம் நடந்த அன்றும் மறுநாளும் கோடரிக் காம்புகளாகிய பல காவலர் தமது வயிறு வளர்ப்பதையும், பொருள் தேடுவதையும், வேலையில் உயர்வதையுமே

எண்ணித் தம் உடன்பிறப்பாளராகிய நகர மக்களைத் துன்புறுத்துவாராயினர். பலர் தடியால் அடியுண்டனர்; பலர் சிறையில் இழுத்துக்கொண்டுபோய்த் தள்ளப்பட்டனர்; காவலர் பலர் மனித வேட்டையாடிப் பொருள் சேர்த்தனர்.

கலக நிகழ்ச்சிகளை அறிந்த சிதம்பரனார், "அந்தோ! இவர்கள் அழித்த பொருள்கள் இவர்களுடைய பொருள்கள்தாமே: அறியா மக்கள், என்செய்வர்? இதனால் வெள்ளையர் அடைந்த கேடென்ன?" என்று மனம் நொந்தார். இத்தனை குழப்பத்திலும் இவருக்காக நீதி மன்றத்தில் வழக்காடும் பொருட்டு நெல்லைச் சாது கணபதி பந்துலுவும், சீவைகுண்டம் மகாதேவ ஐயரும், தூத்துக்குடி வெங்கு ஐயரும் முன்வந்தார்கள். சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து 21-3-1908-ல் இவரைப் பிணையில் விடுக என ஆணைபிறந்தது. அவ்வாணை 23-3-1908-ல் நெல்லையிற் கிடைத்தும், அதேவேளையில் இவர்மேல் அரச நிந்தனைக்குற்றம் சாட்டி வழக்குத் தொடரும்படி கவர்னரிடமிருந்து கலெக்டருக்கு ஆணை வந்துசேர்ந்தபடியால் இவர் அன்றே விடுதலை செய்யப்பெறவில்லை.

24-3-1908 காலையில் இவர் விடுதலை செய்யப் பெற்றார்; ஆனால் உடனே அரசநிந்தனைக் குற்றத்துக்காக இவர் மறுபடியும் சிறைசெய்யப்பட்டார். இவரும் இவருடைய நண்பர்கள் இருவரும் பெரிய குதிரைகள் பூட்டிய வண்டிகளிலே முன்னும் பின்னும் மெய்க்காவலர் காவல் செய்துவருவதுபோலப் பல காவற்படைப் பெரிய அதிகாரிகள் வர, சாலையின் இருமருங்கிலும் பெரும் கூட்டத்தினர் கூடிப் பார்த்துநிற்கக் கொக்குறைகுளத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள். முடிமன்னர் நகர்வலம் வருவதுகூடக் கெட்டதுகேடு;

அவ்வளவு விமரிசையாக இருந்தது, அப்போது இவர்தம் தோழருடன் சென்ற செலவு."

நெல்லை மாவட்ட நீதிபதி "பின்னி" வழக்கினை ஆராய்ந்தார். "வணிகராக வந்த வெள்ளையர் பல சூழ்ச்சிகளாலே தமது நாட்டைக் காட்டிலும் பலமடங்கு பெரிய நமது இந்தியாவைக் கைப்பற்றி அரசாளத் தொடங்கிப் பல கொடுமைகள் செய்துவருகின்றனர்; தமது ஆங்கில மொழியைப் படித்தவருக்கே பெரிய வேலைகள் தந்து சிறப்புச் செய்கின்றனர். தாய்மொழியில் வல்ல பல புலவர்கள் வேலையின்றித் தவிக்கின்றனர். நாம் பழையபடி சுதந்திரம் பெற்று வாழவேண்டுமானல் புறநாட்டுப் பொருள்கள் மிக மலிவாக இருந்தாலும் வாங்குதல் கூடாது; அவைகளைக் காட்டிலும் நம்நாட்டுப் பொருள்கள் விலை மிக உயர்வாக இருந்தாலும் வாங்குதல் வேண்டும். நமது நாட்டில் கைத்தொழில்கள் வளருதல் வேண்டும்; நாமே உலக முதல் மாலுமிகள்; இன்று பேடிகள்போல வாழ்கின்றோம்; வாரும் நாமும் கப்பல் ஓட்டிப் புகழ்பெறுவோம்," என்று இவர் பற்பல இடங்களிலே மக்களைக் கூட்டி உரிமை உணர்ச்சியைத் தட்டியெழுப்பியது குற்றமாகுமா?" என்று வழக்குரைக்கப்பெற்றது. நீதிபதி பின்னியோ "அடிமைகளாகிய இந்தியருக்குப் பொது மக்களைக் கூட்டிப்பேசும் உரிமை கிடையாது. ஆதலின் சிதம்பரம் பிள்ளைக்கும் சுப்பிரமணிய சிவாவுக்கும் தனித்தனி அரசநிந்தனைக் குற்றத்துக்காக ஓர் ஆயுள் தண்டனை விதிக்கின்றோம்; சுப்பிரமணிய சிவாவை ஆதரித்த குற்றத்துக்காகச் சிதம்பரம் பிள்ளைக்கு மற்றும் ஓர் ஆயுள் தண்டனை விதிக்கின்றோம்" என்று 7-7-1908-ல் தீர்ப்புரைத்தார்.

இம்முறையற்ற கொடுந் தீர்ப்பைக்கேட்ட உலகப் பெரியார் அனைவரும் கண்டித்துரைத்தனர். இந்தியா மந்திரியாக இருந்த மார்லி பிரபு அரசப் பிரதிநிதிக்கு, "நம் ஆட்சி அழிவதற்கு அடிகோலியாயிற்று, நீதிமுறை ஒன்றே வலுவைத் தருவது" என்று கடிதம் எழுதினர். அன்று பின்னி ஏற்றிய இக்கொடுமைக் கொடியே இன்று இந்தியர் உரிமைபெற்று வாழ அடிப்படையாயிற்று.

சிதம்பரம் பிள்ளை வழக்கு உயர்நீதிமன்றம் சென்றது. முன் நெல்லைக்கு வந்துதவிய சென்னைச் சடகோபாச்சாரியாரே இவ்வழக்கை நடத்தினர்; அவர் 1908 அக்டோபர் 13உ நிகழ்த்திய வாதம் சட்டப் பேரறிஞராற் போற்றிப் புகழப்பெற்றது. தலைமை நீதிபதி ஆர்னல்டு இரைட்டும் நீதிபதி மன்ரோரும், "அரசநிந்தனைக் குற்றத்துக்கு ஆறுண்டு தீவாந்தரமும், சிவாவை ஆதரித்த குற்றத்துக்கு நான்காண்டு தீவாந்தரமும்" தண்டனை விதித்து அவை இரண்டும் ஒரேகாலத்தில் நிகழ வேண்டும் என்று தீர்ப்புக்கூறினர். அதனால் தண்டனை ஆறுண்டுகளாயிற்று; அத்தீவாந்தரத் தண்டனை உச்ச நீதிமன்ற (பிரிவி கவுன்சில்)த்தால் கடுங்காவலாக மாற்றப்பட்டது. புது அரச்ர் 1911-ல் முடிசூடினர்; அதனால் இத்தண்டனையில் ஒரு பகுதி குறைந்தது. அதன் பயனாக இவர் 1912 திசம்பர் மாதம் விடுதலையானர்.

கோயம்புத்தூர்ச் சிறைச்சாலை

திருநெல்வேலியிலிருந்து இவர் 9-7-1908-ல் கோயம்புத்தூர்ச் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். கோவையை அடைந்த அன்றிரவு சிவகாசிக் கொள்ளை வழக்கினால் சிறைவாழ்வு பெற்றிருந்த ஆறுமுகம்பிள்ளை இவரை வந்து கண்டார். இருவரும் சிறந்த நண்பரா

யினர்; அவர் இவருக்குச் சிறையில் வேண்டும் உதவிக ளெல்லாம் செய்துவந்தார். கோவை வழக்கறிஞர் சுப்பிரமணிய முதலியார் இவருக்கு நண்பராகிப் பல்வாறு துணைபுரிந்துவந்தார். சிறையிலிருந்தவர்களும் இவரைப் பெரிதும் மதித்து இவர் செய்யவேண்டிய பணிகளை யெல்லாம் இவருக்காகச் செய்து உதவிவந்தார்கள். இவருக்கு வேண்டும் பலகாரங்களோ பத்திரிகைகளோ அவ்வப்போது கிடைத்தன; இவர் சிறைச்சாலையிலும் செல்வப்பிள்ளையாகவே இருந்துவந்தார்.

கோவைச் சிறைசென்ற ஒரு மாதத்திற்கெல்லாம் 'வழக்கு முடியும்வரை இவரை ஆய்வு நிலையினராக வைக்க வேண்டு'மென்று உயர்நீதி மன்றத்திலிருந்து ஆணை வந்தது. அதனால் அக்காலம் இவர் "மனம்போல வாழ்வு" என்ற நூலை மொழிபெயர்த் தெழுதினார்.

ஒருநாள் வடுகு இராமன் என்பவன் வழக்கம்போல இவரைக் கைகுவித்து வணங்கினான். அதனைக் கண்ட மிஞ்சேல் என்னும் சிறையாளன் இராமனைக் கண்டித் தான். அதனால் சிறைப்பட்டிருந்தோர் அனைவரும் ஒன்று சேர்ந்து கூடிப் பேசினர். அதன்விளைவாகச் சிறையில் ஒரு பெரிய கலகம் நடந்தது. மிஞ்சேல் குத்தப்பட் டான். பூட்டுகளெல்லாம் உடைக்கப்பட்டன. வெளியி லிருந்து காவற்படையினர் விரைந்து வந்து கலகத்தை அடக்கினர். மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. சுப்பிரமணிய முதலியார் தமக்குத் துணையாக ஈரோடு வழக்கறிஞர் சீனிவாச முதலியாரை வைத்துக்கொண்டு குற்றவாளிகளுக்காக வழக்கை நடத்தினர்.

அவ் வழக்கில் சிதம்பரம் பிள்ளை ஒரு சாக்கியாக வரவழைக்கப்பட்டார். "சிறைத் தலைவர் சிறையைக்

கவனிப்பதே இல்லை. அவர் படம் பிடிப்பதிலும் குருவி சுடுவதிலுமே காலங் கழிக்கின்றார். அதனால் சிறையாளன் மிஞ்சேல் மிக மிஞ்சிவிட்டான். அவன் வைத்தது தான் சட்டம். கல்லும் மண்ணுமாகச் சோறு போடுகிறான். வாயில் வந்தபடி கொடுமையாகப் பேசுவதும்* மொழிகளில் அடிப்பதும் ஆகிய தீயசெயல்களைச் செய்துவந்தான். அதனாலே சிறைப்பட்டார் யாவரும் இவனிடம் பகை கொண்டனர். அப்பகையே முதிர்ந்து இக்கலகமாக விளைந்தது," என்று இவர் சான்று கூறினார். இங்ஙனம் இவர் அஞ்சாது கூறிய உண்மைச் சான்று கலகம் விளைத்தவருக்குப் பேராதரவாயிற்று.

சுப்பிரமணிய முதலியார் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தாரால் "சிவக்கவிமணி" என்று பட்டம் வழங்கப்பெற்ற பெரியார். அவர் இவருக்குச் செய்துவந்த உதவிகள் அளவில்லாதன. அவைகளை மறவாது நம் சிதம்பரனார் தம் மூன்றாவது மகனுக்கு அவருடைய பெயராகிய "சுப்பிரமணியன்" என்பதை வைத்து நன்றி பாராட்டினார்.

இவருக்கு வேண்டும் பொருள்கள் கொண்டுவந்து உதவிவந்த சிறைப் பணியாளன் இராமையா என்பவன் ஒருநாள் அகப்பட்டுக்கொண்டான்; அதனால் அவன் வேலையை இழந்ததோடு மூன்று மாதம் கடுங்காவலும் அடைந்தான். அவனை இவர் அழைத்துத் தக்க பொருளுதவி செய்து ஆதரித்தார். அப்பொருளைக் கொண்டு இராமையா வாணிகம் செய்து முன்னுக்கு வந்ததோடு இவரை என்றும் மறவாது நன்றி பாராட்டினான்.

---

* மொழிகள் - மணிக்கட்டு; கணைக்கால் முழங்கால் முதலியவற்றின் பொருத்து.

கண்ணனூரில்

இங்ஙனமாக இவர் கோயம்புத்தூர்ச் சிறைச்சாலையில் இரண்டரை யாண்டுகள் கழித்தார். அதன்பின் இவர் கண்ணனூரிலுள்ள சிறைச்சாலைக்குக் கொண்டு போகப்பட்டார். கோவையில் இவருக்குப் பெருந்துணையாக இருந்தவருள் இலக்குமணப் பிள்ளை என்பவர் ஒருவர்; அவர் கண்ணனூருக்கு வந்து அங்கே யிருந்த தம் வணிக நண்பர் கணபதிப் பிள்ளையைக் கண்டு இவருக்குத் தக்க துணையாக இருக்கும்படி வேண்டிக் கொண்டார். அதனால் இவர் கண்ணனூரிலும் செல்வப் பிள்ளையாகவே வாழ்ந்துவந்தார். இச் சிறையிலேதான் இவரால் "மெய்யறிவு," "மெய்யறம்" என்ற நூல்கள் ஆக்கப்பெற்றன.

1912 திசம்பர் மாதம் இவர் விடுதலை யடைந்தார். அப்போது கணபதிப் பிள்ளை இவரை அன்புடன் தமது மாளிகைக்கு அழைத்துச் சென்றார். அங்கே இவருடைய மனைவி மக்கள் கூடியிருந்து இவரை வரவேற்று மகிழ்ந்தார்கள்.

ரு. இடைக்காலம்

திருப்பேரூர்

சிதம்பரம் பிள்ளை விடுதலை யடைந்தவுடன் கோயம்புத்தூருக்கு வந்து தமக்குப் பெருந் துணையாக இருந்த வழக்கறிஞர் சுப்பிரமணிய முதலியாரைக் கண்டு நன்றி கூறி அளவளாவினர். முதலியார் கோவைத் தமிழ்ச் சங்கம் கண்ட பெரியாருள் முதல்வர். இவர் சிறையில் இருந்தபோது உப்பிலிப்பாளையத்திற் குடியிருந்து வந்த இவரின் குடும்பத்தாருக்கு முதலியார் பெருந் துணையாக இருந்துவந்தார்.

விடுதலையாகி வந்த சிதம்பரம் பிள்ளை திருப்பேரூரிற் சிலகாலம் குடியிருந்து வந்தார். திருப்பேரூர் மேலைச்சிதம்பரம் என்று புகழப் பெறுவது. அவ்வூர்க் கோவிலின் அம்மை திருப்பெயர் மரகதவல்லி என்பது. அங்கே குடியிருந்த நினைவுக்காக இவர் பின்னர் தமது மகள் ஒருத்திக்கு மரகதவல்லி என்று பெயர் வைத்தழைத்தார்.

அக்காலம் இவர் ஒரு பாங்கியில் வேலை பார்த்து வந்தார். தொழிலாளர் தலைவர் இவருக்குச் சிறந்த நண்பர். அவரைப்பற்றி ஒருவர் குறைவாகப் பேசியபோது இவர் மிகவும் கண்டித்தார்; அதனால் இவராற் கண்டிக்கப்பட்டவர் வழக்குத் தொடர்ந்தார்; அவ் வழக்கு நாளடைவில் உருவாகாது ஒழிந்தது.

சென்னை வாழ்க்கை

கோயம்புத்தூரை விட்டகன்று இவர் சென்னைக்குச் சென்று திருமயிலாப்பூரிற் சிறிது காலம் வாழ்ந்திருந்தார். பின் இவர் சிந்தாதிரிப்பேட்டையிற் குடியிருந்து வந்தார்.

ஒருநாள் இவர் தம் புத்தகங்களில் விற்பனையானவற்றுக்குரிய பணம் பெற்று வரும்படி இரிப்பன் அச்சகத்துக்குச் சென்றிருந்தார். அங்கே இவர் சகசானந்தர் என்ற துறவியைக் கண்டார். அவரிடம் இவர், "நீவிர் என்ன வகுப்பினர்?" என்று கேட்டார்; அதற்கு அவர், "நான் நந்தனர் வகுப்பினன்" என்று மறுமொழி கூறினார். உடனே இவர் அவரைத் தழுவிக்கொண்டு, "உண்மை பேசுபவரே உயர் குலத்தினர்," என்று பாராட்டித் தம் வீட்டுக்கு அழைத்துச்சென்று உணவருத்தி, திருக்குறளையும் வேறு சில நூல்களையும் அவருக்குக் கற்பித்து வந்

தார். ஒருநாள் அவர் இவரை நோக்கி, "ஆசிரியர் பெரும! தாங்கள் பணமுடையுடன் இருந்தும் என்னை நாடோறும் தங்களுடன் உண்ணச் செய்கின்றீர்களே," என்று வருத்தத்துடன் தெரிவித்தார். இவர், "அன்ப! என் குடும்பமோ பெரிது. அதில் சிந்திப் போவதற்குங் காணாது நீர் உண்பது," என்று சொன்னதோடு பின்வரும் பாடலையும் எடுத்துரைத்தார்.

"வாங்கும் கவளத்து ஒருசிறிது வாய்தப்பின்
தூங்கும் களிறோ துயருறா—ஆங்கது கொண்டு
ஊறும் எறும்பு இங்கு ஒருகோடி உய்யுமால்
ஆரும் கிளையோடு அயின்று."

சகசானந்தர் இவரைப்பற்றிப் பல பாடல்கள் பாடியிருக்கிறார். அவற்றுள் பின்வருவது ஒன்று:

"சாவா மருந்து எனவே தற்பரனார் வள்ளுவர்செய்
பாவால் அறிவு எனக்குப் பாலித்த—தேவா!
சிதம்பரம் என் சற்குருவே! சிந்தையினில் நின் இன்
பதம் பெற்றேன் என்றும் பணிந்து."

சிலகாலம் இவர் பிரம்பூரிலும் குடியிருந்தார். அங்கே இவருக்குத் தமிழ்ப்பேராசிரியர் திருமணம் செல்வக் கேசவராய முதலியார், பூவைக் கலியாணசுந்தர முதலியார் போன்ற பெரியார் நட்புக் கிடைத்தது. அவ்வூரில் இவர் தொழிலாளருக்குத் தலைவராகி அவர்களுக்கு வேண்டிய நல்வழிகளில் உழைத்து வந்தார்.

ஓட்டப்பிடாரத்தில்

இவர் சகசானந்தரையும் அழைத்துக்கொண்டு ஓட்டப்பிடாரத்துக்கு வந்தார். அதுவரை வெள்ளை வேட்டியுடன் வாழ்ந்து வந்த சகசானந்தரை இவர் காவியுடையணியும்படி செய்தார். அவரை இவர் தம்முடன் பல

திருமண வீடுகளுக்கு உடன் அழைத்துச் சென்று உண்ணுவார். அப்போது இவரை அங்குள்ளார் "இந்தத் துறவி எவ்வகுப்பினர்?" எனக் கேட்கும்போதெல்லாம், இவர், "துறவிகளுக்கு ஊரேது, பேரேது, சாதியேது? துறவிகளின் சாதியை வினவுவதும் பாவம் அல்லவா?" என்று மறுமொழி கூறுவார். மன்னன் பேச்சுக்கு மறுபேச்சும் உண்டோ?

இவர் முன் தூத்துக்குடியில் 1900-ல் "விவேகபானு" என்ற மாதத் தாளைத் தொடங்கி ஆசிரிராக இருந்து நடத்தி வந்தார். அதனைப்பின் கந்தசாமிக் கவிராயர் என்பவர் ஏற்றுக்கொண்டு மதுரை சென்று விவேகபானு என்ற அச்சுக்கூடத்தையும் அமைத்து இடையீடின்றி நடத்திவந்தார். அவர் வீட்டுக்கு இவர் ஒருசமயம் சகசானந்தருடன் சென்று அங்கு வந்திருந்த கதிரேசச் செட்டியார் முதலிய புலவர்களுடன் அளவளாவினர். அப்போது "அறவாழி அந்தணன்தாள் சேர்ந்தார்க்கு அல்லால் பிற ஆழிநீந்தல் அரிது" என்ற திருக்குறளில் "அறவாழி" என்றதனுல், "பிறஆழி" என்பது "மறக்கடல்" என்றுதான் பொருள்படும் என்பதும், "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்பது "பொறிவாய் இல்லாமல் ஐந்து உணர்ச்சிகளையும் அவித்த இறைவன்" என்றுதான் பொருள்படும் என்பதும் ஆராய்ந்து முடிவு செய்யப்பெற்றன.

மதுரையிலிருந்து இவர் தஞ்சை சென்று சீனிவாசப் பிள்ளையின் விருந்தினராக இருந்தார். அப்போது இவருக்குப் பால் கொண்டுவந்த பாத்திரத்தில் எறும்புகள் இருந்தன; அவைகளைப் பணியாள் மெல்லப்போக்கினன். அதுகண்ட சீனிவாசப் பிள்ளை விரைவில் அவைகளை

அகற்ற ஆணையிட்டார்; அப்போது இவர் கண்களில் கண்ணீர்வடிய "இப்பணியாள் செய்யும் அன்பு,

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை

என்ற திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றது" என்று கூறிப் புகழ்ந்தார்.

நந்தனார் திருமடமும் உயர்பள்ளியும்

சிதம்பரத்தில் ஓமக்குளத்தின் கரையிலே நந்தனார் திருமடம் ஒன்று சிதைந்த நிலையிலே இருந்தது; அதில் தொண்ணூறு வயதான அடியார் ஒருவர் இருந்தார். அதனை நல்ல நிலைமைக்குக் கொண்டுவரவேண்டும் என்ற கருத்துடன் சகசானந்தர் முயன்றார். திவான்பகதூர் கேசவப்பிள்ளையின் உதவியால் அவருக்கு அந்த இடம் அரசாங்கத்தாரிடமிருந்து கிடைத்தது. உடனே 1916-ல் அவர் தம் ஆசிரியர் பெருமானாகிய சிதம்பரம் பிள்ளையை அங்கே அழைத்து வந்து ஒரு பள்ளிக்கூடத்தைத் தொடங்கினார். இவர் தந்த கடிதத்துடன் அவர் சென்னைக்குச் சென்று பொதுநலத் தொண்டர் சீனிவாச ஐயங்காரைப் பார்த்தார். அவர் அக்கடிதத்தை மிக்க மரியாதையுடன் பெற்று "மெய்த்தொண்டர் கடிதம்!" என அதனைத் தம் கண்களில் ஒற்றிக்கொண்டு ஐந்நூறு ரூபாய் நன்கொடை யருளினார். அதுகொண்டு மேலும் பல நன்மனப் பெரியார் நன்கொடையும் பெற்று நந்தனார் திருமடமும் பள்ளியும் தொடங்கப்பெற்றன.

நந்தனார் திருமடத்துக்கு உயர்ந்த நஞ்சை நிலங்கள் முப்பத்து நான்கு ஏக்கரும் அதை யொட்டிக் கட்டப் பெற்றுள்ள சிவலோக நாயகன் திருக்கோவிலுக்கு ஐம்

பத்திரண்டு ஏக்கரும் உள்ளன. இன்று நந்தனர் ஆண் உயர்பள்ளி, நந்தனர் ஆரம்பப்பள்ளி, நந்தனர் உயர் ஆரம்பப் பெண்பள்ளி இவைகளிற் படிக்கும் ஆண் பெண் ஐந்நூறு பிள்ளைகள் பள்ளிக்கூட விடுதியில் உணவுண்டு படித்து வருகின்றனர். இந்த நிலைமைக்கு சகசானந்தரின் இடைவிடா முயற்சியும் அவர்தம் ஆசிரியராகிய சிதம்பரம் பிள்ளையின் கைராசியுமே முதன்மைக் காரணம்.

௯. கோவிற்பட்டியில்

வழக்குரைஞர்

இவர் சிறையிலிருந்தபோதும் பின்னரும் இவருக்குப் பொருளுதவி செய்து ஆதரித்து வந்தவர்கள் தென்னுப்பிரிக்காவிலுள்ள தமிழ்ப் பெருமக்களே. அவருள் முதன்மையானவர் வேதியப்பிள்ளை என்ற பெரியார். அவர் செய்த நன்றியை மறவாமல் இவர் தம் இரண்டாவது மகளுக்கு "வேதவல்லி" என்று பெயரிட்டுப் போற்றினர்.

இவரது தகுதியையும் பெருமையையும் இவருக்கு அப்போதிருந்த துன்ப நிலையினையும் அறிந்த சென்னை அரசாங்க மந்திரி சர். தி. நெ. சிவஞானம்பிள்ளை அன்று அரசியல் ஆட்சிக்கட்சித் தலைவராக இருந்த சர் தியாகராயச் செட்டியாரை அண்மி, "சிதம்பரம்பிள்ளை எனக்கு நெருங்கிய உறவினர்; அவருக்கு நாம் வேண்டும் உதவி செய்யவேண்டும்," என்று கூறி நீதிபதியாக இருந்த வாலசு துரையிடம் அவரோடு சென்று "சிதம்பரம் பிள்ளைக்கு வழக்கறிஞராகும் உரிமை ஆணையை அனுப்ப வேண்டும்," என்று வேண்டிக்கொண்டனர். அவ் வேண்டுதலுக்கு இணங்கி நீதிபதி வாலசுதுரை, "சிதம்

பரம்பிள்ளை வழக்கறிஞராகப் பணிபுரியலாம்; தடை யில்லை,'' என ஆணை யனுப்பி உதவினர். இந் நன்றியை மறவாத சிதம்பரம்பிள்ளை தம் இளைய மகனுக்கு ''வாலீசுரன்'' என்று பெயர் வைத்துப் பாராட்டினர். இவர் நன்றி மறவாது பெயர்வைத்தழைத்த ஆறுமுகம், சுப்பிரமணியன், வாலீசுரன் என்ற மூன்று ஆண்மக்களும் இன்று நல்ல நிலைமையில் இருந்து வருகிறார்கள்.

உயர் நீதிமன்ற ஆணை கிடைத்தவுடன் இவர் கோவிற்பட்டிக்கு வந்து வழக்குரைஞராகப் பணி தொடங்கினர். இவரது பேரும் புகழும் எங்கும் பரவியிருந்தபடியால் வழக்காளர்கள் இவரைப் பலராக நாடி வந்தார்கள். தம்மைத் தேடி வருபவர் அனைவரையும் பேரன்போடு மலர்ந்த முகத்துடன் வரவேற்று இன்சொல் இயம்பி அவர்கள் கூறும் வழக்கினைப் பொறுமையாகக் கேட்டு, நீதிபதி நெஞ்சில் உண்மை விளங்கும்படி தாம் மேற்கொண்ட வழக்கினை எடுத்துப் பேசி வெற்றி பெறும் தன்மை இவரிடம் சிறந்து விளங்கியபடியால் இவருக்கு மாதம் சராசரி ஓராயிரம் ரூபாய் வருவாய் வந்தது.

ஒருசமயம் வழக்கறிஞர் ஒருவரிடம் ஏழை ஒருவர் வந்து தமக்கு மற்றொருவர் தரவேண்டிய சிறு தொகைக்காகப் பொருள்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரச் செய்தார். பணம் வந்துவிட்டது; ஆனல் வழக்கறிஞர் அவ்வேழையை ஏமாற்றித் தம்மிடம் வந்த பணத்தைத் தாமே வைத்துக்கொண்டு வெறுங்கையோடு போகச் செய்தார். அவ்வேழை பல பெரியாரிடம் முறையிட்டும் அவருக்குத் துணையாவார் யாரும் இல்லை. இச்செய்தியை அறிந்த சிதம்பரம்பிள்ளை அந்த ஏழையை அழைத்து

ஆறுதல் கூறி அம்மோசக்கார வழக்கறிஞரைப் பார்த்து ஒழுங்காக நடக்கும்படி கட்டளையிட்டார். அதனால் நெஞ்சு குலைந்த அம் மோசக்காரர் பணிந்து பணத்தை ஏழையிடம் தந்து மன்னிப்பும் கேட்டுக்கொண்டார். ஏழை இவரைக் கும்பிட்டுக் கூத்தாடி நன்றி கூறி ஊர் சென்றார்.

கழுகுமலையில் ஒருவர் மாடிவீடு கட்டினார். அதனால் ஒரு பெருஞ் செல்வர் அவருக்குப் பல இடையூறுகள் செய்து அவருடைய வீட்டின் மாடியை இடிக்கவேண்டு மென்று துன்புறுத்தினார். துன்புறுத்தப்பட்டவர் சிதம்பரம்பிள்ளையைத் தஞ்சமென்று அடைந்தார். இவர் அவரைப் பாதுகாப்பதாக வாக்கருளி வேண்டும் துணை புரிய முற்பட்டார். அதனால் அச்செல்வர் இவருக்குப் பல இடையூறுகள் விளைவித்தார். அவைகளை யெல்லாம் பொருட்படுத்தாமல் இவர் பெரிய கலெக்டரை அடுத்து நடந்தவைகளை எடுத்துரைத்தார். நீதி வழங்கப்பெற்றது; மாடி வீடு பிழைத்தது.

வேம்பாறு என்ற சிற்றூரில் மேல்மாந்தை அரசுக்கும் குடிகளுக்கும் நடந்த வழக்கில் இவர் குடிகளைச் சார்ந்து வெற்றி தந்தார். இவர் அவ்வழக்கை நடத்திய திறமை எதிர்க்கட்சி வழக்கறிஞராலும் பாராட்டப்பட்டது. கோவிற்பட்டியில் ஒரு செல்வராலே துன்புறுத்தப்பட்ட சங்கரலிங்கம் பிள்ளை என்ற ஏழை வைத்தியர் இவராலே பாதுகாக்கப்பெற்றார்.

இங்ஙனமாக இவர் ஏழைபங்காளராகிப் பணக்காரரையும் அவர்தரும் பணத்தையும் விளைக்கும் இடையூற்றினையும் பொருட்படுத்தாமல் துணையாக இருந்து நலம் விளைத்தமைகண்ட பொதுமக்கள் அனைவரும்

இவரைத் தெய்வம் அனுப்பிய திருவருளே என மதித்துப் போற்றுவாராயினர். பிறருக்குத் துன்பம் விளைக்கும் வஞ்சகர் அனைவரும் இவருடைய பெயரைக் கேட்டாலே அஞ்சி நடுங்கி நல்வழிப்பட்டு நன்மை யடைந்தார்கள்.

பெருஞ்சொன்மாரி

பதினாயிரக்கணக்கான மக்கள் கூடிய கூட்டங்களிலும் இவர் அனைவருக்கும் கேட்கும்படி கடல்மடை திறந்ததுபோலப் பெருஞ்சொன்மாரி பொழியும் பேராற்றல் படைத்தவர். கருத்து மாறுபட்டவரும் இவருடைய பேச்சைக்கேட்க நேர்ந்தால் உடனே இவர்பக்கம் திரும்பி விடுவார்கள் என்பதில் தடையேயில்லை; அவ்வளவு அறிவுப்பொலிவும் பொருட்செறிவும் உடையதாக இருக்கும் இவருடைய பேச்சு.

1927 ஜூலைமாதம் முதல்நாள் கோயம்புத்தூரில் நடைபெற்ற பிராமணரல்லாதார் மாகாண மாநாட்டுக்குத் தூத்துக்குடி வழக்கறிஞர் கணபதியப்ப பிள்ளை, வேலூர் இராவ்சாகிபு சங்கரலிங்கக் கவிராயர் ஆகிய நண்பர்களுடன் இவர் சென்றார். அங்கே தலைவர்களுடைய வேண்டுதலின் வண்ணம் இவர் உணர்ச்சி ததும்பப் பேசினார். அவ்வாண்டில் மதுரையில் நடைபெற்ற சமூகச் சீர்திருத்த மாநாட்டுக்குச் சென்று உணவு விடுதிகளிலே சாதி வேறுபாடு காட்டுவதைக் கண்டித்து இவர் பேசினார்; இவர் பேசியது அரைமணி நேரமே; வேறுபாடு காட்டும் விடுதிகளைத் தொலைத்தெறிய வேண்டுமென்ற வெறி அங்கே கூடியிருந்தாரனைவருக்கும் உண்டாயிற்று. அவ்வாண்டிலே சேலத்தில் காங்கிரசு மாவட்ட அரசியல் மாநாட்டுக்கு இவர் தலைமை

தாங்கினார். இவரது தலைமையுரை அச்சிடப்பெற்று இன்றும் பொன்னேபோலப் போற்றிப் படிக்கப்பெற்று வருகிறது.

கோவிற்பட்டிப் பத்திவிளை கழகத்தார் காலஞ் சென்ற தலைவர் சர் பி. தியாகராயச் செட்டியாருடைய மறைவு நாளைக் கொண்டாடினார்கள்; அதனைக் கொண்டாடவேண்டுமென்று அக்கழகத்தார் அன்று மாலையிலே தான் தீர்மானித்தார்கள். அதனால் அவ்விழா பலருக்கு அறிவிக்கப்பெருமலே கொண்டாடப்பெற்றது. அங்கே கூடியிருந்தோர் மூவர்; கழகத் தலைவர் சிவஞான யோகிகள் தலைமை தாங்கினார்; கழக அமைச்சராகிய யான் பேசினேன்; தமிழ்நாட்டுத் தலைவர் சிதம்பரம் பிள்ளை பேச்சைக் கேட்டிருந்தார்; பின் சிதம்பரம்பிள்ளை பேசினார்; யான் கேட்டிருந்தேன்; அன்று ஒரு மணி நேரம் இவர் பேசினார். பதினாயிரம் பேர் கூடியிருந்த மாநாட்டிற் பேசுவதுபோல அவ்வீரப்பேச்சு மிளிர்ந்தது.

இவர் கோவிற்பட்டிக்கு வந்த தொடக்கத்தில் அவ் வூர் நாட்டாண்மை உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் சங்கத்தார் இவருடைய பேச்சைக்கேட்க மிக விரும்பினர். அதனால் அச்சங்க அமைச்சராக இருந்த யான் இவரைக்கண்டு வேண்டினேன்; இவர் இசைந்து நாளும் நேரமும் குறிப் பிட்டார். குறித்த நாளின் முந்தியநாள் காலையில் இவரைக்கண்டு நினைவுப்படுத்தச் சென்றேன்; இவர் முட்டில் யாவைத்துக் கட்டிப் படுத்த படுக்கையாக இருந்தது கண்டு நெஞ்சம் துணுக்குற்றேன்; இவர், "தம்பி! நான் படும்பாடு ஆண்டவனுக்கே தெரியும்; அத்தனை தாங்கமுடியாத வேதனை; அரசாங்க மருத்துவ நிலையத்திற்குச் சென்றேன். 'பெரிய பிளவை உண்டாகும்;

மாவைத்துக் கட்டிப் பழுக்கவைத்து அறுக்கவேண்டும்' என்று வைத்தியர் கூறினர்," என மொழிந்து வருந்தினர். உலகப் புகழ்பெற்ற சித்த வைத்திய ஞாயிறு சிவஞானயோகிகளிடத்தில் சித்த வைத்தியம் சிறிது பயின்றிருந்த யான், "புளித்த பொருள்கள் உண்டீர்களோ?" என்று வினவினேன். இவர், "ஆம். சேலம் நண்பர் அனுப்பிய மாம்பழங்கள் மிகுதியாக உண்டேன்," என மறுமொழி கூறினர். உடனே மாக் கட்டினை அவிழ்த்தெறிந்து "இது வாதவலி; பிளவையன்று; அஞ்சேல்" எனத் தேற்றி யான் இவருக்குச் சுக்கு, கடுகு, உப்பு இவைகளை விழுதுபட அரைத்துக் கொதிக்க வைத்துத் தாங்குசூட்டிற் போடச்செய்தேன். மூன்று முறை இம்மருந்து போடப்பெற்றது; வாதவலி வந்த வழியே ஓடிவிட்டது; அளவில்லாத மகிழ்ச்சியடைந்த இவர் மறுநாள் மாலை உயர்பள்ளிக்கூடத்திற்கு நடந்து வந்து விரிவுரையாற்றினர். "நோய் நாடி நோய் முதல் நாடி" என்ற தலைப்பினைக்கொண்டு தமக்கு வாதவலி வந்ததும், அரசாங்க வைத்தியர் பெரிய பிளவையாக்கி அறுக்கவேண்டுமென்று சொன்னதும், அதனால் மாவைத்துக் கட்டித் தாம் வாடி வதங்கியிருந்ததும், பின் அன்ரை அனுச்செலவில் தமது நோய் நீங்கி நலம் பெற்று உள்ளம் தெளிந்ததும் ஆகிய உண்மைகளை எடுத்துச் சரமாரியாக இவர் பொழிந்தார். நமதுநாட்டில் நம் மூதாதையராகிய சித்தர்கள் ஆண்டவன் திருவருளே கண்ணாக ஆராய்ந்து கண்ட வைத்திய முறையே சித்த வைத்திய முறை என்பதும், அதன் உண்மையை நிலை நாட்டுவதே திருவள்ளுவ நாயனரது திருக்குறளிலுள்ள 'மருந்து' என்ற அதிகாரம் என்பதும், சித்தர் முறையாகிய மந்திரப் பார்வையே பல பிளவைகளையெல்லாம்

கரைத்து நலம் விளைக்கின்றது என்பதும், பணக்காரருக்கே ஓரளவு பயன்தரும் மேலைநாட்டு வைத்திய முறை ஏழைகளுக்கு ஒரு பயனும் தாராததோடு இந்த நாட்டு வெப்பதட்ப நிலைக்கு ஒரு சிறிதும் பொருந்தாததும் ஆகும் என்பதும், சித்த வைத்திய முறை மிகச் சுருங்கிய செலவில் பெரும் பயன் விளைப்பதோடு நம் நாட்டுக்கு மட்டுமேயல்லாமல் உலக முழுமைக்கும் மிகுநலன் தர வல்லது என்பதும் ஆகிய உண்மைகள் பசுமரத்தாணி போலக் கேட்பார் நெஞ்சிற் பதியுமாறு அன்று இவரால் வலியுறுத்தப் பெற்றன.

ஏ. பழையபடி தூத்துக்குடியில்

அறுபதாவது ஆண்டு நிறைவு

1932 ஏப்ரல் மாதம் கோவிற்பட்டி உதவிக் கலெக்டரின் தலைமையிடம் கோவிற்பட்டியிலிருந்து தூத்துக்குடிக்கு மாற்றப்பட்டது. அதனால் சிதம்பரம் பிள்ளையும் தூத்துக்குடிக்கு வந்து சேர்ந்தார். அந்த ஆண்டு செப்டம்பர் மாதம் மூன்றும்நாள் இவருக்கு அறுபது ஆண்டுகள் நிறைவுபெற்றன. அந்த விழா இந்தியா முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்பெற வேண்டுவது தூத்துக்குடியில் மட்டும் ஆடம்பரமில்லாத நிலையிற் கொண்டாடப்பெற்றது. இவருடைய பள்ளித்தோழரும் இவருடைய வழக்கில் இவருக்குப் பேருதவி செய்தவருமாகிய சித்தாந்த முதுபெரும் புலவர் ந. சிவகுருநாத பிள்ளை இவ்விழாவிற் கலந்துகொண்டு ஓரளவு சிறப்பாக நடத்தி மகிழ்ந்தார்.

இவர் இதன்பின் நீதிமன்றங்களுக்கு மிகுதியாகப் போவதில்லை; தள்ளாத நண்பர் வழக்குகளை மட்டும்

கவனித்து வந்தார். நீதிபதிகள் இவரிடம் மிக்க மதிப்பு வைத்திருந்தார்கள். 'பிரைண்டு' என்னும் உதவிக் கலெக்டர் ஒருசமயம் திருச்செந்தூரில் வந்து தங்கி ஒரு பெரிய வழக்கினை ஆராய்ந்தார். ஒரு கட்சிக்காரர் திருநெல்வேலிக்குப்போய் ஒரு பெரிய வழக்கறிஞரை அழைத்துவர வேண்டுமென்று கலெக்டரிடம் தெரிவித்துக்கொண்டார். அப்போது தற்செயலாக அவ்வூரில் சிதம்பரம் பிள்ளை தங்கியிருப்பதை அறிந்த கலெக்டர், "இங்கே நமது சிதம்பரம் பிள்ளை இருக்கின்றாரே; அவரை அழைத்து வரலாமே. அவரைவிடப் பெரிய வழக்கறிஞர் வேறு யார் இருக்கின்றார்?" என்று நீதி மன்றத்திலே கூறினார்.

இராமசாமிப் பெரியார் இவரைத் தம் அரசியல் ஆசிரியராகப் போற்றுகின்றார். இன்று இரண்டாவது முறையாக இந்திய நாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ள இராசேந்திரப் பிரசாது "இவர் ஆங்கில அரசை எதிர்த்துப் போராடிச் சிறை சென்றதை அறிந்து ஊக்கம் பெற்று நாட்டன்பு கொண்டு அரசியல் வாழ்க்கை மேற்கொண்டவருள் நானும் ஒருவன்," என்று இவரை மனமார வாழ்த்திப் புகழ்கின்றார்.

இவரிடம் திருக்குறள் படித்தவர்கள் பலர். அவருள் சகசானந்த அடிகளைப் பற்றி முன்னரே கூறினோம். இந்திய நாட்டுக் கவர்னர் செனரலாக இருந்து இப்போது சென்னை நாட்டு முதன் மந்திரியாக இருக்கும் இராசகோபாலாச்சாரியாரும் இவரிடம் திருக்குறள் பயின்றவரே. பாடம் சொல்லும்போது ஆசிரியத்தன்மையிலிருந்து ஒரு சிறிதும் வழுவாதவராகித் தம்மிடம் பாடம் கேட்க வருபவர்களிடம் காலத்தில் வருதல்,

பழம்பாடம் போற்றல், அறிவைப் புறத்தே செல்லவிடா மற் பாடத்தையே கவனித்தல் முதலிய பண்பாடுகளை நிறுத்தி ஒழுங்கு நிலைபெறச் செய்வார். திருக்குறள் அட்டாவதானம் சுப்பிரமணியதாசு இவர் வீட்டிலே சில காலம் தங்கியிருந்து திருக்குறள் நுட்பங்களை இவரிடம் நன்றாக ஆராய்ந்து தெரிந்துகொண்டார்.

திருக்குறள் விருத்தியுரை


உலகப் பொதுமறையாகிய திருக்குறளை இவர் நுணுகி நுணுகி ஆராய்வதையே பொழுது போக்காக உடையவர். பல புலவர்களது வேண்டுதலினாலே ஊக்கம் கொண்டு இவர் திருக்குறள் முழுமைக்கும் விருத்தியுரை ஒன்று எழுதி முடித்தார். திருச்செந் தூரில் 1934-ல் முருகப் பெருமான் திருமுன்பு கூடிய புலவர் பேரவைமுன் இவர் அதனை அரங்கேற்றினார். உரையாசிரியர்களால் திருக்குறள் மூல பாடம் பல வேறு விதமாகக் கொள்ளப்பட்டிருக்கிறபடியால், அறிவுக்குப் பொருந்துமாறு மூலத்தைத் திருத்தலாம் என்பது இவரது கோட்பாடு. அங்ஙனமே இவர் பல திருக்குறள் பாடங்களைப் பரிமேலழகர் கொண்ட பாடத்தினின்றும் வேறுபடுத்தியிருந்தார். பல புலவர்கள் இவரை எதிர்த் தும் இவருக்கு ஏற்பக் காரணங்கூறி மறுக்க இயலாத காரணத்தால் இவர் தாம் கொண்ட பாடமே சிறந்தது என்று விடாப்பிடியாகக் கொண்டிருந்தார்.

தமது விருத்தியுரையை இவர் அச்சிடத் தொடங்கி னார்; பார்வைப்படிகளைத் திருத்தித் தரும்படி என்னை வேண்டிக்கொண்டார். அப்போது வேறு அலுவல் இருந்தமையின் இரண்டொரு மாதங்கள் கழிந்தால் இயலும் என்று கூறினேன். ஆனால், இவர் தாமாகவே

அறப்பாலை அச்சிடத் தொடங்கி 9-2-1935-ல் அச்சிட்டு முடித்தார். அதில் பிழை திருத்தம் மட்டும் பார்த்துத் தரும் பேறு எனக்குக் கிடைத்தது. அதன்பின் பொருட் பாலை நான் பிழை பார்த்துத் தந்தாலல்லாமல் அச்சிடுவ தில்லை என இவர் எனக்கு எழுதினர்.

1936 ஏப்பிரல் மாதம் முதல் வாரத்தில் பொருட் பாலின் முதல் எட்டுப் பக்கங்கள் என் பார்வைக்கு வந்தன. அவைகளை யான் திருத்தியனுப்ப இவர் 5-4-1936-ல் எழுதிய பாராட்டுக் கடிதப்படியை இதன் பின் சேர்த்திருக்கிறேன். இப்போது வழங்கும் பாடத்தை இவர் திருத்தியிருந்த இடங்கள் பெரும்பாலானவை களைப் பற்றியே ஆராய்ச்சிக் குறிப்புக்கள் ஒவ்வொரு பகுதியிலும் குறித்தனுப்பினேன். இவர் அவைகளை யெல்லாம் ஏற்றுக்கொண்டு பொருட்பாலை நல்ல முறை யில் அச்சிட்டு முடிக்க முனைந்து நின்றார். இருபத்து மூன்று அதிகாரங்களும் இருபத்து நான்காவது அதி காரத்தில் ஏழு பாடல்களும் எனது பார்வையில் அச்சேறின; அவைகளின் படியொன்று அச்சான உடனுக்குடன் இவர் எனக்கு அனுப்பி உதவினர்; அவைகளை நான் இன்றும் நன்கு பேணி வைத்திருக் கிறேன்.

இவரது பொருட்பாலுரை முழுவதும் அச்சாகி வெளிவருதல் வேண்டும். காமத்துப்பாலுக்கும் இவர் விரிவுரை எழுதிமுடித்து வைத்திருந்தார். அவைகள் வெளிவந்தால் தமிழ் நூல்களிலே ஒப்புயர்வற்றதாகிய திருக்குறளுக்குச் சிறந்த திறவுகோல்களாகப் பெரிதும் உதவும். வீரர் சிதம்பரனர் தம் வாழ்நாளெல்லாம் அரிதின் முயன்று ஆராய்ந்து கண்ட உண்மைகள் வீண் போகாமல் நிலைநிற்கும். இவர் கடிதம் பின்வருவது:


V O CHIDAMBARAM PILLAI
PLEADER.
2
TUTICORIN
5-4-1936.

அன்பார்ந்த தம்பியவர்களே,

2

[illegible]

[illegible] Coronation High School [illegible] 25 [illegible] 25. [illegible]

[illegible] To the President, Managing Committee, Coronation High School, Srivaikuntam, [illegible]

[illegible]

இவர் எவ்வளவோ ஆத்திரத்துடன் விரைந்து முயன்றும் அச்சியற்றியும் திருக்குறள் விரிவுரை அரை குறையாகவே நின்றுவிட்டது. இவரை நோய் விடாது பிடித்துக் கொண்டது. அதனால் இவர் திருச்செந்தூருக்குச் சென்று முருகப் பெருமானுடைய திருமுன்பு நின்று கண்ணீர்வார, "ஆண்டவனே! அடியேனுக்குத் துன்பந் தருவது முறையோ? அடியேன் எப்போதும் உன் திருவடியை மறவாமல் வாழ்த்தி வருகின்றேனே. அடியேன் ஆக்கிய திருக்குறள் விரிவுரை அச்சாகும் வரையாவது நோயற்ற வாழ்வு தந்தருளும்; கூடிய விரைவில் இந்தியருக்கு முழு உரிமை தந்து ஆங்கிலேயர் இந் நாட்டைவிட்டு அகலவும், அதனால் இந்திய மக்கள் விடுதலை பெற்றுப் பல கலைகளிலும் முன்னேறி நல்வாழ்வடையவும் திருவருள் புரியும். அடியேனும் உயிருடனிருந்து அந் நன்னாளைக் காணுமாறு கடைக்கண் பார்த்தருளும்" என்று பலவாறு வேண்டிக்கொண்டார்.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்" (குறள்: ௩அ0)

சிறந்த மருத்துவர்கள் வந்து வந்து பார்த்து நல்ல மருந்துகளைத் தந்தார்கள்; இவர் நோய் ஒருசிறிதும் தணியாமல் மேலும் மேலும் வளர்ந்தே வந்தது; இவர் தம் நண்பர்களையும் உறவினரையும் பார்க்க விரும்பினார்: நெருங்கிய நண்பரும் உற்றாரும் இவரை வந்து கண்டு ஆறுதல் கூறிச்சென்றனர்.

1936 செப்டம்பர் மாதம் முதல் இவர் படுத்த படுக்கையாகவே இருந்துவந்தார். திருவள்ளுவர் ஆண்டு 1967 கொல்லம் 1112 கார்த்திகைத்திங்கள் மூன்றும் நாள் (18—10—1936) புதன்கிழமை விடிந்தது. "சிதம்

பரனுர் இனிப் பிழைப்பது அரிது; நேரத்தை எதிர் பார்க்க வேண்டியதுதான்," என்று இவரை வந்துபார்த்த நண்பர்கள் தீர்மானித்தனர். இவருடைய கண்கள் பஞ்சடைந்தன; அன்று பூராடநாள் நள்ளிரவு வந்தது; இவர் இறைவன் திருவடிநீழலை அடைந்தார்.

இவருடைய நண்பர்களும் உறவினரும் கண்கலங்கி நின்றனர்; ஊரே வந்து கூடிவிட்டது. இவரது மண்ணுடம்பு நன்காட்டிற்கு எடுத்துச் செல்லப்பெற்றுப் பலரும் வருந்த எரி மூட்டப்பட்டது.

"முடிசார்ந்த மன்னரும் மற்று முள்ளாரும்
முடிவில் ஒருபிடி சாம்பராவர்."

என்ற திருவாக்கு இவரிடத்தும் உண்மையேயாயிற்று.

அ. இவருடைய நூல்கள்

பதித்த நூல்கள்

திருக்குறள் அறப்பால் மணக்குடவர் உரையையும், தொல்காப்பியம் எழுத்ததிகாரம் பொருளதிகாரம் இவைகளுக்கு இளம்பூரணர் உரையையும் ஆராய்ந்து இவர் அச்சிற் பதித்து வெளியிட்டார். இவர் பிரம்பூரில் இருந்தபோது 1918-ல் அறப்பால் மணக்குடவருரை வெளிவந்தது. சகசானந்தரை உடன் வைத்துக்கொண்டு ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலும் செய்து அதனை வெளியிட்டதாகவும் அதற்குத் தென்னுப்பிரிக்கத் தமிழ்ப் பெருமக்கள் பொருளுதவி செய்தார்கள் எனவும் இவர் முன்னுரையிற் குறிப்பிட்டிருக்கிறார். பச்சையப்பன் கல்லூரிப் பேராசியர் செல்வக்கேசவராய முதலியாரும் கிருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் த. கனகசுந்தரம் பிள்ளையும் அதனைப் பல

முறை பார்வையிட்டு உதவினார்கள். பொருளதிகாரம் இளம்பூரணம் முழுமையும் 15-1-1936-ல் அச்சிட்டு வெளிவந்தது.

மொழி பெயர்த்த நூல்கள்

சேம்சு ஆலன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய சிறந்த நூல்களின் மொழி பெயர்ப்பே "மனம்போல வாழ்வு," "அகமே புறம்," "வலிமைக்கு மார்க்கம்," "சாந்திக்கு மார்க்கம்" என்ற நூல்கள். திருக்குறள் அறப்பாலை இவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். இம் மொழிபெயர்ப்புக்கள் இவர் சிறையிலிருந்த காலத்திலே செய்து அமைக்கப்பெற்றன. அவை முதல் நூல் போலவே திகழ்வன.

இம்மையின்பத்தையும் மறுமையின்பத்தையும் அடைவதற்குரிய வழிகளை மிகத் தெளிவாகக் கூறுவது "மனம்போல வாழ்வு." உயர்ந்த பதவிகளை அடைவதற்குரிய நெறிகளை மிகத் தெளிவாக "அகமே புறம்" கூறும். எளிய நிலையிலிருப்போர் வலிய நிலையைப் பெறுவதற்குரிய மார்க்கங்களைக் காட்டுவன "சாந்திக்கு மார்க்கம்," "வலிமைக்கு மார்க்கம்" என்ற நூல்கள். அகமே புறம் என்ற நூல் 1-4-1914-ல் முதலாவதாக அச்சிடப் பெற்றது. 1916-ல் வெளியான அதன் இரண்டாம் பதிப்பு சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் பொருளுதவியால் அச்சிடப் பெற்றது.

உரைகண்ட நூல்கள்

திருக்குறளுக்கு இவர் விருத்தியுரை எழுதியமை பற்றி விவரித்தோம். இருநூற்றுப்பதினாறு நேரிசை வெண்பாக்களால் ஆகிய இவரின் முதல் மனைவியார் வள்ளியம்மையார் வரலாற்றிற்கு இவர் அரும்பதவுரை

எழுதியிருக்கிறார். பொய்கையார் அருளிய "இன்னிலை" என்ற சிறந்த நூலுக்கு இவர் விருத்தியுரை ஆக்கியிருக்கின்றார்; அது தில்லையாடி வேதியப்பிள்ளையால் 24-7-1917-ல் அச்சிடப்பெற்றது. மெய்கண்டதேவ நாயனார் அருளிய சைவசித்தாந்த முதல் நூலாகிய சிவஞானபோதத்துக்கு இவர் ஒரு சிறு உரை எழுதினார்; அது 1935-ல் வெளியிடப் பெற்றது.

நூல்கள்

இவர் கண்ணனூர்ச் சிறைச்சாலையில் இருந்தபோது "மெய்யறிவு," "மெய்யறம்" என்ற செய்யுள் நூல்கள் பாடப்பெற்றன. அகவற் பாக்களில் இவர் எழுதிய கடிதங்களே "என்கதை" என்ற நூல். அது "வ. உ. சி. சுய சரிதை" என்ற பெயரால் வெளிவந்துள்ளது.

19-8-1915-ல் "மெய்யறிவு" அச்சிடப்பெற்றது; அப்போது இவர் திருமயிலாப்பூரில் வாழ்ந்திருந்தார். இவர் கண்ணனூர்ச் சிறையிலிருந்தபோது தம்முடனிருந்த குற்றவாளிகளை நன்னிலைப்படுத்துமாறு 'மறம் களைதல்', 'அறம் புரிதல்' என்ற பப்பத்துப் பாடல்களை இவர் பாடினார். பின் தன்னையறிதல், விதியியல் அறிதல், தவம் செய்தல், மெய்யுணர்தல், மெய்ந்நிலையடைதல் என்ற பகுதிகள் பாடிச் சேர்க்கப்பெற்று நூறு அருமையான வெண்பாக்களையுடைய நூலாக "மெய்யறிவு" அமைந்தது. இதற்கு ஒப்பற்ற விருத்தியுரையும் இவர் எழுதியிருக்கிறார்.

மெய்யறம் என்ற நூல் மாணவ இயல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணரியல், மெய்யியல் என ஐந்து இயல்களையுடையது. இதுபற்றி அணிந்துரை வகுத்த திருமணம் செல்வக் கேசவராய முதலியார் பின்வரு

மாறு குறித்துள்ளார் :—"மெய்யறம் ஐந்தியலும் நூற்றிருபத்தைந்து அதிகாரமுமாக முடிந்தநூல். ஐந்தியல்களாவன—முப்பததிகாரம் கொண்ட மாணவ இயல், முப்பததிகாரம் கொண்ட இல்வாழ்வியல், ஐம்பததிகாரம் கொண்ட அரசியல், பத்ததிகாரம் கொண்ட அந்தண இயல், ஐந்ததிகாரம் கொண்ட மெய்யியல் என்பவை. ஒவ்வோரதிகாரமும் பப்பத்து வெண்செந்துறை கொண்டுள்ளது. முப்பாலில் அறமும் பொருளும் தழுவிக் காலவேறுபாட்டிற்கு வேண்டும் விகற்பங்கூறலால் இந்நூல் திருவள்ளுவப் பயனுக்கு வழிநூலாக விளங்குகின்றது. முதுமொழிக்காஞ்சி போன்று திட்பமும் நுட்பமும் சிறந்த இழுமென்மொழியாய் விழுமிய பொருள் உரைத்தலால் இந்நூல் தோல் என்னும் வனப்புவாய்ந்தது. தமிழ்ப் புலவரேயன்றி ஆங்கிலம் படித்த புலவரிற் பலரும் இந்நூலின் திறத்தை மெச்சுவர் என்பது துணிவு."

தர்பன் நகரினதாகிய விவேகபானு என்ற மாதத்தாள் "மெய்யறிவு" என்ற நூலைப்பற்றிப் பின்வருமாறு மதிப்புரை எழுதியது :—"இந்நூல் போன்ற தெளிவான நூல்களே இக்காலத்துக்கு அவசியம் வேண்டப்படுவனவாம். இந்நூலை ஓதியுணர்ந்து அவ்வாறே நடக்கப் பயிலுதல் தமிழ் மக்கள் கடனும். ஏனெனில், பலநாளும் பல நூல்களையும் பயின்றூர் தெரிந்துணர்ந்த உண்மைகளே இந்நூலிற் போதிக்கப்பட்டுள்ளன. இந்நூல் பயிலப்பெற்ற தமிழ் மக்களே தமிழ் மக்கள். அவர்கள் அனுபவிக்கும் இன்பமே இன்பம்."

இவரை ஒப்பற்ற முதற்பெரும் அரசியற் றலைவராக அறிந்துள்ள உலகம், "தமிழ்ப்பெருங் கவி" என்பதை

இன்னும் அறியாதிருக்கின்றது. இவரது "பாடற்றிரட்டு" என்ற நூலொன்று வெளிவந்திருக்கிறது. பண்டைக்காலச் சங்கப் புலவர்களைப்போல இலக்கண வரம்பில் நின்று ஆசிரியப்பா, வெண்பா முதலிய பாக்களிற் கவிகளைப்பாடி நூல்கள் யாத்த "பெருங்கவி" நம் சிதம்பரம் பிள்ளை. இவருடைய பெருங்கவிகளை இனியாவது உலகம் அறிந்து போற்றித் துய்க்குமாறு செய்தல் அறிஞர் கடமை. பாரதியாரின் நூல்களை நாட்டுப் பொதுச் சொத்தாக்கியதுபோல இவருடைய மிக்குயர்ந்த நூல்களையும் சென்னை அரசாங்கம் நாட்டுப் பொதுச் , சொத்தாக்கும் முதற்பெருங் கடமையை உடையது. கேட்பார் நெஞ்சைக் கவித்து வீரஉணர்ச்சியைப் பதியச்செய்யும் கவி இவரைப்போல வேறு யார் பாடினர்? பின்வருவது இவரது பாட்டு :

"என்மனமும் என்உடம்பும் என்சுகமும் என்அறமும்
என்மனையும் என்மகவும் என்பொருளும்—என்மதியும்
குன்றிடினும் யான்குன்றேன் கூற்றுவனே வந்தாலும்
வென்றிடுவேன் காலால் மிதித்து."

௧௦. நினைவு நிலையங்கள்

வ. உ. சிதம்பரனூர் என்ற கப்பல்

தூத்துக்குடியில் திரு. மு. சி. வீரவாகுப் பிள்ளை பி. ஏ., பி. எல்., என்பார் ஒரு சிறந்த அறிஞர். இந்திய நாட்டுச் சட்டத்தை ஆக்கிய மன்றத்தில் அவர் ஓர் உறுப்பினராகி யிருந்தார். அவர் ஒருநாள் பின்வருமாறு எண்ணினர். "நம் இந்தியநாடு இப்போது விடுதலையடைந்துவிட்டது; அதற்கு வேண்டிய சட்ட திட்டங்கள் இன்று ஆக்கப்பெறுகின்றன; தன்னுட்சி நாடாகிய நம்நாடு இனி உலகத்துக்கே ஒரு வழிகாட்டியாக இருந்து

உலக நலங்களை ஆய்ந்து முன்நின்று அமைக்கும்; அதனால் உலகமெல்லாம் ஒன்றுபட்டுப் பெருவாழ்வடையும் என்பதில் ஐயம் சிறிதும் இல்லை. இதற்குக் காரணமாகிய நம்நாட்டு விடுதலைக்கு அடிப்படையாக நின்று பாடுபட்ட முதன்மைப் பெரியார் நம் தூத்துக்குடியில் வாழ்ந்திருந்த வீரர் சிதம்பரம் பிள்ளையே. அவர், 'உலக முதன் மாலுமிகளாக இருந்தவர் நம் இந்தியரே; அதிலும் சிறப்பானவர் தமிழரே. உலகத்தில் ஞாயிறு மறையாத பேரரசாட்சியை அடைந்தவரான ஆங்கிலேயருக்கு அவ்வளவு பெரிய ஆட்சியைத் தந்தது அவர்களுடைய கப்பல் வாணிகமே. ஆதலின் ஆங்கிலரை நாம் வெல்ல வேண்டுமானால் நாமும் கப்பலோட்டி அவர்களுடைய கடலாட்சியைக் கைப்பற்றுதல் வேண்டும். அதனால் அவர்கள் வீழ்ச்சியடைவார்கள்; நாம் எழுச்சியடையலாம்' என்று முடிவுகட்டிக் கப்பற் சங்கத்தைத் தொடங்கி இரண்டு கப்பல்கள் வாங்கி ஓட்டினார். அவருக்கு எத்தனையோ வகையால் இளிப்புக் காட்டப்பெற்றது; ஓரிலக்கம் ரூபாய் கைக்கூலி வந்தது; அதனை அவர் ஒரு பொருட்டாக நினைக்கவில்லை; தமது கொள்களில் முதிர்ந்த உறுதியுடையவராகவே ஆயினார். பின் சிறைப்படுதல் முதலிய பலவகைத் துன்பங்கள் வந்தன; அதிலும் அவர் மனம் கலங்கவே இல்லை. அவர் சிறையிலிருந்தபோது, அவர் தொடங்கிய கப்பற் சங்கத்தைப் பங்காளிகள் கலைத்துவிட்டார்கள்; அதனோடு நில்லாமல் அவர்கள் தம் கப்பற் சங்கத்துக்குக் கேடு சூழ்ந்த ஆங்கிலக் கப்பற் சங்கத்தாரிடமே தம் கப்பலை விற்றும்விட்டார்கள். இதனைப்போல மானக் கேடான செயல் வேறு என்ன இருக்கிறது? இதனை அறிந்த சிதம்பரம் பிள்ளை சிறையிலிருந்து கண்ணீர்

சிந்தினர். அக் கண்ணீர் இப்போது விடுதலை பெற்ற நம் நாட்டினராலே துடைக்கப் பெறுதல்வேண்டும். இந்தத் தூத்துக்குடியிலேயே பழையபடி கப்பற்சங்கம் ஒன்று தொடங்குவோம்; அவர் பெயரால் கப்பல் ஓட்டுவோம்.''

இங்ஙனமாக எண்ணிய அவர் ஒரு கப்பற் சங்கத்தைத் தொடங்கினர். முன் சென்னைமாகாண வளர் நெறி மந்திரியாக இருந்த உத்தமபாளையம் பெருநிலக்கிழார் பொன்னம்பல தியாகராய முதலியார் எம். ஏ., பார் அட்லா, எட்டையபுரம் குறுநில மன்னர் முதலிய பல தக்க பெரியார் இச் சங்கத்தின் முதன்மை யேற்றுத் துணைபுரிந்தார்கள். கப்பல்களும் வாங்கப்பெற்றன; அவைகளை ஓட்டுவதற்கு நல்ல நாளும் பார்த்து முடிவு செய்யப்பெற்றது.

விடுதலைபெற்ற இந்தியாவின் முதல் இந்தியக் கவர்னர் செனரல் கனம் ச. இராசகோபாலாச்சாரியார் தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்கு ஓடும் கப்பல் ஒன்றுக்கு நம் வீரர் "வ. உ. சிதம்பரம்" என்ற பெயரை இட்டு 1949 பிப்ரவரி மாதம் ஒன்பதாம் நாள் அக்கப்பற் போக்குவரவைத் தொடங்கிவைத்தார். அவர் அப்போது பேசிய பேச்சுப் பின்வருமாறு :—

"ஐரோப்பியர் இந்தியாவுக்கு வருவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இந்திய வணிகர் அரபிக் கடலையும் இந்துமாக் கடலையும் கடந்து கிழக்கே சீனு வரையிலும் மேற்கே ஆப்பிரிக்கா மட்டும் சென்று வாணிகம் செய்துவந்தார்கள். இந்துமாக் கடலிலும், பசிபிக் மாக்கடலின் அண்மையிலும் உள்ள தீவகங்களிற் காணப்படும் கோவில்களும் அத்தீவக மக்களின்

நாகரிகமும் இந்தியர் கடல் கடந்து சென்று பற்பல காலம் அத்தீவுகளில் தங்கி வாழ்ந்திருந்தார்கள் என்ற உண்மைக்குச் சான்று பகர்வன. கொலம்பசு காலம் வரை அதாவது கிருத்து மறைந்து பதினைந்து நூற்றாண்டுகள் கழிந்தபின் வரை ஐரோப்பியர் தங்கள் கரையைவிட்டுக் கடலில் நெடுந்தூரம் போகத்துணிந்தாரல்லர். இந்தியரோ கிருத்து பிறப்பதற்கு முன்னரே திரைகடலோடித் திரவியம் தேடிவருவாராயினர். நம் கப்பற்படைத் துணைத்தலைவர் பாரி என்பவர் அண்மையில் பேசியதையே திரும்பச் சொல்கின்றேன். கிருத்து பிறப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே இந்தியர் அரபிக்கடலைக் கடந்து எகிப்து, உரோம் நாடுகளுடன் வாணிபம் செய்தார்கள். இந்திய இலக்கியங்களிலும், கலைகளிலும், கிரேக்க உரோமானிய வரலாற்று ஆசிரியர் நூல்களிலும் இதற்குப் போதுமான சான்றுகள் காணக் கிடக்கின்றன.

"வரலாற்றுக் காலம் தொடங்கியதிலிருந்து இந்தியர் வங்காளக் குடாக்கடலையும் தாண்டிப் பசிபிக்கு மாக் கடலிலுள்ள பல தீவுகளிற் குடியேறினார்கள். சுமத்திரா, மலேயா, இந்தோனேசியா, சீனாவிலும் இந்தியர் புகுந்து சென்றார்கள். கிழக்குக் கடல்களின் பெயரைத் தங்கள் அரசப் பட்டங்களுடன் சேர்த்துக் கொண்டார்கள் மௌரிய மன்னர்கள். அண்மைக் காலத்துக்கு வருவோம். இந்தியக் கப்பலொன்றில் ஏறி ஓரிசாவிலிருந்து இலங்கைக்கும், அங்கிருந்து நிக்கோபார் தீவுகளுக்கும், மலாக்காக் கடல்வழி சீனாவுக்கும் தாம் சென்ற கடற் பயணத்தை விவரிக்கிறார் பாகையன் (Fa Hien). இது கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் நடந்தது. அதே நூற்றாண்டினிலேதான் நாம் மலேயாவிலும், சுமத்திரா,

விலும், சாவகத்திலும் நமது ஆட்சியை நிலை நாட்டினோம். கி. பி. பதினைன்காம் நூற்றாண்டுவரை நாம் இந்துமாக் கடலில் ஆட்சி நடத்தி வந்தோம்; பின் அவ் வாட்சி அரேபியரைச் சேர்ந்தது.

"இந்தியர் கடலாட்சி நடாத்திய காலத்திலே கடல் வாணிபத்தில் அனைவருக்கும் சம உரிமை இருந்தது. கடற் கொள்ளைக்காரர்கள் நசுக்கப் பட்டார்கள்; கடல் வழி எல்லாருக்கும் பொதுவாக இருந்தது. நாம் தனியுரிமை பாராட்டாமல் தருமத்தையே மதித்தோம். உண்மையில் கடல்வழியிலே தனிஉரிமை கொண்டாட வேண்டுமென்ற கருத்து கி. பி. 1500-ல் போர்ச்சுக்கிசியர் தனி உரிமை கொண்டாடும்வரை ஒருவருக்கும் உண்டாகவில்லை. அதுவரை இந்தியரும் அரேபியரும் பிறரும் கடல்களை உலகப் பொதுவழியாகவே பயன்படுத்தி வந்தார்கள்.

"போர்ச்சுக்கிசியர் கடல் வழியில் தனி யுரிமை கொண்டாடத் தொடங்கியதைக் கள்ளிக்கோட்டைச் சாமொரின் கடுமையாக எதிர்த்தார். மூன்று கடற் போர்கள் நடைபெற்றன; அவைகளில் சாமொரின் தோற்கடிக்கப் பட்டார்; அதனால் கடலாட்சி போர்ச்சுக்கிசியரை அடைந்தது. இது பதினாறும் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆம், பிளாசிப் போர் முதலிய தரைச் சண்டைகளைக் காட்டிலும் கி. பி. 1503, 1509 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற கடற்போர்களே பின்னால் நான்கு நூற்றாண்டுகளுக்கு இந்தியாவின் தலைவிதியைத் தீர்மானிக்கும் காரணங்களாயின என நாவாய் அதிகாரிகள் கருதுகிறார்கள்.

"சிவாசி மன்னவர் காலத்தில் அவருடைய கடற்படைக்கும் மொகலாயர் கடற்படைக்கும் போர்கள் நிகழ்ந்தன. ஆதலால் நாம் கடல் வாழ்க்கைக்குப் புதியவர் அல்லர். நம் நாட்டில் கடற்கரையில் வாழும் இளைஞரும் கிழவரும் மிகத் துணிச்சலுடன் கடலலைகளின் மேல் மிதந்து செல்வதைக் காண்பார் அனைவரும் நம் நாட்டுக் குழந்தைகள் ஆங்கிலக் குழந்தைகளுக்கு ஒரு சிறிதும் பிற்பட்டவர் அல்லர் என்பதை நன்றாக அறிவர்; இவர்களை வேறு எந்த நாட்டுக் குழந்தைகளும் மிஞ்சுவது அரிது. இக்காலக் கடற் செலவிலும் பிற கலைகளிலும் நம் குழந்தைகள் மிக நன்றாக முதன்மை பெறுகின்றார்கள் என்பது உலகறிந்த உண்மை. ஆகையால் நம் வீரர் சிதம்பரம் பிள்ளை கண்ட கனவுகள் நம் நாளையில் நனவாகி நிறைவேறுகின்றன.

"நெருங்கிய தொடர்புகொண்டு அதனால் நான் மகிழ்ச்சியும் மதிப்பும் அடைந்த பெரியார்களுள் சிதம்பரம் பிள்ளையும் ஒருவர். இன்று நாம் தொடங்கும் இப் பெரிய காரியத்தை அவர் ஆவி வாழ்த்துவதாக! இந்தக் கப்பல் அவரின் மிகப் புகழ்பெற்ற பெயரைப் பெற்று விளங்கும். அவர் தம் பெரிய கண்களால் இன்பக் கண்ணீர் ததும்ப இப்போது என்னையும் இந்தப் பெருவிழாவையும் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்று நான் அகக் கண்ணால் காண்கின்றேன். ஆர்வீமில் முதலாளிகள், ஆங்கிலக் கப்பற் சங்கத்தார், சட்டப்படி அமைந்துள்ள இந்திய அரசியலார் ஆகிய இவர்களுடைய முழு ஒத்துழைப்புடன் நான் இன்று இந்தத் தூத்துக்குடிக் கொழும்புக் கப்பற் போக்குவரவினைத் தொடங்கி வைக்கிறேன். அன்று இந்த ஆர்வி முதலாளிகளும் இந்த ஆங்கிலக் கப்பற்சங்கத்தாரும் நம் சிதம்பரம்

பிள்ளையைத் தமது கொடிய பகைவரென்று கருதினார்கள்; அரசத் துரோகக் குற்றத்தைச் சார்த்தி அவருக்கு இரண்டு ஆயுள் தண்டனை விதிக்கும்படி பின்னே என்பவரைக் கொண்டுவந்தார்கள். மிகக் கடுஞ் சினத்துடனும் வெறுப்புடனும் இந்தியா முழுமையும் அத்தீர்ப்புப் படிக்கப்பட்டது. அத்தண்டனையை உயர் நீதிமன்றம் ஆறுண்டுகளாகக் குறைத்தது; இது நடைபெற்ற ஒழுங்கற்ற கொடுமைக்கு ஓரளவு தணிப்பாகும். தூத்துக்குடி மக்களை வந்தேமாதரம் என்று அவர் சொல்லச்சொன்னார்; சுப்பிரமணிய சிவா பேசிய கூட்டங்களில் அவர் இருந்தார்; இந்தியா தன்னாட்சி நாடாக வேண்டும் என்று சிவா சொன்னதை அவர் ஆதரித்தார் என்பனவே அவர் செய்ததாகக் கூறப்பட்ட குற்றங்கள். இது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சி. சிதம்பரனாரும் சிவாவும் ஆறுண்டுகள் சிறைத்துன்பம் உழந்து விடுதலையாகி வந்தனர். அக்காலம் இந்திய மந்திரியாக இருந்த மார்லேப்பிரபு இந்தப் பின்னே உயர் நீதிபதியாக வேண்டுமென்று இந்தியாவிலிருந்து வந்த ஆதரவுரைக்கு இசைய மறுத்துவிட்டார்; மேலும் தமது நினைவிலிருந்து அவர் பின்னேயைப்பற்றிப் பல உண்மைக் குறிப்புகளை எழுதி வைத்திருக்கிறார். அதனால் பின்னே உயர்வடைவது முடியாதாயிற்று.

"சக்கரம் முழுதும் சுற்றியாய் விட்டது. எந்த விடுதலைக்காகச் சிதம்பரம் பிள்ளையும் சுப்பிரமணிய சிவாவும் சிறைசென்று துன்புற்றார்களோ அந்த விடுதலை இன்று நமக்குக் கிடைத்து விட்டது. அந்த ஆர்வி குடும்பமே இன்று என்னை வரவேற்று விருந்தினனாகப் போற்றுகிறது; சிதம்பரம் பிள்ளை பெயரை உடைய

இக்கப்பலுக்காக ஆங்கிலக் கப்பற் சங்கத்தார் தமது கப்பலை இன்றுமுதல் நிறுத்திக்கொண்டார்கள்.

"அன்று தூத்துக்குடிக்குச் செய்த குறைவு இன்று மாறி நிறைவுபெறுகின்றது. மிக்க மகிழ்ச்சியுடன் நான் இந்தக் கப்பற் போக்குவரவினைத் தொடங்கிவைக்கிறேன்; காலஞ்சென்ற உலகப் புகழ்பெற்ற வீரர் சிதம்பரம் பிள்ளையின் பெயரை நமது சுதந்திரக் கொடியைத் தாங்கும் இக்கப்பலுக்கு இடும் பெருமையை நான் பெற்றேன். இந்தியா முழுவதும் ஒன்றே, இந்தியத் தாய் பெறும்புகழ் இந்திய மக்கள் அனைவருக்கும் உரிமையானதே. இருந்தாலும் இந்தியாவின் கப்பல் வாணிபத்தை மறுபடி தொடங்கவேண்டுமென்ற எண்ணம் முதன்மையாக இங்கேதான் தோன்றிற்று: அதனைத் தோற்றுவித்து உருவாக்கத் தமது தோழர் சுப்பிரமணிய சிவாவுடன் சிதம்பரம்பிள்ளை அரும்பாடுபட்டார் என்ற பெருமை தென்னாட்டிற்கே உரிமையானது. பழைய பகைமை ஒழிவதாக; விடுதலையடைந்த இந்தியா விண்ணுயர் புகழ் பெறுவதாக. இந்தக் கப்பலின் தலைவரையும், கப்பலில் உள்ள பிரயாணிகளையும், இக்கப்பற்சங்க ஆட்சியாளரையும் நான் மனமார வாழ்த்துகின்றேன்."

தன்னாட்சி பெற்ற இந்தியாவின் முதல் முதன்மந்திரி பண்டித சவகர்லால்நேரு, இந்தியச் சட்டசபைத் தலைவர் மவ்லாங்கர், இந்திய நிதிமந்திரியாக இருந்த சண்முகம் செட்டியார் முதலிய பல பெரியார் இவ்விழாவுக்கு வாழ்த்து அனுப்பினார்கள். சென்னைமாகாண முதன் மந்திரி ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் தமது துணை மந்திரிமார் பலருடன் வந்திருந்து இவ்விழாவை நடத்தி மகிழ்ந்தார். வீரர் சிதம்பரனார் திருவுருவப் படத்தையும், இவர் பெயர்பெற்ற கப்பலின் படத்தையும் எல்லா

நாட்டாள்களும் பதித்து இத்திருவிழாச் சிறப்புகளை விவரமாக வெளியிட்டதோடு தலையங்கங்களும் எழுதிப் போற்றின. இந்தியா வாழ்வடையவேண்டும் என்ற ஒரே நோக்குடன் கப்பற்சங்கம் தொடங்கியதோடு நில்லாமல் இரண்டு கப்பல்களையும் வாங்கிவந்து ஓட்டிய பெரும்புகழ்ச் சிதம்பரனார், சாகும்போதுகூட "அண்மையில் இரண்டாவது உலகப் பெரும்போர் வந்தே தீரும்; அதன் விளைவாக இந்தியத்தாய் முழு விடுதலை பெற்றே தீர்வாள்," என்று வீர முழக்கமிட்டு மறைந்த மெய்ப் புகழ்வீரர் திருப்பெயர் நம்நாட்டு மக்களுக்கும் அடிமைப் பட்டுத் துன்புறும் பிறநாடுகளுக்கும் என்றும் ஓர் வழி காட்டியாக இருந்து நீடூழி வாழ்வதாக!

சிதம்பரனார் கல்லூரி

இங்ஙனமாகச் சிதம்பரனார் பெயர் அமைத்துக் கப்பலை ஓட்டிக் கண் குளிரக்கண்ட தூத்துக்குடிப் பெருந் திருவாளர் அவர் பெயர் பெற்ற கல்லூரி ஒன்றும் அமைக்க முன் வந்தார்கள். பெரும்பொருள் திரட்டப் பெற்றது; திருவாவடுதுறைத் திருமடத்தின் அப் போதைய தலைவர் தாம் துறவறத்தை மேற்கொள்வதன் முன் தூத்துக்குடியில் வாழ்ந்திருந்து சிதம்பரனாரின் சேவைகளை யெல்லாம் நேரிற்கண்டறிந்தவரானதனாலே இக்கல்லூரிக் கட்டிடத்திற்குப் பெரும்பொருள் உதவினார். தூத்துக்குடி நகரத்தின் மேற்கோரத்தில் திருநெல்வேலிக்குப் போகும் சாலைமேல் தென்சிறகில் ஒரு பெரிய கட்டிடம் கட்டப்பெற்று வ. உ. சிதம்பரனார் கல்லூரி என்று பெயர் இடப்பெற்றது. அதில் இன்று மாணவர் பல்லோர் பெருமிதத்துடன் வந்து சேர்ந்து கல்வி பயின்று வருகின்றார்கள்.

இக்கல்லூரியைச் சூழ வளர்ச்சிக்கு எவ்வளவு வேண்டுமானாலும் ஏற்ற இடம் இருக்கின்றது. கலைப் பகுதிகள்யாவும் இக்கல்லூரியில் இடம் பெறுதல் வேண்டும்; அயலூர் மாணவர் தங்குவதற்குப் பெரிய தோர் விடுதி அமைக்கப் பெறுதல் வேண்டும். எல்லா வகையாலும் இக்கல்லூரி வளர்ந்தோங்கித் தமிழ் மாண வருக்குப் பெருநலன் விளைப்பதாக.

சிதம்பரனார் உயர்பள்ளி

"குற்ற ஆய்வு நீதிமன்றங்களிலே வழக்கின் உண்மை இன்னதென நீதிபதி அறிந்து கொள்ளும் வண்ணம் வழக்குரைப்பதில் ஈடும் எடுப்பும் இல்லாதவ ராகவும், பெரும்பேச்சாளராகவும், பெருங்கவியாகவும் இருந்த இவரது வாழ்க்கை வேண்டுமென்று ஆங்கில அரசாங்கத்தாராலே பாழ்படுத்தப்பட்டு இவர் சில காலம் வாடியிருந்தார். மறுபடி வழக்குரைக்கலாம் என்று இவருக்குச் சில பெரியார் முயற்சியினாலே ஆணை கிடைத் தது; உடனே இவர் தமது ஊரை ஒட்டிய கோவிற்பட் டிக்கு வந்து சேர்ந்து எட்டாண்டுகள் (1924—1932) மிகவும் சிறப்புடன் வாழ்ந்திருந்தார். ஆதலின் இவர் பெயரை என்றும் சொல்லும் நிலையமொன்று இவ்வூரில் அமைத்தல் வேண்டும்" என்று பெரியார் சிலர் சிந்தித் தார்கள். அதனை அறிந்த திருநெல்வேலி மாவட்ட நாட்டாண்மைக் கழகத்தினர் தம் ஆட்சியிலிருக்கும் உயர்பள்ளிக்கு இவர் பெயரைச் சூட்டுதல் வேண்டு மென்று முடிவுசெய்து, அங்ஙனமே அதன் பெயரைச் "சிதம்பரம் பிள்ளை நாட்டாண்மை உயர் பள்ளிக்கூடம்" என்று ஆக்கிவிட்டார்கள். இப்பள்ளிக்கூடம் மேலும் மேலும் வளர்ந்தோங்கிவரும் கோவிற்பட்டியில் இருத்

தலினாலே மிகவிரைவில் கல்லூரியாகிப் பெரும் பயன் விளைக்க ஆண்டவன் திருவருள் பாலிப்பானாக.

பெயர்பெற்ற நிலையங்கள்

சிதம்பரம் பிள்ளை பெயரைப்பெற்ற சங்கங்கள் பல தமிழ்நாட்டில் பற்பல இடங்களில் தோன்றித் தொண்டாற்றி வளர்ந்தோங்குகின்றன; நூல்நிலையங்கள் பல எழுந்து மக்களுக்குத் தக்க துணையாகிக் கல்வியிற் சிறந்து மெய்யாகக் கண்ணுடையவராகும்படி செய்கின்றன; நாட்டாள்கள், வாரத்தாள்கள் முதலிய பெற்றுத்தரும் படிப்பகங்கள் பல அன்றன்று உலகச் செய்திகளை அறிவித்து ஊக்குவிக்கின்றன. இந்தியத் தலைவர்கள் தலைநகரமாகிய தில்லிமா நகரத்திலே ஒரு பெரிய வீதிக்கு இவருடைய பெயரை இட்டு வழங்கி வருகின்றார்கள். திருநெல்வேலி நகராட்சிக்கழக வேலை நிலையம் இவருடைய பெயரைப் பெற்று விளங்குகின்றது.

மாயா உடம்பு

வீரர் சிதம்பரம் பிள்ளையின் நினைவாக அவரது உருவச்சிலையொன்று ஆக்கவேண்டும் என்று சென்னை மாவட்டக் காங்கிரசுக் கட்சியினர் முடிவு செய்தார்கள்; சிறிது பணமும் சேர்ந்தது; அதுகொண்டு இவரது முகஉருவச்சிலை அமைக்கப் பெற்றது; அது 1939 திசம்பர்த்திங்கள் இருபத்தோராம் நாள் இராயப் பேட்டைக் காங்கிரசு மண்டபத்தில் திருச்சிராப்பள்ளித் தொண்டரும் காங்கிரசு ஆட்சியிற் சென்னைநாட்டு மந்திரியுமாகிய டாக்டர் இராசனால் திறந்துவைக்கப் பெற்றது. அப்போது இராசன் பேசிய பேச்சின் சுருக்கம் பின்வருவது:

"சிதம்பரம் பிள்ளை மாசற்ற தமிழ் மகன். ஆண்மைத் தெய்வமும் ஆற்றற் கடவுளும் சேர்ந்து ஓர் திருவுருவம் எடுத்து வந்தால் அது சிதம்பரம் பிள்ளையைப் போலவே காணப்பெறும். அவர் தூத்துக்குடியிலும் திருநெல்வேலியிலும் செய்த புரட்சியின்போது நான் இங்கிலாந்தில் இருந்தேன். அவர் செய்த புரட்சியைச் செய்தித்தாள்களிலே பார்த்தவுடன் என் உள்ளம் கிளர்ந்தெழுந்து என்னையும் ஒரு புரட்சிக்காரனாக ஆக்கிற்று. அதிலிருந்து நான் அரசியற் புரட்சிகளில் ஈடுபட்டு நம் தாயின் திருத்தாள்களிலுள்ள அடிமை விலங்கினை அகற்றி விடுதலைக் கொடியைப் பறக்க விடவேண்டும் என்று என்னால் இயன்றவரை தொண்டாற்றத் தொடங்கினேன். ஆகையால் என்னுடைய முதல் அரசியல் ஆசிரியர் வீரர் சிதம்பரம் பிள்ளையவர்களே என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். நாம் இப்போது நடத்திச் செல்லும் விடுதலைப் போருக்கு நம் நாட்டிலே, சிறப்பாகத் தமிழ்நாட்டிலே, தாயின்மணிக் கொடியை நாம் அனைவரும் கண்டு பணிந்து ஊக்கத்துடன் தொண்டாற்றும்படி ஏற்றி வைத்த முதற் பெருமை சிதம்பரனாரையேசேரும்."

சிதம்பரனாரது பெரிய திருவுருவச்சிலை தூத்துக்குடிக் கடற்கரையிலே இவர் நின்று வீரம் பேசிய இடத்திலேயே அமைக்கப்பெற்று விளங்குதல் இன்றியமையாதது. இவரின் திருப்பெயரால் அமைந்துள்ள தூத்துக்குடிக் கல்லூரியிலும், கோவிற்பட்டி உயர்பள்ளியிலும் இவருடைய திருவுருவச்சிலைகளை அமைத்துக் காணும் மாணவர் உள்ளத்தே நாட்டன்பும் உண்மையான தொண்டில் ஈடுபாடும் வீரமும் தோற்றுவிக்கும்படி செய்தலும் இன்றியமையாததே.

மண்ணுடம்பு மாய்ந்தாலும் மாயாமல் இருக்கும் படி புகழ்மிக்க பெரியாருக்கு உருவச்சிலைகள் நாட்டப் பெறுகின்றன. உருவச்சிலைகள்கூட ஒரு காலத்தில் அழிந்துபோம்; என்றும் அழியாத உடம்புபுகழுடம்பே; புகழ்கொண்டு கவிஞர்கள் செய்யும் நூல்களும் என்றும் அழியாத தன்மையின. தொல்காப்பியனாரது மண்ணுடம்பு மறைந்து பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்தும் அவர் தம் அறிவுப்புகழால் ஆக்கிய தொல்காப்பியம் என்ற நூல் இன்னும் அழியாது நிற்கின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றிய சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்கள் என்றும் அழியாது திகழ்வன. திருவள்ளுவ நாயனார் யாத்தருளிய திருக்குறள் உலகப் பொதுமறையாகி உலகமெல்லாம் வாழ்வடைவ தற்கு ஏற்ற கருவியாக விளங்குகின்றது. நமது வீரர் சிதம்பரம் பிள்ளை தம்முடைய புலமைப் பொலிவினால் தோற்றுவித்த நூல்கள் என்றும் அழியாது வாழும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

தொல்காப்பியத்தை இளம்பூரணர் உரையுடனும், திருக்குறள் அறப்பாலை மணக்குடவர் உரையுடனும் இவர் பதித்தார்: மனம்போல வாழ்வு, அகமேபுறம், வலிமைக்கு மார்க்கம் என்ற நூல்களை ஆங்கிலத்தி லிருந்து மொழிபெயர்த்தார்; இன்னிலை என்ற அரிய நூலுக்கும் திருக்குறளுக்கும் விரிவுரை வகுத்தார்; மெய்யறிவு, மெய்யறம் முதலிய சிறந்த நூல்களைப் பாடினார். இவை தமிழுள்ளவரை அழியாதன.

> "கலைமகள் வாழ்க்கை முகத்தது எனினும்
> மலரவன் வண்தமிழோர்க்கு ஒவ்வான்—மலரவன்செய்
> வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
> மற்றிவர் செய்யும் உடம்பு."

இந்தியத் தாய்க்குத் திருக்கோவில்

சிதம்பரனாரால் ஆதரிக்கப்பெற்ற பெரியார் சுப்பிரமணிய சிவா; அவர் விடுதலையான பின்பு இந்தியத் தாய்க்குத் திருக்கோவில் ஒன்று அமைக்கவேண்டுமென்று தீர்மானித்து அப்பணிக்கு வேண்டுவனவெல்லாம் செய்து கொண்டிருந்தார். அக்கோவிலில் நடுநாயகமாக இந்தியத்தாயின் திருவுருவத்தை வைத்து அம்மையைச் சூழ நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட அடியார்கள் திருவுருவங்களை அமைக்க அவர் எண்ணினார். அம்மைக்கு மிக அருகே வலதுபுறத்தில் முதன்மையாக வைக்க வேண்டுமென்று அவர் எண்ணி முடிவு செய்திருந்த திருவுருவம் வீரர் சிதம்பரம் பிள்ளையுடைய திருவுருவமே!

வாழ்க சிதம்பரனார் பெறற்கரும் பெரும்புகழ்!

கo. பிற்சேர்ப்பு

சிதம்பரம் பிள்ளை தொடங்கிய சுதேசிக் கம்பெனி (Swadesi Steam Navigation Company Ltd.)*யின் 24—9—1907-ல் அச்சிட்ட விளம்பரத்திஞல் பின்வரும் குறிப்புக்கள் புலஞகின்றன. இந்தக் கம்பெனி 1882-ம் ஆண்டு இந்தியன் கம்பெனிச் சட்டப்படி 1906 அக்டோபர் 16-ந் தேதியில் ப்திவு செய்யப்பெற்றது. இந்தக் கம்பெனியின் மூலப்பொருள் ரூ. 10,00,000. இது பங்கு ஒன்றுக்கு ரூ. 25/- கொண்ட 40,000 பங்குகளாக இந்தியா, இலங்கை முதலிய ஆசியாக் கண்டத்து நாட்டினரிடமிருந்து சேர்க்கப்படும். மூலப்பொருள் வேண்டும் போது மிகுதிப் படுத்தப்படும். பங்காளிகள் அவரவர்கள் பங்குத் தொகை மட்டில் பொறுப்பாளிகள். தலைவர் பாலவநத்தம் குறுநில மன்னர் பொ. பாண்டித் துரைச் சாமித் தேவர், தூத்துக்குடி, சேலம், திருநெல்வேலிப் பாலம், திருநெல்வேலி, பாளையங்கோட்டை, கொழும்பு, வைத்தீசுவரன்கோவில், சீர்காழி, குடகு சோமவார்ப் பேட்டை, கன்னம்பாடி, திண்டுக்கல், இராமநாதபுரம், கூடலூர், சென்னப்பட்டணம் ஆகிய ஊர்களிலிருந்து முப்பத்தொருவர் ஆட்சியாளர்; செயலாளர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர்; துணைச் செயலாளரே சிதம்பரம் பிள்ளை.*

இக்கம்பெனி ஏற்படுத்தியதின் முதன்மையான நோக்கங்கள்

"தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் மற்றும் சுதேசிக் கப்பல்கள் நடைபெறுத துறைமுகங்களுக்கும் பயணத்தையும் வியாபாரத்தையும் வசதிப்படுத்தும் செலவைக் குறைப்பது; தக்க புகைக்கப்பல்கள் நடை

பெறும்படி செய்தல்; இந்தியர்களையும் இலங்கையர்களையும் மற்றும் ஆசியாக்கண்டத்துச் சாதியார்களையும் கப்பல் நடாத்தும் தொழிலில் பழக்குவித்து அதன் மூலம் வரும் ஊதியத்தை அடையும்படி செய்தல்; இந்தியர்களுக்கும் இலங்கையர்களுக்கும் மற்றும் ஆசியாக்கண்டத்துச் சாதியார்களுக்கும் கப்பல் நடாத்தும் தொழிலையும் கப்பல் கட்டும் தொழிலையும் செய்து காட்டிக் கற்பித்தல்; இந்திய இலங்கை மாணவருக்கும் மற்றும் ஆசியாக்கண்டத்து மாணவருக்கும் கப்பலோட்டும் தொழிலையும் கப்பல் கட்டும் தொழிலையும் முறைப்படி கற்பிக்கும் கலாசாலைகள் ஏற்படுத்தல்; கப்பல் நடாத்தும் தொழிலிலும் வியாபார முறையிலும் இந்தியர்கள் இலங்கையர்கள் முதலிய ஆசியாக் கண்டத்தார்களுக்குள் ஒருமைப்பாட்டை உண்டு பண்ணி ஒற்றுமையாக உழைக்கச் செய்தல்; பற்பல வியாபார நிலையங்களிலுள்ள வியாபாரங்களுக்கு அடுத்த கொள்வன கொடுப்பன தெரிந்துகொள்வதற்காக இந்தியா இலங்கை முதலிய ஆசியாக்கண்ட நாட்டினர்களைச் செயலாளராக நியமித்தல்; புகைக்கப்பல்கள், புகைப்படகுகள், படகுகள் முதலியன அமைப்பதற்கும் அவைகளைச் செப்பனிடுவதற்கும் சுத்தப்படுத்துவதற்கும் துறைகளேற்படுத்தல்; கம்பெனியார் தீர்மானிக்கும் நாட்டுக் கைத்தொழில்களையும் வியாபாரங்களையும் நடத்துதல் முதலியனவாம்.

கழக வெளியீடு—௫௱௧

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, :: MADRAS-1.

Head Office:

24, EAST CAR STREET, :: THIRUNELVELI

விலை ரூ. 1-0.

அப்பர் அச்சகம், சென்னை-1.